நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

# சரிநிகர்


සරිනිහර්

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 186 டிசெ. 09 - டிசெ. 22, 1999 விலை ரூபா 10. 00.




வவுனியா:
இடப்பெயர்வின் பின்:



## தமிரழசுக் கட்சி 50 ஆண்டு நிறைவு



அரசாங்கமே இனப்பிரச்சினையைத் தீர்க்கும்
முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாள்
ஈ.பி.ஆர்.எல்.எப்



நம்பி ஏமாற நாங்கள் தயாரில்லை!
முன்னாள் பா.உ. சுரேஷ் பிரேமச்சந்திரன்
ஈ.பி.ஆர்.எல்.எப்


நன்றி - நூலகத்திட்டம்



**யாழ். உண்ணாவிரதம்**

# பதில் தான் என்ன?

கடந்த டிசம்பர் ஐந்தாம் திகதியன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் சங்கம், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்திற்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த உண்ணாவிரதப் போராட்டம் குறித்துக் காணாமல் போனோர் சங்கத் தலைவர் பரமானந்தம் செல்வராஜா அவர்களிடம் உண்ணாவிரதப் போராட்டத்தின் நோக்கம் பற்றிக் கேட்ட போது அவர் தெரிவித்த கருத்துக்கள் இவை:





பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னர் யாழ்.குடாநாட்டின் மேல் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தின் பின்னர் 637 பேர் படையினரால் கைது செய்யப்பட்ட பின் காணாமல் போயுள்ளனர். இவர்களைப் பற்றி இதுவரை எதுவித தகவலையும் அறிந்து கொள்ள முடியாமல் உள்ளது. இவர்களில் 365 பேரைத் தேடிக் கண்டு பிடிக்க முடியாமல் உள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். ஏனையோரைத் தாம் கைது செய்யவில்லை எனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால், செம்மணியில் மீட்கப்பட்டு அடையாளம் காணப்பட்ட எலும்புக் கூட்டுக்கு உரியவர்களையும் தங்களால் கண்டு பிடிக்க முடியவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது தான்.

இதே வேளை, தாம் கைது செய்யவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தவர்களை, படையினர் கைது செய்ததற்கான ஆதாரங்கள் எம்மிடம் உண்டு. கைது செய்த இராணுவத்தினரின் பெயர் விபரங்கள், கைது செய்த முகாம் போன்ற விபரங்கள் எம்மிடம் உள்ளன. இவர்களைக் கைது செய்ததைக் கண்ட சாட்சியங்கள் பல உள்ளன.

பலாலியிலும், யாழ்ப்பாணப் பொலீஸ் நிலையத்திலும் சி. ஐ. டியினரின் விசாரணைக்குட்படுத்தப்பட்ட காணாமல் போனோரின் பெற்றோர்களுக்கு இதுவரை எதுவித பதிலும் அளிக்கப்படவில்லை. நாங்கள் இப்போது, எமக்கு அனுப்பப்பட்ட கடிதங்களைத் திருப்பி அனுப்பவுள்ளோம். இதற்குக் கிடைக்கும் பதிலையடுத்து, எமது அடுத்த கட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானிக்கவுள்ளோம். நாங்கள் அஹிம்சை வழியில் இன்று எமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். எமது போராட்டத்திற்குத் தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம்.

நாங்கள், இதுவரை ஆறுக்கு மேற்பட்ட உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தியுள்ளோம். எமது சங்கத்தில், 25 இளம் பெண்கள் தங்கள் புதல்வரை இழந்து தவிக்கின்றார்கள். இவர்களின் கணவன்மாரும் கைது செய்யப்பட்டுக் காணாமற் போயுள்ளனர். ஜெயலலிதா என்ற மறவன் புலவுவைச் சேர்ந்த யுவதியும் காணாமற் போயுள்ளார்.

அரசாங்கம், கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறி அனுப்பிய கடிதங்களில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்து, விடுதலை செய்யப்பட்டோரையும் தம்மால் தேடிக் கண்டு பிடிக்க முடியவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சு கடிதம் அனுப்பியிருப்பது தான். எமது சங்க உறுப்பினர்கள் சிலர் விரக்தி காரணமாகத் தற்கொலை செய்துள்ளனர். இன்னும் சிலர், தமது காணாமல் போன பிள்ளைகளுக்கு மரணச் சடங்கு கொண்டாடி விட்டனர். பாதுகாப்பு அமைச்சு அனுப்பிய கடிதங்களில் 112 கடிதங்கள் இனம் காண முடியாத நிலையில் உள்ளன. இவற்றைத் திருப்பி அனுப்புவதா? அல்லது தபால் பெட்டியில் போடுவதா? என யோசித்துக் கொண்டிருக்கின்றோம்.

உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட இரு பெண்மணிகள் இவ்வாறு சொல்கிறார்கள்: ஆவரங்காலைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் இவ்வாறு சொல்கிறார், எனது மூத்த மகன் வசந்தனை 26. 07. 1996 அன்று படையினர் கைது செய்தனர். இதுவரை எனது மகனைப் பற்றி எதுவித தகவலும் எனக்குக் கிடைக்கவில்லை. எனக்கு ஆறு பிள்ளைகள். எனது கணவர் தச்சுத் தொழில் செய்பவர். கைது செய்யப்படும்போது எனது மகனுக்குப் 18 வயது. இப்போது எனது கணவரும் தொழில் இன்றிக் கஷ்ரப்படுகிறார். மகன் இருந்திருந்தால் ஏதாவது உழைத்துத் தருவார். என்ன நடந்தது என்று கூட எவரும் சொல்கிறார்களில்லையே என்கிறார் அவர்.

புத்தூர் மேற்கைச் சேர்ந்த லதாணி என்ற 33 வயதுப் பெண்மணி இவ்வாறு சொல்கிறார், எனது கணவரை 17. 09. 1996 அன்று கைது செய்தார்கள். எனது கணவர் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என்று தெரியாது. எனக்கு 07 வயதிலும், 08 வயதிலுமாக இரு குழந்தைகள் உள்ளனர். நான் சிறு குழந்தைகளுடன், சீவியத்துக்கே மிகவும் கஷ்ரப்படுகின்றேன். ஆனால் அதுவல்ல பிரச்சினை. உனது குழந்தைகள் அப்பா எங்கே என்று கேட்கும் போது நான் என்ன பதில் சொல்வேன்?

– எழுவான் –

# சுனந்தவுக்கு விழுந்த அடி!

ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கத்தின் அலுவலகத்தில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலைக் கண்காணிப்பது தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

பத்திரிகையாளர்கள் மற்றும் ஜனநாயக ஆர்வலர்கள் அக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். யுக்திய ஆசிரியர் சுனந்த தேசப்ரியவும் அக்கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார். மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்) அமைப்பைச் சேர்ந்த கலாநிதி சிறீதரனும் அங்கு சென்றிருந்தார். கூட்டம் ஆரம்பிப்பதற்கு சிறிது நேரம் இருந்தது.

இருவரும் உரையாட ஆரம்பித்தனர். உரையாடல் தொடர்பூடக சுதந்திரம் பற்றியதாக இருந்தது. சிறிது நேரத்தில் சுனந்த அவ்விடத்திலிருந்துவெளியே சென்றார். அவசர அவசரமாக அவரைப்பின்தொடர்ந்த சென்ற சிறீதரன் சுனந்தவை தடுத்துநிறுத்தி சுனந்த எதிர்பாராத விதமாக கன்னத்தில் பளார் என ஒரு அறை விட்டார். அதிர்ந்து போனார் சுனந்த. அடித்தது மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சிறீதரன்.

அவர்களுக்குள் நடந்த உரையாடல் என்ன? சிறீதரன் ஏன் சுனந்தவைத் தாக்கினார்

கடந்த வார யுக்கதியவில் அது பற்றி சுனந்த தேசப்பிரிய எழுதியதன் தமிழாக்கத்தைத் தருகிறோம். படியுங்கள்.

O O O

கடந்த வெள்ளிக்கிழமை வாழ்க்கையில் மறக்க முடியாத அறை ஒன்றை வாங்க நேரிட்டது. வயது வந்த பிறகும் குறைந்தது சிறு வயதில் கூட இவ்வாறானதொரு மோசமான அடியை எனது காதும் கன்னமும் வாங்கியதாக நினைவில் இல்லை.

இந்த அறை தொடர்பூடக சுதந்திரத்துடன் தொடர்புடையது. கடந்த வெள்ளிக்கிழமை மாலை "சுதந்திரமானதும் நீதியானதும் தேர்தல் குழு" கூட்டத்திற்கு சமூகமளிக்க நேர்ந்தது. கூட்டம் ஆரம்பிக்க தாமதமாகியதால் வேறு ஒரு காரணத்திற்காக அவ்விடத்திற்கு சமூகமளித்திருந்த தமிழ் புத்திசீவியுடன் உரையாடலை ஆரம்பிக்க நேர்ந்தது. பல காலமாக நான் அவரை அறிவேன். புலிகளால் கொலை செய்யப்படலாம் என்ற பீதியில் அவர் கொழும்பில் வசித்து வருகின்றனர். புலிகள் அமைப்பை பற்றியும், பிரபாகரனின் வன்முறை அரசியல் பற்றியும் விமரிசனம் செய்வது தான் அவரது அடிப்படை நோக்கம்.

நமது உரையாடலின் போது. நான் அரசின் தொடர்பூடகங்கள் இத்தினங்களில் வரையறையின்றி வெளிப்படுத்தும் தமிழர் விரோத இனவாதத்தை பற்றி குறிப்பிட்டேன். இது பற்றி அவரது கருத்தை கேட்டேன். அவர் இவ்வாறு குறிப்பிட்டார்." இன்று தனியார் தொடர்பூடகங்கள் தாம் மிகவும் பயங்கரமானவை. "சண்டே ரைம்ஸ்", மற்றும் "சண்டே லீடர்" என்பனவற்றை பாருங்கள். இங்கிலாந்தில் தனியார் தொடர்பூடகங்கள் தான் இன்று பிரச்சினையாக உள்ளது. பி.பி.சி பற்றியல்ல." என்றார்.

பி.பி.சி பிரித்தானியா அரசாங்கத்திற்கு சொந்தமானதல்ல என்றும், இலங்கையில் இந்நிலைமை முற்றிலும் வேறானது என்று நான் குறிப்பிட்டேன். அதேபோல் இலங்கையில் விமர்சனரீதியான கருத்துக்கள் பல தனியார் ஊடக்கள் மூலமே முன்ழவக்கப்படுகின்றன என்றும் கூறினேன்.

அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அரசின் தொடர்பூடகங்களை பாதுகாத்துக் கொண்டு அரசின் நிர்வாகத்தின் கீழ் இல்லாத தொடர்பூடகங்கள் மிகவும் பயங்கரமானவை என அவர் தெரிவித்தார்.

நீங்கள் கூறுவது மங்கள சமரவீர மற்றும் சந்திரிகாவின் கருத்துக்கு ஒப்பானது என நான் குறிப்பிட்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

" அவர்கள் அப்படி கூறுவார்களாயின் அது தான் சரி"

அதற்கு பின் கதைப்பதற்கு எதுவுமில்லை எனக் கூறி விட்டு நான் அறையிலிருந்து வெளியேறினேன். என்னைத் தொடர்ந்து வந்த அவர் இன்னும் கதைக்க வேண்டியுள்ளது என கூறினார். பேச்சை நிறுத்திக் கொள்ள எனக்கு உரிமையிருக்கின்றது என நான் கூறினேன்.. ஆனால் அவர் முழுப் பலத்தையும் பிரயோகித்து எனது கன்னத்தில் அறைந்தார். சுமார் 12 மணித்தியாலங்களாக காதில் இருந்து தீப்பொறி பறப்பது போன்றிருந்தது.

" சுதந்திரமானதும் நீதியானதும் தேர்தல் குழு" கூட்டத்தில் கலந்து கொள்ளக் கூடிய உளவியல் ரீதியான பலம் இல்லாததால் நான் வீட்டிற்கு சென்று விட்டேன். மாலை 6.30க்கு புறப்பட்ட பஸ் 58 மைல் செல்ல சுமார் 3 மணித்தியாலங்கள் சென்றன.

மூன்று மணித்தியாலங்களாக நான் ஏதும் தவறு செய்தேனா அடி வாங்கும் அளவிற்கு என்பதையே எண்ணிப் பார்த்துக் கொண்டு வந்தேன். அதை விட தமிழ் மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்க செயற்படும் யாழ் பல்கலைக்கழக பேராசிரியரின் கையில் இந்த அடி வாங்குமளவிற்கு நான் என்ன தவறு செய்தேன்.

பல காலம் நன்கறிந்த ஒருவருக்கு, வாழ்க்கையில் பல விபரீதங்களை ஒன்றாக சந்தித்த ஒருவருக்கு, கருத்து முரண்பாடு காரணமாக பல பேர் மத்தியில் மனித உரிமை அலுவலகம் ஒன்றில் வைத்து அறைய முடிவது எங்ஙனம்?

இவ்வாறான குணங்கள், ஆணாதிக்கத்தின், சாதி ஆதிக்கத்தின், வர்க்க ஆதிக்கத்தின் அடையாளங்களையா கோடிட்டு காட்டுகின்றது? இந்த சமூகம் முழுதும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு எதிராக உள்ள வன்முறையையா? இல்லாவிட்டால் தமிழ் மக்களுக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரச வன்முறையின் ஒரு பகுதியையா?

யுக்திய- 19991205

O O O

இப்போது புரிகிறதா? மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள்

சந'திரிகாவின் சமாதானத்துக்கான யுத்தத்தை ஏன் ஆதரிக்கின்றார்கள் என்று.

# சொல்லாத சேதிகள் சில....

புதிதாக ஆரம்பித்த மனித உரிமைகள் அமைப்பு ஒன்று கருத்தரங்கு ஒன்றினை ஒழுங்கு செய்திருந்தது பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்.

அக்கருத்தரங்கில் உரையாற்ற சுயநிர்ணய உரிமை பற்றிய புத்தகம் ஒன்றை எழுதிய பிரித்தானிய ஆய்வாளர் ஒருவரும் வரவிருந்தார்.

அவர் உரையாற்றவிருந்த தலைப்பு: 'இலங்கையில் சமாதான வழிமுறைகளும் சுயநிர்ணய உரிமையும்' என்பது.

கருத்தரங்கிற்குச் சில நாட்களுக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சிலிருந்து கருத்தரங்குஒருங்கமைப்பாளர்களுக்குஒரு தொலைபேசி அழைப்பு.

'ஜனாதிபதித் தேர்தல் நேரம். இக்கருத்தரங்கு பொருத்தமானதல்ல. தயவு செய்து பிற்போட்டு விடுங்கள் என்று 'வினயமான ஒரு வேண்டுகோள்'.

வேண்டுகோள் பாதுகாப்பமைச்சிலிருந்தல்லவா? ஒருங்கமைப்பாளர்கள் என்ன செய்ய முடியும்?

பிற்போட்டு விட்டார்கள் கருத்தரங்கை.

ஜனாதிபதித் தேர்தல் நேரம் சுயநிர்ணய உரிமை பற்றியும் சமாதான வழிமுறை பற்றியும் பேசவே அஞ்சும் அரசாங்கம் தேர்தலில் வென்று இனப்பிரச்சினையைத் தீர்க்கும் என்கிறார்கள் வரதரும் டக்ளஸும்.

கந்தா கடம்பா கார்த்திகேசா கதிரவேலா நம்பவா நாங்கள் இதனை?

000

தேர்தல் நேரத்தில் நெருக்கடியைக் கொடுக்கும் என்பதால் ஒத்தி வைத்த அல்லது வைக்காமலே விட்ட இன்னொரு கதை.

ஓயாத அலைகள் மூன்றில் கைது செய்த 7 படையினரை புலிகள் மாவீரர் தினத்திற்கு முதல் நாள் விடுதலை செய்திருந்தார்கள்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட இவர்கள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

வழமையானஎல்லாக் 'கிரியைகளும்' முடிவடைய பத்திரிகையாளர் மாநாடொன்றை நவ.30ம திகதி ஏற்பாடு செய்திருந்தது பாதுகாப்பமைச்சு.

ஆனால் திடீரென 3வ.30ம் திகதி பாதுகாப்பமைச்சினால் பத்திரிகையாளர் மாநாடு ரத்துச் செய்யப்பட்டது. இப்படையினரைப் பத்திரிகையாளர் சந்திக்க மேற்கொண்ட முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை.

இவர்கள் அனைவரும் அவரவர் வீடுகளுக்கு ஒரு வார விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து அவர்கள் தத்தம் படைப்பிரிவுகளுக்குச் சென்று மீண்டும் இணைந்து கொள்வார்கள் என்றும் ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்ததாகக் கூறப்படுகிறது.

வழமையாக படையினர் புலிகளால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டால் பத்திரிகையாளர்களைச் சந்திக்க அனுமதிப்பது வழக்கம். இவர்கள் மட்டும் ஏன் பத்திரிகையாளர்களைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை.

அவர்கள் வாய் திறப்பதும் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரசாங்கத்திற்கு நெருக்கடியைக் கொடுக்குமோ?

அவ்வாறானால் யுத்த முனையில் நிற்கும் படையினருக்கும் வாய் திறக்க அனுமதி கிடைத்தால் யுத்தம் நடாத்துவதற்கே அரசாங்கத்திற்குநெருக்கடி ஏற்பட்டு விடுமோ?

000

இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்(Sri Lanka Telivision Training Institute) கடந்த ஒக்ரோபரில் தனது 15வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது.

அதையொட்டி ஒரு கருத்தரங்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் தலைப்பு 'தேசிய இலத்திரனியல் தொடர்பூடக பயிற்சிக் கோட்பாடும் அதில் இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் பங்கும்'

இரண்டு நாட்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கருத்தரங்கில் எட்டு வெவ்வேறு தலைப்புகளில் எண்மர் உரையாற்றினர். உரையாற்றியவர்களில் ஒருவர் கூட தமிழரோ முஸ்லிமோ அல்லர்.

பங்குபற்ற அழைக்கப்பட்ட நாற்பது பேரில் ஒருவர் கூட தமிழ் மொழி பேசுபவர்களில் இருந்து அழைக்கப்படவில்லை.

ஏன், இந்நிறுவனம் செயற்படத் தொடங்கிய கடந்த 15 வருடங்களில் இந்நிறுவனத்தால் ஒரு தமிழரோ முஸ்லிமோ கூட பயிற்சிக்கு தெரியப்படவில்லை.

'ஊடகப் பயிற்சியில் கலாசாரப் பரிமாணங்கள்' என்ற தலைப்பில் பேரா.ஜே.பி.திசாநாயக்கா உரையாற்றினார். இனவாத சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்ட ஒரு புத்திஜீவி என்பார்கள் இவரை. எப்படியிருக்கிறது இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு?

நன்றி - நூலகத்திட்டம்



# வவுனியா: இடப்பெயர்வின் பின்:



வவுனியாவில் இடம்பெற்ற அண்மைய இடப்பெயர்வுகள் காரணமாக பொதுமக்கள் பலரும், பொதுவாகவே பெரும் சிரமங்கள், அசௌகரியங்கள், கஸ்டங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

சுமார் 15 [illegible] குடும்பங்களைச் சேர்ந்த அறுபதாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இடம்பெயர்ந்ததாக அரச அதிகாரிகளின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் 10 ஆயிரம் குடும்பங்கள் வரையில் தமது சொந்த இடங்களுக்கு இப்போது திரும்பி வந்து விட்டதாகவும் அந்தப் புள்ளி விபரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 2 ஆம் திகதி வன்னிப் பகுதிகளில், இராணுவத்திற்கு எதிராக விடுதலைப் புலிகள் என்னெப்போதும் இல்லாத வகையில் உரமான முறையில் மிகுந்த ஆக்ரோஷத்துடன் மேற்கொண்ட ஓயாத அலைகள் 3 தாக்குதல் நடவடிக்கையின் விளைவாக வரலாற்றில் இல்லாத வகையில் இடம்பெற்ற ஆர்ட்டிலறி ஷெல் தாக்குதல்களும், இந்தத் தாக்குதல்களில் பொதுமக்கள் இடையில் சிக்கி பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக விடுதலைப் புலிகள், விடுத்த எச்சரிக்கையுமே, வவுனியா மக்களை இடம்பெயர்ந்து செல்ல வைத்தது.

இடம்பெயர்ந்து சென்ற வவுனியா நகரப்பகுதியைச் சேர்ந்த மக்கள், தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி வரலாம் என்று விடுதலைப் புலிகள் விடுத்த அறிவித்தலை அடுத்து, தமது வீடுகளுக்குத் திரும்பியிருக்கின்றார்கள். இருப்பினும், தொடர்ந்து கொண்டிருக்கின்ற ஓயாத அலைகள் தாக்குதல் நடவடிக்கை எந்த வேளையிலும், எந்த முனையிலும் வெடிக்கலாம் என்றும் இந்தத் தாக்குதல்களில் பொதுமக்கள் இடையில் சிக்கிவிடக்கூடாது என்பதற்காக, இராணுவ முகாம்கள், இராணுவ நிலைகள், இராணுவ காவலரண்கள், இராணுவ ஆர்ட்டிலறி நிலைகள் என்பவற்றிற்கு அருகில் வசிக்கின்ற பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சிரமங்களைப் பார்க்காமல் விலகிச் செல்ல வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாகக் கோரி வருவதானது, வவுனியா பகுதி மக்களிடையே பெரும் மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதேவேளையில் மோதல்கள், ஆர்ட்டிலறி ஷெல் தாக்குதல்கள் இடம்பெறுகின்ற பிரதேசங்கள், இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள பகுதிகள் ஆகிய இடங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பலர், பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றிருக்கின்றார்கள். பலர் அப்பகுதிகளிலேயே பொது இடங்களிலும், நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் தஞ்சம் புகுந்திருக்கின்றார்கள்.

வேறு பலர், தாக்குதல்கள் இடம்பெறக் கூடிய இடங்கள், இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கின்ற இடங்கள் என்பவற்றில் இருந்து வேறிடங்களுக்குச் செல்வதற்கு முயன்ற போதிலும், அது சாத்தியமாகாத நிலையில் உயிர்களைக் கையில் பிடித்தபடி இருக்கின்றார்கள்.

வவுனியா கல்மடு ப்குதியில் உள்ள பூம்புகார் கிராமத்தின் பாடசாலையில் அப்பகுதியைச் சேர்ந்த கிராமவாசிகளும், அயல் கிராமமாகிய கல்மடு குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்தவர்களுமாக 200 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 1000 பேர் அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பான வேறு வெளியிடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றார்கள்.

பூம்புகாரில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்கான பாதை கல்மடு கிராமத்தின் ஊடாகவே செல்கின்றது. ஆனால், கல்மடு கிராமத்தவர்கள் முழுப்பேரும் அங்கிருந்து வேறிடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று விட்டார்கள். இந்தப் பாதையின் ஊடாகப் பூம்புகார் பாடசாலையிலும், அயல் வீடுகளிலும் தஞ்சம் புகுந்திருக்கும் மக்கள் வெளியிடங்களுக்குச் செல்வதற்கான அனுமதியை இராணுவத்தினர் மறுத்துள்ளதனால், அவர்கள் வெளியிடங்களுக்குச் செல்ல முடியாத நிலையிலேயே இருக்கின்றார்கள்.

கல்மடு கிராமத்தின் பின்புறமாகக் கிடாச்சூரிக்குச் செல்லக் கூடிய ஒரேயொரு பாதையின் ஊடாகவே இந்த மக்கள் வெளியில் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதித்திருக்கின்றார்கள்.

எனினும், கல்மடு குளத்தின் தண்ணீர் மேவிப்பாய்கின்ற, 13 அடி உயரமும் சுமார் 30 மீற்றர் தூரமும் கொண்ட ஒடுங்கிய கலிங்கு கட்டின் மீதும் நடந்து செல்ல வேண்டியிருக்கின்றது. இப்போது இக்குளத்தில் தண்ணீர் மேவிப்பாயாவிட்டாலும், குளத்தின் நீர் மட்டம் உயர்ந்திருக்கின்றது. இந்தச் சீமெந்து கட்டானது, பாசி படிந்து, நடப்பதற்குக் கஷ்டமானதாக இருப்பதாகவே அதன் ஊடாக வந்தவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இதில் துணிவான ஆண்கள் மாத்திரமே நடந்து செல்ல முடியும் என்றும், பெண்கள், வயோதிபர்கள், குழந்தைகள் செல்வது இயலாத காரியம் என்றும், கிராமத்திற்கே உரிய மாட்டு வண்டில் உட்பட எந்த வானமும் செல்வதற்குரிய பாதை இல்லாததனால் இங்குள்ள மக்கள் சிறைப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருக்கின்றார்கள் என்றும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றார்கள்.

மிகுந்த கஷ்டத்திற்கு மத்தியில வவுனியாவிற்கு வந்து சேர்ந்த கல்மடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவரான பொன்னம்பலம் என்பவர் பூம்புகார் பகுதி மக்களின் நிலைமைகள் குறித்தும், சாஸ்திரி கூழாங்குளம் தொடக்கம், கிடாச்சூரி, தவசிகுளம், கோதண்டர் நொச்சிக்குளம் உட்பட்ட பலபகுதிகளில் மக்கள் இடம்பெயர்ந்த நிலையிலும், இராணுவ நடவடிக்கைகள் மீகுந்த அப்பகுதிகளைசி சேர்ந்த பல கிராமங்களில் இருந்து மக்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையிலும் இருப்பதாகவும், அவர்களுக்கு வைத்தியம், அத்தியாவசிய உணவு விநியோகம் போன்றவை இல்லாமல் கஷ்டமடைந்துள்ளதாகவும் அரச அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்திருக்கின்றார்.

இதனையடுத்து, கிடாச்சூரி பகுதிக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் வழித்துணையோடு ஒரேயொரு தடவை உணவு,



மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப்பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அதன்பின்னர் அப்பகுதிக்கு எதுவிதமான நிவாரண உணவுப்பொருட்களும் அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும், பூம்புகார் கிராமப்பகுதிக்கு எந்தவித்மான உணவு நிவாரணமும் அனுப்பி வைக்கப்படவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளையில், கடந்த 3 ஆம் திகதி, வியாழக்கிழமை பூம்புகார் பகுதிக்கு சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரின் வழித்துணையோடு, எம்.எஸ்.எவ் வைத்திய தொண்டர் நிறுவனத்தைச் சேர்ந்த பெண்நோய் வைத்தியர் ஒருவரும், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியான டாக்டர்.எஸ்.சத்தியலிங்கத்தின் தலைமையிலான எம்.ஓ.எச் பிரிவின் வைத்தியர்கள், பொது சுகாதார வைத்திய பரிசோதகர்கள் ஆகியோர் அடங்கிய குழுவினரும், அப்பகுதியின் நிலைமைகளைப் பார்வையிடுவதற்காக வவுனியா போரூட் நிறுவனத்தின் வெளிக்களப் பிரதிநிதியும் மாத்திரமே, இதுவரையில் சென்றிருக்கின்றார்கள்.

அன்று பூம்புகார் பகுதிக்குச் சென்ற இவர்கள், இராணுவத்தின் விசேட அனுமதியைப் பெற்று கல்மடு ஊடான வீதி வழியாகவே சென்று திரும்பியிருக்கின்றார்கள். வைத்திய குழுவினர் அங்கிருந்த இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான வைத்திய சேவையை வழங்க, சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர், பாய்கள், பிளாஸ்டிக் தண்ணீர் கேன்கள், வாளிகள் என்பற்றை வழங்கினார்கள்.

பூம்புகார் உ[illegible]ட, பொதுமக்கள் வசிக்கின்ற பம்[illegible]டு, கிடாச்சூரி, ஈச்சங்குளம், சா[illegible] கூழாங்குளம், புதுக்குளம், போ[illegible]மங்களும், அதனைச் [illegible]ங்களும், அப்பகுதிகளை தற்போது நிலவுகின்ற இராணுவச் சூழ்நிலை காரணமாக பொதுமக்கள் வசிக்கக் கூடிய நிலையில் இல்லாதிருப்பதாக தொண்டர் நிறுவன அதிகாரிகள் கூறுகின்றார்கள். இந்தப் பகுதிகளைச் சூழவும் கேட்கின்ற தொடர்ச்சியான ஆர்ட்டிலறி பீரங்கிகளின் வெடியோசைகளும், வானத்தில் ஏவப்பட்டதன் பின்னர் ஏவப்பட்ட எறிகணைகள் மீண்டும் ஒரு தடவை அந்தப் பிரதேசமே அதிரும் வகையில் வெடிப்பதனால் ஏற்படுகின்ற வெடியோசைகளும், இப்பகுதி மக்களைத் தொடர்ச்சியான பதற்றத்திற்கும், பீதிக்கும் உள்ளாக்கி இருக்கின்றது.

இந்தச் சத்தங்களினால், மனம்க கலங்கிச் சோர்ந்துள்ள இப்பகுதியைச் சேர்ந்த வயோதிபர்கள், குழந்தைகள் பெண்கள் உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். கர்ப்பிணித் தாய்மார்கள் பதற்றமடைந்து, பயத்தினால், மனம் கலங்கி அதிர்ச்சியடைந்ததனால், பலருக்கு கருக்கலைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 15 கர்ப்பிணிகள் வரையில் இவ்வாறான பாதிப்புகளுக்கு உள்ளாகி, பூம்புகார், பம்பைமடு, கிடாச்சூரி, ஈச்சங்குளம், சாஸ்திரி கூழாங்குளம், புதுக்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் அப்பகுதிகளுக்கு நடமாடும் வைத்திய சிகிச்சை அளிப்பதற்காகச் சென்ற அரசாங்க, எம்.எஸ்.எவ் வைத்தியர்களிடம் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோல, பயம், மனப்பதற்றம், என்ன நடக்குமோ என்று தெரியாத நிச்சயம்மற்ற பாதுகாப்பற்ற தன்மைகள் காரணமாக இப்பகுதிகளில் உள்ள அநேகமான சிறுவர்களும் காய்ச்சலுக்கு உள்ளாகியிருப்பதும் அவதானிக்கப்பட்டிருக்கின்றது.


இத்துடன் இப்பகுதியில் உள்ள மக்கள் மத்தியில் மலேரியா காய்ச்சல், கண்நோய், வயிற்றோட்டம், சுவாசத் தொகுதியுடன் தொடர்புடைய சளி போன்ற பலதரப்பட்ட நோய்களும் காணப்படுவதாகவும், அப்பகுதிகளுக்குச் செல்கின்ற நடமாடும் வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ள வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியின் தலைமையிலான வைத்திய குழுவினரும், எம்.எஸ்.எவ். நிறுவனத்தின் வைத்தியரும் தெரிவிக்கிறார்கள். இப்பகுதியில் உள்ள அவசர நோயாளர்கள், வவுனியா வைத்தியசாலைக்குச் செல்வதற்குரிய வாகன வசதியும், போக்குவரத்து வசதியுமற்ற நிலையில் மிகுந்த கஷ்டமடைந்திருக்கின்றார்கள் என்று ஊர்வாசிகள் தெரிவிக்கின்றார்கள்.

இப்பகுதிகளுக்கு நடமாடும் வைத்திய சேவைக்காகச் செல்கின்ற வைத்திய குழுவினர் ஒன்றிரண்டு அவசர நோயாளிகளை வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வந்துள்ள போதிலும், பல நோயாளிகளை அவர்கள் தம்முடைய வாகனங்களில் கொண்டுவருவதற்கு இடவசதியற்ற நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தச் சூழ்நிலையிலும், தமது வயல்களில் காலபோகச் செய்கையை மேற்கொண்டுள்ள இப்பகுதி கிராமவாசிகள், இப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சென்றால், தமது விவசாய முயற்சிகள் பாதிக்கப்பட்டு, தம்முடைய குடும்ப முதலீடுகள் பாழாகி விடுமோ என்று அஞ்சுவதாகத் தெரிகின்றது. இப்போதைய வன்னிப் போர்க்கள நிலவரங்களால், தாங்கள் வவுனியா நகரப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து சென்றால், எவ்வாறான புதிய சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுமோ என்றும் அச்சம் கொண்டிருப்பதாகவும் தெரிகின்றது.

மிகமோசமான ஒரு யுத்த சூழ்நிலைக்குள் சிக்கியுள்ள இப்பகுதி மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அனைத்துலகத் தொண்டு நிறுவனங்களும், பொது அமைப்புக்களும், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும் சேவையாற்றவும், அப்பகுதி மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்கவும் முன்வர வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் செய்வார்களா?

– தியாகு







நன்றி - நூலகத்திட்டம்



# தமிழரசுக் கட்சி 50 ஆண்டு நிறைவு போகிறவழி எது?




1999 டிசம்பர் மாதத்துடன் "ஆண்ட பரம்பரை மீள ஆழ நினைப்பது தவறா?" என்று முழக்கமிட்ட 'தமிழரசுக் கட்சி' பொன் விழாவைக் காண்கின்றது. எனினும், 'பொன் விழா' ஏற்பாடு ஏதும் நிகழ்வதாகத் தெரியாதிருக்கிற வேளையிலே வரலாற்றினைச் சற்றேனும் திரும்பிப் பார்ப்பது பொருத்தமுடையதாகின்றது.

1948 டிசம்பரில் ஐ. நா. மனித உரிமைகள் பிரகடனம் நிறைவேறிய நாளில், இலங்கைப் பாராளுமன்றத்தில் இந்திய வம்சாவளி, மலையகத் தமிழர்களது குடியுரிமையைப் பறிப்பதற்கான மசோதா நிறைவேறிய தருணத்தில், புதிய நியாயமான "விலைபோகாத" தமிழ் அரசியல் கட்சியின் தேவை உணரப்பட்டது.

சிலாபம், நீர்கொழும்பில் வாழ்ந்த தமிழ் மக்களினது தனித்துவத்தைக் குலைத்துக் காலப்போக்கில் சிங்களவர்களாக மாற்றிய அபாயகரத் தோற்றப்பாட்டைத் தெளிவுற உணர்ந்த 'சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம்' அவர்கள், இந்த நிலை வடக்குக் கிழக்கு மாகாணத்தைத் தாயக ஆள்புலமாகக் கொண்ட பூர்வீகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதால் அவர்களுக்கு எனத் தனி அரசு ஒன்றை நிறுவும் இலட்சியத்துடன் "தமிழரசுக் கட்சி"யைத் தியாக மனப்பான்மை மிக்க, இதர பெருமக்களுடன் சேர்ந்து நிறுவினார்.

எடுத்த எடுப்பிலேயே பிரிவினை கோருவது சிங்கள - பௌத்த பேரினவாத அரசால் தேசத்துரோகக் குற்றஞ்சாட்டப்பட்டு, தமிழரின் அரசியல் அபிலாஷைகள் முளையிலே கிள்ளியெறியப்பட்டு விடக்கூடும் என்ற யதார்த்தத்தை உணர்ந்தவராகத் தனிஅரசு, கூட்டாட்சியில் அமைந்த அங்கமாக அமைவதை இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஏற்றே இருந்தார் செல்வநாயகம்.

இதன் காரணமாகவே கட்சியின் பதிவு செய்யப்பட்ட பெயர் 'தமிழரசுக் கட்சி' ஆகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் (ஐ. வு. யு. மு.) இருந்துள்ள போதும், மேற்போந்த ஆரம்பக் கால அரசியல் சித்தாந்தத்தின் காரணமாக எழுந்த பெயராக 'சமஷ்டிக் கட்சி' (Federal Party - F. P.) என்பதும் வழங்கப்பட்டிருந்தது. பாராளுமன்றப் பதிவேடுகளில், கட்சி உறுப்பினரின் பெயர்களுக்குப் பின்னால் அடைப்புக் குறிக்குள் (I. T. A. K.) எனும் எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டே இருந்தன.



தமிழரசுக் கட்சியின் வரலாறு என்பது செல்வநாயகத்தின், அரசியல், பொது வாழ்வு வரலாறாக அமைகின்ற போதும், டொக்டர் ஈ. எம். வி. நாகநாதன், கு. வன்னியசிங்கம்... போன்ற மகத்தான மனிதர்களின் பணிகளும் அளப்பரி-யனவாக அமைந்திருந்தன என்பதுவும் அக்கால கட்டத்தில் ஈழத் தமிழர்களின் உரிமைக் குரலாகவே "தமிழரசுக் கட்சி" விளங்கி வந்தது என்பதுவும், மறுக்கவோ, மறைக்கவோ முயலாத செய்திகளாகும்.

இன்றும், இலங்கைத் தீவினை ரணமாக்கும் இனப் பிரச்சினையின் மூலமான, மொழி மீதான ஒடுக்குமுறையாக 1956 ஜூன் 05ம் திகதி தனிச் சிங்களச் சட்டம்" பாராளுமன்றில் நிறைவேற்றப்படுவதை ஆட்சேபித்துக் காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகம் செய்த போது சிங்கள அரச, கூலிப்படைக் காடையர்களால், தமிழரசுக் கட்சி தாக்கப்பட்டதன் விளைவை இன்று சிங்களத் தேசம் நன்குணர்ந்து வருகிறது. காயக் கட்டுக்களுடன் சபை அமர்வுக்குச் சென்ற தமிழ்த் தலைவர்களைப் பார்த்துப் பிரதமராயிருந்த 'சொலமன் வெஸ்ட் றிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்கா' அவர்கள், "போரில் பட்ட வீரத்தழும்புகள்" (The honourable wounds of the war) என்று கூறியதன் "மகத்துவம்" இன்றைய அரசுத் தலைவருக்குச் சிறந்த பாடங்களைப் போதித்து வருவதாக வரலாறு திரும்பி நிற்கிறது.

1957 ஜூலை 26ல் பிராந்திய சபைகளை நிறுவும் முகமாக, மக்கள் ஐக்கிய முன்னணிப் பிரதமரான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவுடன், "பண்டா - செல்வா" ஒப்பந்தத்தையும், 1965 மார்ச் 24ல் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் டட்லி சேனநாயக்கவுடன், மாவட்ட சபைகளை நிறுவும் பொருட்டு "டட்லி - செல்வா" ஒப்பந்தத்தையும் செய்ததன் மூலம் தமிழ் பேசும் மக்களின் மரபு வழித் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு ஆவண ரீதியான அங்கீகாரத்தைப் பெற்றதன் மூலம், ஈழத் தமிழரின் "தேசிய இனம்" எனும் அந்தஸ்தை உறுதிப்படுத்தியிருந்தார் செல்வநாயகம். இவை தவிர எழுத்தில் வரையப்படாத இரு "கனவான்" ஒப்பந்தங்களையும், "மின்னேரித் தெய்வம்" என்று வரலாறு சொல்லும், சுதந்திரக் கட்சியின் அப்போதைய தலைவரான சீ. பீ. டீ. சில்வாவுடனும், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுடனும் (1960 ஜூலை) மேற்கொண்டதன் மூலம் "அமைதி வழி" மூலம் சமாதானமாகத் தமிழீழம் தோற்றம் பெறச் செய்யப் பெரிதும் முயன்றிருந்ததை வரலாறு கூறி நிற்கிறது.

தமிழர் தரப்பிலிருந்து சிங்கள தேசத்துக்கு அன்றே விடுக்கப்பட்ட இத்தகைய "சமாதானத்துக்கான நல்லெண்ண சமிக்ஞைகளை"ப் புறக்கணித்த பௌத்த பேரினவாத இயந்திரம் "கண்டி யாத்திரை" செய்ததுடன், "மசால தோச'வட, அப்பிட்ட எப்பா" என்று கர்ஜித்ததன் விளைவு, தமிழ்த் தரப்பின் போரியற் சக்தியைப் பெரிதும் இன்று வளர்த்தெடுக்கப் பணியாற்றியிருக்கிறது. ஜே. ஆர். தலைமையிலான "கண்டி யாத்திரை"யின் போது ஐ.தே.க. 'முதல் அடி' (First Step) என்ற நூலை வெளியிட்டது. "தமிழர் தனி நாடு அமைப்பதற்கான 'முதல் அடி' பண்டா - செல்வா ஒப்பந்தம்" என்று இந்த நூல் வர்ணித்தது. ஈற்றில் 1958 ஏப்ரல் 09ல் ஒரு தலைப்பட்சமாக ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டதன் மூலம் சிங்கள - பௌத்த பேரினவாத சித்தாந்தத்துக்கு இலங்கைத் தீவின் நிம்மதியைப் பலி கொடுத்திருந்தார் பண்டாரநாயக்கா.

1972 குடியரசு யாப்பைத் தமிழ் மக்கள் நிராகரித்ததைக் காட்டச் செல்வநாயகம், தமது தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் பதவியைத் துறந்ததுடன் "முன் இருந்ததும், பின் போர்த்துக்கேயரிடம் களத்தில் இழக்கப்பட்டதுமான தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைக்கப் போவதாகக்" கூறிக் காங்கேசன்துறை இடைத் தேர்லில் அரசு நிறுத்திய வேட்பாளரைப் பெரும் வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்திருந்தார்.

புதிய அரசியலமைப்பு உருவானதையடுத்துத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை வேகப்படுத்தக் கட்சி அடிப்படையில் பிரிந்து போயிருந்த தமிழர்களை ஓரணியில் திரட்டத் தமிழீழத் தலைநகர் என்று கூறப்பட்ட திருக்கோணமலையில் 14.05.1972ல் இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முதலான பல்வேறு கட்சிகளும் அமைப்புக்களும் சேர்ந்து "தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி"யை உருவாக்கின.

"இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திர, இறைமையுள்ள, மதச்சார்பற்ற சோஷலிசத் தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகி விட்டது" என்று பண்ணாகத்தில் 1976 மே 14 ஆம் திகதி செல்வநாயகம் தலைமையில், தமிழீழத் தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் 'தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி' (வு. ரு. டு. கு.) எனப் பெயர் மாற்றம் பெற்றது. எனினும், இன்று தமிழீழக் கொள்கையை மறந்து விட்டவர்களாக, ஸ்ரீ லங்கா அரசின் சர்வதேச, கௌரவப் பரப்புரையாளர்களாக 'தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி' உயர் மட்டம் தொழிற்படுவது தமது வேரையே மறந்தவர்களாகவும் 'த.ஐ.வி.கூ. என்ற எழுத்துக்களின் பொருள் விளக்கத்திற்கு அர்த்தமற்றவர்களாகவுமே தென்படச் செய்கிறதல்லவா?

"தமிழரசுக் கட்சி"யின் பொன்விழாக் கொண்டாட்டங்களையோ, நினைவு நூல் வெளியீட்டையோ கூட்டணியினர் செய்யாது உள்ள இந்தத் தருணத்திலே 15.02.1959ல் "சுதந்திரன்" ஏட்டில் தமிழ்மகன் ஒருவர் தொடுத்த வினா ஒன்றையும், அதற்குத் தலைவர் செல்வநாயகம் வழங்கிய பதிலையும் மீள நினைவூட்டுவது இன்றைய தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினரின் அரசியல் செல்நெறியைப் படம் பிடித்துக் காட்டி விடுகிறது.

"தமிழரசுக் கட்சியின் அடுத்த நடவடிக்கை என்ன? எப்போது, எங்கே தொடங்குகிறது?" என்று வினவப்பட்டிருந்த வினாவுக்கு, "தமிழரசுக் கட்சியின் 'அடுத்த நடவடிக்கை' எனும் சொற்பிரயோகத்துக்கே இடமில்லை. தமிழரசுக் கட்சியின் ஒரே நடவடிக்கை தமிழ் பேசும் மக்கள், இந்த நாட்டில் இழந்த உரிமைகளை மீண்டும் பெற்று, இலட்சியத்தை அடையும் வரை தளராது போராடுவது தான். முதல் நடவடிக்கையும் அதுதான், அடுத்த நடவடிக்கையும் அதுதான். முடிவான நடவடிக்கையும் அதுதான். இந்த உரிமைப் போராட்டத்தை, விடுதலைக் கிளர்ச்சியை நடத்த வேண்டும் என்பது தான் திருமலை மாநாட்டில் செய்யப்பட்ட முக்கிய தீர்மானம்: வவுனியா மாநாட்டில் இது ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இந்தத் தீர்மானப்படி நடப்பதைத் தவிர வேறு வழி தமிழரசுக் கட்சிக்குக் கிடையாது" எனத் தெட்டத் தெளிவாகப் பதிலிறுத்திருந்தார் செல்வநாயகம்.



இன்றைய கூட்டணி "சிங்களத் தலைவர்கள் வாக்குறுதிகளைத் தருவார்கள். பின் மக்கள் எதிர்க்கிறார்கள் என்று கையை விரிப்பார்கள்" என்ற தீர்க்கதரிசனத்தைப் புரிந்து கொள்ளாததாகவே தெரிவது ஆரோக்கியத்தைத் தோற்றுவிக்காது. "கடவுள் தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும்" என்ற செல்வநாயகத்தின் வாக்குத் "தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்ற ரீதியில் மாற்றமுறாதிருக்கக் கூட்டணியினர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைத் தமது அரசியல் பாவச் செயல்களைக் கழுவும் "காசி யாத்திரை" ஆகக் கடைபிடிக்க முன்வருவதே உசிதமானது.

ஈழத் தமிழரின், தேச விடுதலைப் போராட்டமானது அளப்பரிய தியாகங்களையும், போரியற் சாதனைகளையும் சாதித்துப் புத்தாயிரம் ஆண்டினில் தீர்க்கமான துன்ப துயரங்களுக்கும், சாதனைகளுக்கும், சோதனைகளுக்கும் உயர் பெறுதியை ஈட்டும் முகமாகத் தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றுபட்ட மக்கள் சக்தியாகத் தமிழ், முஸ்லிம் தாயக ஆள்புல ஒருமைப்பாட்டையும், பண்பையும் பேணுவதே நீதியான, நிறைவான தீர்வுக்கு நாளையேனும் வழிவகுக்கும் என்பதே எம் முன்னாலுள்ள நிதர்சனமான பேருண்மை ஆகிறது.

**– கோ. துரைகுமாரன்**

நன்றி - நூலகத்திட்டம்



# அரசியல் நம்பகத் தன்மையும் வேண்டும்!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களது இவ்வாண்டு மாவீரர் தின உரை தென் இலங்கையில் பல வித சர்ச்சைகளை ஏற்படுத்தி விட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கான நாட் குறிக்கப்பட்டு, தேர்தல் பிரச்சாரங்கள் தீவிரமாக அடிபடத் தொடங்கியுள்ள ஒரு வேளையில் அவர் ஆற்றியுள்ள இந்த உரையானது ஆளுங்கட்சி வேட்பாளர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவுக்குப் பெரும் தலையிடியையும், அரசியல் நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது என்பதில் ஐயமில்லை. பேச்சுவார்த்தை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும், தயாரற்ற நிலைமையையும் அம்பலப்படுத்தியுள்ள இந்தப் பேச்சு, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவைக் குறிவைத்துத் தாக்குவது போல அமைந்திருப்பது எதிர்க் கட்சிக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்துள்ளது எனலாம். 'தமிழர் தாயகத்தை முழுமையாக ஏப்பம் விடும் ஒரு நாசகாரப் போர்த் திட்டமாக'ச் சந்திரிகாவின் 'சமாதானத்திற்கான போர்' என்ற கோட்பாடை வர்ணித்த பிரபாகரன் 'உள்நாட்டில் தமிழர்கட்கு எதிராக ஒரு பயங்கரவாத ஆட்சியை நடாத்திக் கொண்டு, வெளியுலகில் சமாதானம் விரும்பும், சமாதான தேவதையாக நாடகமாடினார்.' என்று அவரை நேரடியாக விமர்சித்துள்ளார். இதற்கு முன் பல சந்தர்ப்பங்களில் புலிகளின் தலைவர் பிரபாகரன் தொடர்பாக ஜனாதிபதி தெரிவித்த பல்வேறு சாரமற்ற, தனிப்பட்ட தாக்குதல்களுக்கு எல்லாம் பதிலளிப்பது போல அமைந்த இந்த 'நாடகமாடினார்' என்ற விமர்சனம், சந்திரிகா அரசு குறித்த புலிகளின் இன்றைய நிலைப்பாட்டை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தி விட்டுள்ளது.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க, மீண்டும் ஜனாதிபதி ஆவதையோ, அவரது அரசாங்கம் திரும்பவும் வருவதையோ, புலிகள் விரும்பவில்லை என்பதையும், அவரது அரசாங்கத்தின் மூலம் சமாதானத்துக்கான வாய்ப்பு இருக்கின்றது என்று புலிகள் நம்பவில்லை என்பதையும் இது தெளிவாக வெளிப்படுத்தி விட்டிருக்கின்றது.

தமிழ் அரசியல் கட்சிகள் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பான நிலைப்பாட்டை எடுப்பதில் பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ள இந்த மாவீரர்தின உரை உண்மையில் 'சமாதானம்' பற்றித் தெரிவிக்கும் கருத்துக்கள் தான் என்ன? பொ. ஐ. முவும், ஐ. தே. கவும் தமது அரசியல் மேடைகளிலும், அறிக்கைகளிலும் தெரிவிக்கும் 'சமாதானத்'திற்கும், பிரபாகரன் தெரிவிக்கும் 'சமாதானத்'துக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கின்றதா?

வன்னிப் பெரு நிலப்பரப்பை 'ஜய சிக்குறுய்' நடவடிக்கை மூலமாகக் கைப்பற்றிவிட்ட பெருமிதத்துடன், அதை ஒரு பிரச்சாரமாகப் பயன்படுத்திச் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் தேர்தல் களத்தில், காலத்திற்கு முந்தியே குதித்த ஜனாதிபதியின் அரசியல் வியூகத்தில் 'ஒப்பற்ற மாபெரும் இராணுவ வெற்றியின் சிகரத்தில் நின்று' பிரபாகரன் ஆற்றிய உரை பெரும் உடைவை ஏற்படுத்தியிருக்கின்றது. யுத்த வெற்றி இன்னொரு ஐந்தாண்டு கால ஆட்சிக்கு வாய்ப்பைத் தரும் என்ற நம்பிக்கையை அது தகர்த்தது மட்டும் அல்லாமல் செய்தித் தணிக்கையையும் மீறி வன்னிக் கள நிலவரம் என்ன என்பதை அது வெளிப்படுத்தியும் விட்டுள்ளது.

புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட தோல்விக்குப் பின், சமாதானத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போரிலும் கணிசமான அளவுக்குப் படு தோல்வியைச் சந்திரிகா அரசாங்கம் கண்டிருக்கின்றது. இனப் பிரச்சினையைத் தீர்க்கவென அது கையில் எடுத்த இரண்டு வகையான தீர்வு முயற்சிகளும் தோல்வியைச் சந்தித்துள்ளன. இந்த நிலையில், 'நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தீர்வுப் பொதியை அமுலாக்கிச் சமாதானத்தைக் கொண்டு வருவேன்' என்ற சந்திரிகாவின் கருத்துக்கு வலு ஏதும் இருப்பதாக நம்ப முடியவில்லை.

ஜனாதிபதித் தேர்தலைக் காலத்துக்கு முன்பு நடாத்தும் முடிவைச் சந்திரிகா எடுத்ததற்குக் காரணம், பாராளுமன்றத்தில் 02/03 பெரும்பான்மை இல்லாதது தான் என்ற கருத்துத் தர்க்கத்தின் பாற்பட்டதாக இல்லை என்பது தெளிவு. அவரது நோக்கம் எல்லாம் மீண்டும் ஜனாதிபதியாக வருவது. அதன் பின் ஐ. தே. கவிலுள்ள உறுப்பினர்களை - அவர்கள் எவ்வளவு தான் மோசமானவர்களாக இருந்தாலும் சரி - தம் பக்கம் சேர்த்துக் கொள்வது. பிறகு, பாராளுமன்றத் தேர்தலை நடத்தாமலே, அதை நீடிப்பதற்கான ஜே. ஆர். பாணியிலான ஒரு 'கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு' ஒன்றை நடாத்துவது, பிறகு இன்னொரு ஆறு ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாக ஜாம் ஜாம் என்று இருப்பது என்பது தான். அதற்கான திட்டங்களைத் தான் அவர் இப்போது செய்து வருகின்றார். அதன் பிறகு. இந்தத் தீர்வுப் பொதி -




உப்புச் சப்பற்ற தீர்வுப் பொதி - சட்டமாக்கப்படும். வரதராஜப் பெருமாள் போன்றவர்களின் பாராட்டுடன், சமாதானத்தை நிலைநாட்டி விட்டதாக அவர் மார் தட்டிப் பேசும் நிலை உருவாகும்.

இதுதான் இன்றைய அரசாங்கத்தின் சமாதானத்திற்கான இரகசிய, சட்ட விரோத சதித் திட்டம். ஆளுங் கட்சி வட்டாரங்களிலிருந்து கசிந்த இந்தத் திட்டத்தில் உண்மையாகவே சமாதானத்திற்கு எந்த இடமும் இல்லை என்பது தெளிவு.



இதைத்தான் பிரபாகரன் தனது உரையில் சந்திரிகாவுக்குச் சமாதானத்தில் நாட்டமில்லை என்று தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் இந்தப் பேச்சு, மறைமுகமாக ரணில் விக்ரமசிங்கவைச் சமாதானத்திற்கு உதவக் கூடிய ஒருவர் என்று எண்ண வைக்கும் அளவுக்கு, அவர் பற்றியோ, அவரது கட்சி பற்றியோ எதையும் பேசாமல் விட்டு விட்டது. இது, புலிகள் உள்ளூர ஐ.தே.க. வருவதை விரும்புகின்றார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டுவதாக அமைந்துள்ளது. கிழக்கு மாகாணத்திற்குச் சென்று ரணில் பிரச்சார உரை ஆற்றி விட்டு வந்திருப்பது, புலிகளின் ஆதிக்கம் நிறைந்த பகுதிகளில் ஐ. தே. க. சுவரொட்டிகள் தாராளமாகக் காணப்படுவது எல்லாம், இதை மேலும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

'இரு பிரதான சிங்களக் கட்சிகளும் சாராம்சத்தில் இனவாதக் கட்சிகளே ! இவ்விரு கட்சிகளும், சிங்கள - பௌத்த பேரினவாதச் சித்தாந்தத்தில் வேரூன்றி வளர்ந்தவை. அந்த வெறி பிடித்த தமிழ் விரோத சித்தாந்தத்தில் திளைத்தவை. கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாகத் தமிழினத்துக்கு எதிரான ஒடுக்கு முறையை முடுக்கி விடுவதில் போட்டியிட்டுச் செயற்பட்டவை' என்று தனது உரையில் பிரபாகரன் பேசியிருந்த போதும், ஐ. தே. க. தொடர்பாகக் குறிப்பாக எதையும் சொல்லாதது ஐ. தே. கவுக்கு மிகுந்த வாய்ப்பாகப் போயுள்ளது.

எவ்வாறாயினும், பிரபாகரனின் இந்தப் பேச்சு சமாதானம் குறித்த சில முக்கியமான விடயங்களைத் தெளிவு படுத்தியுள்ளது. 'தனி நாடு குறித்துப் பேசவா? பிரபாகரன் அரசைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றார்?' என்று கேட்ட டக்ளஸ் தேவானந்தா உட்பட எந்தத் தமிழ்க் கட்சிகளும் பிரபாகரனின் பேச்சில் தொனித்த 'சமாதானத்'தின் பொருளைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. டக்ளஸ் அவர்கள், பிரபாகரன் சமாதானத்தின் கதவுகளைத் திறந்து வைத்திருப்பதாகக் கூறிக்கொண்டே அதை இறுக மூடி விடுகின்றார் என்று தான் நினைக்கின்றார். ஆனால், ஏனைய கட்சிகளையும், பத்திரிகைகளையும் பொறுத்த வரை, பிரபாகரன் சமாதானப் பேச்சுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். அரசாங்கம், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பது தான் அவர்களது கருத்தாக இருக்கின்றது. உண்மையில் இதில் எது சரியானது ?

இம்முறை மாவீரர் தினப் பேச்சுக்குச் சற்று முன்பாக இருந்த கள நிலவரம், புலிகளுக்குப் பெரும் வெற்றியாக அமைந்திருந்தது உண்மையே. இந்த வெற்றியின் பெருமிதம் பிரபாகரனின் உரையில் மிகவும் தெளிவாகவும், வெளிப்படையாகவும் தெரிந்தது. அவர் சமாதானத்திற்காக, மூன்றாந் தரப்பு மத்தியஸ்துடன் பேச்சு நடத்துவது அவசியமானது எனக் குறிப்பிடும் 'சமாதானப் புற நிலை' என்பது இன்றைய புற நிலை யதார்த்தத்தின் அடிப்படையில் நின்று கொண்டு 'சமாதானப்' பேச்சு நடத்தப் போவதாகக் கூறும் தமிழ், சிங்களக் கட்சிகளின் 'சமாதானத்'திலிருந்து பெரிதும் வேறுபட்டது. ' சுதந்திரத் தமிழீழத் தனி அரசே எமது தேசியப் பிரச்சினைக்கு உறுதியான தீர்வு' என்ற நிலைப்பாட்டில் நின்று கொண்டு, அதற்காகப் போராடிக் கொண்டு 'சமாதானம்' பற்றிப் பேசுபவர்க்கும், ஒற்றையாட்சி அதிகார அமைப்பின் கீழ் 'அதிகாரப் பகிர்வு' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சமாதானம் பற்றிப் பேசுபவர்களுக்கும் இடையில் நிலவும் சமாதானம் குறித்த அர்த்தங்கள் பாரிய வேறுபாடு உடையவை. பிரபாகரன் கூறும் சமாதானம், தனித்துவம், சுதந்திரம், சுயாதிபத்தியம் கொண்ட தனித்துவ அரசைக் காண விரும்பும் தேசத்துக்கும், சிங்கள தேசத்துக்குமிடையில் பரஸ்பர அங்கீகாரத்தின் அடிப்படையில் உருவாக வேண்டிய சமாதானம். மற்றையது, தாம் கௌரவிக்கப்பட வேண்டும் என்று கோரும் ஒரு ஒடுக்கப்பட்ட தேசத்து மக்கள் நிம்மதியாக வாழவும், இதே அரசியலமைப்பின் கீழ் சக பிரஜைகளாக நடாத்தப்பட வேண்டும் என்பதற்காகவும் கோரும் சமாதானம். முதலாவது, தமது சொந்தப் பலத்திலும், நம்பிக்கையிலும் நின்று கோரப்படுவது. அது 'சமாதானத்தை' அதை ஒடுக்கும் அரசு அளிக்காவிட்டாலும், எடுத்துக் கொள்ளும் துணிவுடன் பேசுவது. ஒடுக்குபவர்கள் மீது நம்பிக்கை வைக்காமல், தமது பலத்தில் நம்பிக்கை வைத்துக் கோருவது. இரண்டாவது, அரசு மீது நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் கோரப்படுவது. இரண்டுக்கும் இடையில் பாரிய இடைவெளி உண்டு.



பிரபாகரனின் பேச்சு பிரதானப்படுத்துகின்ற காரணிகள் யுத்த நிறுத்தம், பொருளாதாரத் தடை, படை விலக்கல் ஆகியவை நடைமுறைப்படுத்தலை வலியுறுத்துகின்றது. இந்தப் புற நிலை யதார்த்தம் மட்டுமே பேச்சுவார்த்தையை 'சமாதானப்' பேச்சுவார்த்தையாக நடாத்த உதவும் என்கின்றது அது. ஆனால், நடைமுறை யதார்த்தம் அது அல்ல என்பது தான் உண்மை. யுத்தம் ஒரு வேளை நிறுத்தப்படலாம். பொருளாதாரத் தடை சில வேளை ஒத்துக் கொள்ளப் படலாம்.

ஆனால், படை விலக்கல் சாத்தியமா ? இது சமாதானப் பேச்சுக்கு நிபந்தனையாக முடியுமா? சமாதானப் பேச்சின் போக்கில் ஏற்படும் உடன்பாடுகளின் அடிப்படையில் அப்படி ஒரு விலக்கல் ஏற்பட முடியுமே அல்லாமல், பேச்சுவார்த்தை தொடங்க முன்னரே படை விலகல் சாத்தியமா ?

இந்தக் கேள்விகள் தான் டக்ளஸ் ஆல் பிரபாகரன் சமாதானக் கதவை மூடியிருக்கின்றார் என்று கூற வைத்தது எனலாம்.

உண்மையில், யுத்த வெற்றிக் களிப்புடன் பிரபாகரன் தெரிவித்துள்ள நிலைப்பாடு இது என்ற போதும், அந்த நிலைப்பாட்டில் நியாயம் இல்லாமல் இல்லை. சந்திரிகா அரசாங்கம், யுத்த வெற்றிக் களிப்புடன், 'புலிகளுடன், நாம் பேசவே தயாரில்லை' என்றும், 'ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு வந்தால் பேசலாம்' என்று அறிவித்ததுடன் ஒப்பிடுகையில் இது ஒன்றும் அதிக பட்சமானது அல்ல.தவிரவும், ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தும் அரசாங்கத்தை, ஆயுதங்களைப் போடும்படி நிபந்தனை போடும் ஒரு அரசாங்கத்தை, படைகளை வாபஸ் வாங்கு பேசலாம் என்று புலிகளின் தலைவர் கேட்பதில் எந்தத் தவறும் இல்லை.

ஆனால், நடைமுறையில் இதன் விளைவு என்னவாக இருக்கப் போகின்றது ?

இரு தரப்பினரது கோரிக்கைகளும், இரு .தரப்பும் நின்று கொண்டிருக்கும் அரசியல் நிலைப்பாடுகளை ஆட்டங்காண வைக்கும் கோரிக்கைகள். ஆகவே, ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் ஒழிய, இன்றைய இறுகல் நிலையில் தளர்வு ஏற்பட எந்த வாய்ப்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

சந்திரிகா அரசாங்கத்தால், ஒரு போதும் ஒரு நிபந்தனை அற்ற யுத்த நிறுத்தத்தை இனி அறிவிக்க முடியாது. அதற்கான அரசியல் சூழலை அவர் நாசமாக்கி விட்டார். அதைச் செய்யும் வாய்ப்பு வேறொரு - ஒரு வேளை ஐ. தே. க. அரசாங்கம் வந்தால் சில வேளை சாத்தியமாகலாம். அப்படி இல்லை என்றால் இதே இறுகல் நிலை தொடரவே செய்யும். இலங்கை அரசின் இராணுவம், புலிகளிடம் தோல்வியை ஒப்புக் கொள்ளும் வரை.

ஐ. தே. க. அரசாங்கம் வந்தால் அதன் வருகையின் பின் ஒரு தற்காலிக சுமுக நிலை நிலவலாம். ஆனால், அதுவும், இதே பழைய நிலைக்கே திரும்பவும் வந்து நிற்கும்.

இதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு பிரபாகரன், தனது உரையை ஆற்றியுள்ளார். மிகவும் சாணக்கியமான இந்த உரை, சென்ற ஆண்டு உரை தொடர்பாக, இதே பத்தியில் நான் சுட்டிக் காட்டிய அதே தவறுகளை மீளவும் ஒரு தடவை சுட்டிக் காட்டும் நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆம், இந்த முறையும், பிரபாகரன் தனது உரையில், வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம்கள் பற்றியோ, மாற்றுக் கருத்துள்ளவர்கள் குறித்த தமது கருத்தையோ, எதையும் தெரிவிக்கவில்லை. தென் இலங்கை வாழ் சிங்கள மக்கள் தொடர்பாக, யுத்தத்திற்குத் தமது புதல்வர்களை அநியாயமாக அனுப்பிக் கொண்டிருக்கும் அந்த அப்பாவிகள் தொடர்பாக, அவர்களுக்காக எதையும் பேசவில்லை.

இவை எல்லாம், புலிகளின் பிரதான அரசியல் போக்கில் மாற்றங்கள் எதுவும் ஏறபடவில்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியவில்லை.

புலிகளின் தலைவர் என்ற நிலையிலிருந்து, தேசியத் தலைவராக உயர்த்தப்பட்டுப் பேசப்படும் ஒரு தலைவரின் உரையில் வெறும் அரசியல் சாணக்கியத்தை மட்டுமல்ல, அரசியல் நம்பகத் தன்மையையும் கூட மக்கள் எதிர்பார்ப்பார்கள். இந்த அரசியல் நம்பகத் தன்மை யுத்த வெற்றிகளாலும், நினைத்த இலட்சியத்தில் உறுதியாக இருப்பதாலும் மட்டுமல்ல, கடந்த காலத் தவறுகளை உதறி, எறிவதாலும் சேர்த்தே உருவாகுகின்றது.

புலிகள், இதற்குத் தயாராகாத வரை, பேரினவாத அரசுக்கு, எப்போதும் வாய்ப்பான சூழல் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து கொண்டு தான் இருக்கும் !

- நாசமறுப்பான் -

நன்றி - நூலகத்திட்டம்



# பெண் சுதந்திரம் என்ற பெயரில் பெண்ணொடுக்கு முறை!



ஆணாதிக்கம் எங்ஙனம் நிறுவனமயப்பட்டுள்ளது என்பது பற்றிய கலந்துரையாடல்கள் பெண்ணியலாளர்கள் மத்தியில் முன்னெடுக்கப்படுகின்றது. அவர்கள் மிகவும் நுணுக்கமாகவும், பரவலாகவும் இவ் விடயம் பற்றி தர்க்கிக்கின்றார்கள். இவ்வாறு நிறுவனமயப்பட்டும் மிகவும் நுட்பமாகவும் இயங்கி வரும் ஆணாதிக்கத்தின் தீவிரமான பெண்களுக்கெதிரான பல போக்குகள் பற்றி பெண்ணியலாளர்களும், அறிவுஜீவுகளும் நன்கு அறிந்தும் உள்ளார்கள். அதற்கெதிரான தீவிரமான திட்டங்களை, செயற்பாடுகளைப் பற்றி அவர்கள் தமக்குள் மிகத் தீவிரமாக கலந்தாலோசித்து செயற்பாடுகளை முன்னெடுத்தும் செல்கின்றனர்.

பெண்களை கலாசாரப் படிமங்களாக்கி, பாரம்பரியங்களை அடைகாத்து வாழும் தன்மைக்கு இந்த சமூகத்தை வடிவமைத்த அதே ஆணாதிக்கக் கட்டமைப்பு தன்னை நவீனப்படுத்திக் கொண்டு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதையும் முற்போக்கான நம் அறிஞர்கள் அறிந்து வைத்திருக்கின்றார்கள். எனினும், பெண் விடுதலை பெண் சுதந்திரம் என்ற பெயரில் ஆணாதிக்கம் கொண்டு செல்லும் மிகவும் நுட்பமான இவ்வாறான செயற்பாடுகளை எத்தனை பெண்கள் விளங்கிக் கொள்கின்றார்கள் என்பது சந்தேகத்திற்குரியது. பெண்ணியத்தை வயிற்றுப் பிழைப்புக்காக வாய் கிழிய கொண்டாடும் தன்மையின் விளைவுகளை நாம் தெட்டத் தெளிவாக சமூகத்தின் மத்தியில் காணக் கூடிய தாகவிருக்கின்றது.

இதன் விளைவு பெண்கள் நவீன முறையில் பல்வேறு நிலைகளிலும் சுரண்டலுக்குள்ளாகுதலாகும். இந்தத் தன்மைகளை தெளிவுபடுத்தும் இரண்டு உதாரணங்கள்/ உண்மைகள் இவை:-

**உதாரணம் - 1**

* உங்களது விடுதலைப் போராட்ட அனுபவங்களை பற்றிச் சொல்ல முடியுமா?
* நிச்சயமாக, நாங்கள் ஆயுதம் தூக்கி போராடுவதன் மூலம் விடுதலைக்கான பாதையை பெற்று விடலாம் என்று ஓரள்வேனும் நம்பினோம். சரிசமமாக அவர்களுடன் இணைந்து பணியாற்றினோம். ஆனால் ஆணாதிக்கக் கட்டமைப்பில் இது சாத்தியமில்லை. நாங்கள் ஒன்றாக இணைந்து போராடினோம். என்ன பயன் இறுதியில் குசினிக்குள் சென்றோம். ஆயுதம் தூக்கினோம் என்ற புனைவான பெருமை தான் எஞ்சியது. எங்களுடன் பெண் சுதந்திரம் என்ற பெயரில் பழகியவர்களே பின்னர் நாங்கள் கெட்டுப் போனவர் கள் எனப் பெயர் சூட்டினர். எங்களை இந்த சமூகமுமே வெறுத்தொதுக்கியது.

பெண் விடுதலை, பெண் சுதந்திரம் என்ற பெயரில் ஆணாதிக்கக்கட்டமைப்பு மிகவும் கீழ்த்தரமாக செயற்பட்ட பாரிய வரலாறு பற்றி நமக்குத் தெளிவாக தெரியும். அதாவது விடுதலைப் போராட்டங் கள் இதற்குத் தெளிவான உதார ணங்களாகும். பெண் விடுதலை என்ற பெயரில் பல பெண்கள் இதற்குள் ஈர்க்கப்பட்டு பின்னர் சமையலறைக்குள் அனுப்பப்பட்ட "வெற்றிகரமான" வரலாற்றையும் நாம் அறிவோம்.

சர்வதேச ரீதியில் பலஸ்தீனம், ஈரான், நிக்கரகுவா போன்ற நாடுகளில் விடுதலைப் போராட்டங்களில் வெறும் ஆட்சேர்ப்புக்காக பெண் விடுதலைக் கருத்தியல்களைப் பயன்படுத்தி பெண்களை தமக்குள் உள்வாங்கிக் கொண்டமை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது. அதேபோல் இலங்கையின் விடுதலைப் போராட்ட வரலாறிலும் இதே நிலைமையைக் காணக் கூடிய தாகவிருந்தது எனலாம். ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் கலைக்கப்பட்ட போது ஈ.பி.ஆர்.எல்.எவ் பெண்கள் பலர் எல்.ரி.ரி.யினால் அடிக்கப்பட்டார்கள் . எல்.ரி.ரியின் ஒரு முன்னணி உறுப்பினர் அடிக்கும் போது கூறியது "உங்களுக்கு என்ன விடுதலை போய்க் குசினிக்குள் இருங்கோ. அது தான் உங்களுக்குச் சரியான இடம்" -(முறிந்த பனை- பக்கம் 327) என்பதாகும். வெறும் ஆட்சேர்ப்புக்கும் பெண்களின் அபிப்பிராயத்தைத் சம் பக்கம் ஈர்த்துக் கொள்ளவுமே இவ்வாறு பெண் விடுதலையை தூக்கிப் பிடிக்கின்றது இச்சமூகம்.

இன்னும் ஏன், தற்போது பெண்களை அதிகம் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளவும் இந்த யுத்தியே கையாளப்படுகின்றது. அரசியல் கட்சிகளிலும் பெண்களை அதிகம் ஈர்த்துக் கொள்ள இந்த உத்தி தாராளமாகக் கைக் கொள்ளப்படுகின்றது. நவீன புதுமைப் பெண்ணாக மாறும் எண்ணம் கொண்ட பெண்களே என்றவாறான விளிப்புகள் தாராளமாக பயன்படுத் தப்படுகின்றன. பெண்கள் இவ்வாறான திட்டமிட்ட செயற்பாடுகளின் காரணமாக தவறாக வழிநடாத்துதலுக்குள்ளாகின்றனர்.

**உதாரணம் - 2**

* இன்று பெண்கள் பல்வேறு புதிய வடிவிலான பிரச்சினை களுக்கு முகம் கொடுக்கின்றனர். அந்த வகையில் இன்று பல்வேறு கட்டமைப்புகளில் தொழிலில் ஈடுபடும் பெண்கள் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் எனக் கூற முடியுமா?
* காலத்திற்கேற்ற புதிய வடிவம் தான். குறிப்பாக பெரும்பா லான ஆண்கள் இன்று பெண் ணியம் பற்றிப் பேசுகின்றார்கள். பெண் சுதந்திரத்தை, பெண் விடுதலையை அங்கீகரிப்பதாகக் கூறுகின்றார்கள். கவர்ச்சியாகப் பேசுகின்றார்கள். ஆனால் இதுவும் ஒரு தந்திரோபாயமே. இவற்றைப் பேசிப் பேசியே பெண்களைப் பாலியல் ரீதியாக சுரண்டுவர். பின், தன் சுயநலத்திற்காக பயன்படுத்திய பெண்ணையே பற்றி இழிவாக பேசுவார்.

இது இவ்வாறிருக்க இவ்வாறான இன்னொரு பரிமாணத்தையும் சுட்டிக் காட்டுதல் வேண்டும். சாதாரணமாக அலுவலகங்களில், பலதரப்பட்ட உரிமைகளுக்காக முன்நின்று உழைக்கும் அமைப்புகளில், அரசு சாரா நிறுவனங்களிலும் இவ்வா றான முறை கடைப்பிடிக்கப்பட்டு பெண்கள் பலர் சுரண்டலுக்குள்ளாகும் போக்கை பரவலாகக் காணக் கூடியதாகவுள்ளது.

தன்னை முற்று முழுதான பெண் விடுதலை விரும்பி என அடையாளப்படுத்திக் கொண்டு, முற்போக்குத் தனமாக செயற்பட்டுக் கொண்டு பெண்களை பயன்படுத்திக் கொள்ளும், பாலியல் ரீதியாக சுரண்டும் ஆண்களைப் பற்றி இந்த சமூகம் அறியாமல் இல்லை. இந்நிலைமைக்கும், விடுதலைப் போராட்டங்களில், இராணுவ நட வடிக்கைகளில் பெண்களை பயன்படுத்திக் கொண்ட முறைக்கும் ஒப்பீட்டளவில் ஒத்த தன்மையே காணப்படுகின்றது.


பொதுவாக அரசு சார்பற்ற அமைப்புகளில் அதாவது என்.ஜி.ஓக்களில் வேலை செய்யும் பெண்கள் தொடர்பாக ஒரு கொச்சையான பார்வையே நிலவுகின்றது. அதாவது எதற்கும் வளைந்து கொடுப்பார்கள் என்று. இவ்வாறான கருத்தியல்களை தோற்றுவிப்பதிலும் இந்த ஆணாதிக்க சமூகம் திட்டமிட்டு செயற்படுகின்றது.

குறிப்பாக பெண்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக கருதப்படுவதனால் பாலியல் ரீதியான சுரண்டல்களுக்குள்ளாகின்றனர். பாலியல் தொடர்பான நகைச்சுவையை தெரிவிப்பது, பாலியல் தொடர்பான விடயங்களை சுவாரஸ்யமாக கதைத்து தம்மைப் பற்றிய முற்போக்கான தோற்றத்தை ஏற்படுத்திக் கொள்வது என இது சூழலுக்கேற்ப பல்வகைப்படும். ஒருவேளை இதுவும் எழுத்தில் வடிக்கப்படாத மனித உரிமையாக இருக்கலாமோ என்னவோ.

இந்த வகையில் மேற்கூறப்பட்ட இரண்டு உதாரணங்களும் ஒரு துளி மட்டுமே.

"முகத்திரை அணிவதைக் கைவிட்ட ஒரு பெண்ணுக்கும் ஒரு உழவு இயந்திரம், ஒரு கைத் தொழிற்பேட்டை, ஒரு புதிய தண்டவாளப்பாதை ஆகியவற்றுக்கும் இடையே பெரிய வித்தியாசத்தை ஆண்கள் காண்பதில்லை. முகத்திரை அணியாத அளவு பெண்ணை முன்னேற்றி விட்டோம் என்பது ஆணினுடைய இன்னோர் சாதனையின் ஒரு அடையாளமாகவே கருதப்படுகின்றது."

-ஒரு ஆய்வாளர்



திருக்கோணமலை ஸ்ரீ கோணேஸ்வர இந்துக் கல்லூரி மாணவர்கள் ஒரு சித்திரக் கண்காட்சியுடன் கூடிய சஞ்சிகைக் கண்காட்சியை நடத்தி முடித்திருக்கின்றார்கள்.

மாணவர்களதும், ஆசிரியர் தி. ச. அருள் பாஸ்கரனதும் கைவண்ணத்தில் மலர்ந்த சுமார் இருநூறு ஓவியங்கள், இரண்டு மண்டபங்கள் நிறையக் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ஓவியங்கள் வர்ணக் கலவைகளாலும், இயற்கையாகக் கிடைக்கக் கூடிய பொருட்களின் ஒட்டு வேலைகளாலும், ஆக்கப்பட்டிருந்தன. உடைந்த கண்ணாடித் துண்டுகளால் ஆக்கப்பட்ட ஓவியம் ஒன்றும், பார்ப்போர் மனதைக் கவரும் வண்ணம் அமைந்திருந்தது.



ஓவியங்கள் ஒவ்வொன்றும் தெளிவானதும், கச்சிதமானதுமான தலைப்புகளுடன் காட்சியளித்தன. இழப்பு, பரிதாபம், தேசம், நடப்பு போன்ற சிறிய தலைப்புக்கள் ஓவியத்தைச் சுருக்கி எழுத்தாக்கியது போல் வெகு பொருத்தமாக அமைந்திருந்தன.

ஏறத்தாழ அத்தனை ஓவியங்களும் சமகாலப் பிரச்சினையை நாசூக்காகவும், துலாம்பரமாகவும் எடுத்துக் காட்டின. பரிதாபம் என்ற தலைப்பிலான ஓவியம் அலைகடலில் படகொன்றில் பலர் தத்தளிப்பதை எடுத்துக் காட்டியது. இதனைக் கண்ணுற்ற எவருக்கும் எங்கள் மக்கள் இந்தியாவுக்குப் படகில் தப்பியோடும் போது, பட்ட அல்லல்களும், பயங்கர அனுபவங்களும், உயிரிழப்புகளும் வந்து நெஞ்சைக் குடைவது தவிர்க்க முடியாததாகின்றது.

தேசம் என்ற தலைப்பிலான ஓவியம் ஒரு பெண், தலையில் சுமையுடன் ஒரு கையில் குழந்தையும், மறுகையில் பையுமாக இடம்பெயர்ந்து வருவதைக் காட்டியது. நடப்பு என்ற தலைப்பிடப்பட்ட ஓவியமொன்று இராணுவ வீரன் முன்னால், பயபக்தியுடன் நிலத்தில் அமர்ந்திருக்கும் மனிதன் ஒருவரையும், அங்கவீனமடைந்த சில மனிதர்களையும் காட்டுவதன் மூலம் நாட்டு நடப்பை அப்படியே பிரதிபலிக்கின்றது.



ஒவ்வொரு ஓவியமும், பார்ப்போர் நெஞ்சில் ஒவ்வொரு கதைகளை உசுப்பி விடுவதாக அமைந்திருப்பது மாணவர்களுக்கும், ஓவிய ஆசிரியருக்கும் கிடைத்த பெருவெற்றி. ஓவியங்கள், கதை கூறும் என்று சொல்வதுடன் ஓவியங்கள் நிறைவுகளை மீட்கும் என்று சேர்த்துச் சொல்ல வைக்கும் வல்லமை இந்த ஓவியங்களுக்கு உண்டு.

டிசெம்பர் 01ம் திகதி காலை 9.00 மணிக்குக் கனேடிய உலகப் பல்கலைக்கழகச் சேவை உதவி மாவட்ட இணைப்பாளர் எம். ஆர். மரிக்கார் இந்த நிகழ்வைத் திறந்து வைத்தார். இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்களது கையெழுத்துச் சஞ்சிகைகளும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

- விவேகி -

நன்றி - நூலகத்திட்டம்



# பிரபுத்துவச் சிந்தனை சாதீயம் மொழிப்பாவனை

## சில குறிப்புகள்



அரவிந்தன்

கடந்த சரிநிகரில் 'போர்க்குணமிக்க கரையார் சமூகம்' என்ற கட்டுரை ஒரு சில மட்டங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்தக் கட்டுரை அதிருப்தியை ஏற்படுத்தியது என்பதை விடவும், அதற்குக் கொடுக்கப்பட்டிருந்த தலைப்பும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களது படத்துடன் சாதிப்பெயர் எழுதப்பட்டிருந்தமையுமே அதிகளவில் அதிருப்தி ஏற்படக் காரணமாக இருந்தது எனலாம். எனது பத்திரிகையாள நண்பர் ஒருவர், இவ்வாறான ஒரு கட்டுரையைச் சரிநிகர் வெளியிட்டது ஒரு கீழ்த்தரமான செயல் என்றும், புலிகளின் தலைவர் பிரபாகரனை அவமதிக்கும் நோக்குடன் இது வெளியிடப்பட்டது என்றும் தமது சக பத்திரிகையாளர்கள் சிலர் அபிப்பிராயப்பட்டதாகக் கூறினார். அதுவும் மாவீரர் தினம் கொண்டாடப்பட்டுக் கொண் டிருக்கும் ஒரு சூழலில் இந்தக் கட்டுரை வெளியிடப்பட்டது, மாவீரர் தினத்தைக் கொச்சைப்படுத்துகின்ற ஒரு செயலும் கூட என்றும் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார்களாம்,

இந்தக் கருத்துக்களையும், விமர்சனத்தையும் மேலோட்டமாகப் பார்க்கையில் ஏமாற்றமும் எரிச்சலும் ஏற்பட்டாலும்கூட, இவற்றுக்குப் பின்னால் உள்ள சிந்தனை ஆழமான அக்கறைக்குரிய ஒரு விடயமாகும். சாதிப்பெயர்கள் பாவிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களைப் பொறுத்து, அவை இழிவு படுத்தப்படும் நோக்குடன் பாவிக்கப்பட்டிருகின்றனவா? இல்லையா? என்பதைப் புரிந்து கொள்ள முடியுமாயினும், பத்திரிகையாளர் மத்தியில் இத்தகைய ஒரு கருத்து உருவாக்கத்திற்கு நிச்சயமாக ஒரு காரணம் இருக்க வேண்டும்.

சாதியம் தொடர்பான மரபார்ந்த சிந்தனையின் தாக்கம், அறிவார்ந்த சிந்தனைத் தளத்தில் செயற்படும் புத்திஜீவிகள் மத்தியிலும்கூட ஆழமாக வேரூன்றி இருப்பது இச்சிந்தனைக்கு ஒரு காரணமாக இருக்கலாம். வேளாளர் என்ற சாதியைத் தவிர மற்றெல்லாச் சாதிகளும் குறைவான சாதிகளே என்று கருதும் மரபார்ந்த சாதியக் கோட்பாட்டின் நிலையில் இருந்து விடுபடாத அல்லது அதன் எச்ச சொச்ச தாக்கங்களை இன்னமும் மனதில் கொண்டிருக்கிற ஒரு லிபரல் சிந்தனையாளருக்கு இவ்வாறு சாதிப் பெயரைச் சொல்வது இழிவான ஒரு விடயமாகத் தோன்றியிருக்கலாம். அவருக்குச் சாதிகள் இருப்பதும், அவற்றிடையே ஏற்றத் தாழ்வுகள் நிலவுவதும் முக்கியமல்ல. ஆனால், ஒரு நபரைச் சாதியின் பெயரால் இழித்துரைத்தல் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. சாதிப்பெயர் சொல்வது நாகரீகமற்ற, பண்பாடற்ற செயல்களில் ஒன்று என்பது அவரது கோட்பாடாக இருக்கும். இப்படிப்பட்ட ஒருவர் சாதிப் பெயர் பாவிக்கப்பட்டதற்காக அந்தக் கட்டுரையைப் பற்றியும், சரிநிகர் பற்றியும் அதிருப்தி அடைந்திருக்கலாம்.

இன்னொரு தரப்பில் இந்தச் சாதிப் பெயர் பாவிக்கப்படுவது, சாதிகள் இல்லையென்று நீங்கள் நம்பினாலும் கூட, வழக்கொழிந்து போன பழைய மரபின் பல்லாயிரமாண்டு வடுக்களையும், பண்பாட்டையும் மீள நினைவுபடுத்துவதால் அவசியமற்றது என்று கருதியிருக்கலாம். இந்தச் சாதிகளைக் குறிக்க இப்போது வழக்கிலுள்ள புதிய சொற்களைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று அவர் நினைத்திருக்கலாம். இதனாலும் கூட அதிருப்திப்பட்டிருக்கலாம்.

எது எப்படி இருப்பினும் 'கரையார்" என்ற சொல் பாவிக்கப்பட்டது குறித்து இந்த இரு தரப்பினருக்கும் உடன்பாடு கிடையாது என்பது தெளிவு. உண்மையில் குறிப்பிட்ட அந்தக் கட்டுரை சாதியப் பெயர்கள் தொடர்பாகவும், சாதிகளின் உயர்வு, தாழ்வு குறித்தும் பேசும் நோக்குடன் எழுதப்பட்ட கட்டுரை அல்ல. சிங்களச் சமூகத்தில் நிலவும் சாதியமைப்புகள் தொடர்பான அறிமுகத்தைச் செய்யவும், அந்தச் சாதிகளிடையே நிலவும் உறவுமுறை குறித்தும், சமூகச் செயற்பாட்டில் அவற்றுக்குள்ள பாத்திரங்கள் பற்றியும் பேசுவதற்கு உபயோகமான குறிப்புகளை மட்டுமே தெரிவித்தது. சிங்களத்தில் 'கராவ' என்ற சொல்லுக்குக் 'கரையார்' என்ற சொல்லே அதிகப் பொருத்தமானது என்று கருதியதால் அது அங்கு பயன்படுத்தப்பட்டது. மற்றப்படி அதற்கும் புலிகளின் தலைவரின் சாதிப் பெயரைச் சொல்லிக் காட்டுவதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இதைக் கட்டுரையைப் படித்தவர்கள் புரிந்திருப்பார்கள்.

ஆனால், சாதிப் பெயர்களைப் பாவிப்பது என்பது அதுவும், பிரபுத்துவச் சமூக அமைப்பினால் பாவிக்கப்பட்ட அதே சொற்களைப் பயன்படுத்திப் பாவிப்பது என்பது - முடியுமான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், தவிர்க்கப்பட வேண்டும் என்று கருதுவதற்குச் சில வரலாற்று நியாயங்கள் இருப்பதை மறுத்துவிட முடியாது. கடந்த ஒரு சில தசாப்தங்களாக யாழ்ப்பாணச் சாதிய அமைப்பு முறையில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள், இந்த நிலையை உருவாக்கி வந்துள்ளன. 'இருபுறம் துய்யவந்த உயர் வேளாள குலத்'தினரின் அகராதியில் பயன்படுத்தப்பட்டு வந்த கரையார், கோவியர், வண்ணார், அம்பட்டர், பள்ளர், பறையர், நளவர் போன்ற சாதியப் பெயர்கள் அவ்வச் சாதியைச் சேர்ந்தவர்களால் தம் சாதிப் பெயர்களாகப் பாவிக்கப்படுவதில்லை. தமது சாதிக் குழுமத்தைக் கூட அவர்கள் - அந்தச் சாதிக்குரியதாகக் கருதப்பட்ட தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் ஆயினும் கூட - அந்தப் பெயர்களைப் பயன்படுத்திச் சொல்லிக் கொள்வதில்லை. அவை உயர் சாதியினரால் - வெள்ளாளரால் - இழிவுபடுத்தல் நோக்குடன் பயன்படுத்தப்பட்ட சொற்களாகவே இருந்து வருகின்றன.

'கரையார்' என்ற சாதிப் பெயரை எடுத்துக் கொண்டால் கடற்கரையோரம் வாழ்பவர்கள் என்ற அர்த்தத்தில் இந்தச் சொல் அமைந்திருந்த போதும், இந்தச் சொல் வெறும் அந்தப் பண்பை மட்டும் வெளிப்படுத்தவில்லை. இந்தச் சாதி யாழ்ப்பாணச் சாதி அமைப்பில் அடிமை குடிமைச்சாதிகளாக ஒடுக்கப்பட்ட சாதிகளுள் ஒன்றல்ல என்ற போதும் வேளாளருக்குச் சமமான சாதியாகக் கணிக்கப்பட்டிருக்கவில்லை. பொருளாதார ரீதியாக முற்றுமுழுதாக நிலப்பிரபுத்துவத்துக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லாதிருந்த போதும் ஆட்சி அதிகாரம் நிலப்பிரபுத்துவத்தின் கையில் இருந்தமையால் சாதிய ஒழுங்கமைப்பில் வேளாளர் முதன்மைச் சாதியராகக் கொள்ளப்படும் நிலைமையே நிலவியது. அடிமை குடிமைகளாக இருந்த சாதியினர் முழுக்க முழுக்க வேளாளரில் தங்கியிருப்போராக இருந்ததால் அவர்களது நேரடிக் கட்டுப்பாட்டுக்கும், ஒடுக்குதலுக்கும் உள்ளாக வேண்டியிருந்தது. கடல்சார் உற்பத்தியில் ஈடுபட்டிருந்ததன் காரணமாக, மீனவ சமூகத்தினரிடையே தனித்துவமும், சுயாதீனமான நிலைமையும் ஏனைய சாதியினரை விட அதிகளவாக இருந்தது எனலாம்.

அடிமை முறை ஒழிக்கப்பட்டுவிட்ட பின்பும் கூட நீண்ட காலமாகக் குடிமை முறை தொடர்ந்து நிலவியது. மிக அண்மைக் காலம் வரை இந்த நிலைமை நீடித்தது. குறிப்பாகச் சடங்குகளிற்காகவேனும் இந்தக் குடிமை முறை மிகவும் முக்கியமான ஒன்றாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இலவசக் கல்வியின் வருகையும், கட்டாயக் கல்வித்திட்டமும் இந்த நிலைமையில் ஓரளவுக்கு உடைவை ஏற்படுத்துவதற்கான பின்புலத்தை ஏற்படுத்தின. குடிமைத் தொழில்களோடு இணைந்திருந்த, தீண்டாமை குறித்த விழிப்புணர்வு ஏற்பட இந்தக் கல்வியே அடிப்படைக் காரணமாக இருந்தது எனலாம். தீண்டாமை ஒழிப்புக்கான பல போராட்டங்களை இடதுசாரி இயக்கங்கள் முன்நின்று நடத்தின. இந்தப் போராட்டங்கள், இலவசக் கல்வி காரணமாக உருவாகி வந்த மத்தியதர வர்க்கத்தின் துரித வளர்ச்சி என்பன சாதியம் குறித்த மரபார்ந்த நம்பிக்கைகளை கேள்விக்குள்ளாக்குகின்றன. சாதியமைப்பை ஒரு தொழில் சார் சமூகப் பிரிவினையாகக் கருதவும், தீண்டாமையை ஒழிக்கப்பட வேண்டிய ஒன்றாகக் கருதவும் வேண்டும் என்ற கருத்து வளர்ச்சி பெற்றது. குடிமைத் தொழில்களாக இருந்த தொழில்கள் அனைத்தும், மெல்ல மெல்ல வெறும் தொழில்களாகவும், அந்தத் தொழில்களைச் செய்யும் சமூகங்கள், தொழில்சார் சமூகங்களாகவும் கருதப்படும் நிலை வளர்ந்தது. சலவைத் தொழில், சவரத் தொழில் (அல்லது சிகையலங்காரம்), சீவல் தொழில், கூலித் தொழில், நகர சுத்தித் தொழில் என்று தொழில்சார் சமூகங்களாக இந்தத் தொழில்களைச் செய்யும் குழுமங்கள் அழைக்கப்படத் தொடங்கின.

'வண்ணான்' என்ற சொல் 'சலவைத் தொழிலாளி' என்றும் 'அம்பட்டன்' என்ற சொல்ல 'சவரத் தொழிலாளி' என்றும் சொற்களின் பாவனை மாறத் தொடங்கியது. பிரபுத்துவ சாதியமைப்பு உடையத் தொடங்கிய காலங்களில் 'வண்ணான்', 'அம்பட்டன்' போன்ற சொற்கள் மரியாதைக் குறைவான சொற்களாகவும், 'கட்டாடி', 'பரியாரி' போன்ற சொற்கள் அதற்குப் பதிலான சொற்களாகவும் பாவிக்ப்பட்டு வந்துள்ளன. ('கண்டால் கட்டாடி, காணாட்டில் வண்ணான்' என்று வழக்கிலுள்ள பழமொழி இதனை நன்கு விளக்கும்.)

குடிமைச் சாதியினர்களில் முக்கியமான சலவை மற்றும் சவரத் தொழில்களைப் புரிந்தோர் 'கடைகளை' உருவாக்கித் தொழில் செய்யத் தொடங்கினர். 'லோன்றி'களும், சலூன்களும் உருவாகத் தொடங்கின. இவ்விரண்டு தொழில்களும் நிலம் சார்ந்த உழைப்பைக் கொண்டிராமையால் வேளாளர்களில் அதிகம் தங்கியிருக்க வேண்டியிருக்கவில்லை. குடியிருக்க நிலம், சொந்தமாகவோ அல்லது ஆட்சி மூலமாகவோ பெற்றிருந்த இந்தச் சாதிகளைச் சேர்ந்தோர், வீடுகளுக்குச் சென்று 'குடிமை' செய்வதற்குப் பதில், தம்மை அவ்வத் தொழில்களைச் செய்யும் தொழிலாளர்களாக மாற்றிக் கொண்டனர். பிற்பாடு இந்தத் தொழில்களும் குட்டி முதலாளிகளையும், தொழிலாளர்களையும் கொண்ட சிறு சிறு தொழில்களாக வளர்ந்தன.

இத்தகைய நடுத்தர வர்க்க எழுச்சியின் தாக்கமும், அதன் காரணமாக யாழ்ப்பாணச் சாதியமைப்பில் தொழில்சார் குழுமங்களாகச் சாதிகள் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ள விரும்பியமையும் ஏற்கெனவே வழக்கிலிருந்த பிரபுத்துவ, சாதீய அடிப்படையிலான சாதீயப் பேர்களைப் பாவிப்பதைத் தவிர்க்கும் நிலையை உருவாக்கியது. இதைத் தவிர, அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில் தேடிச்செல்கையில் இந்தச் சாதியச் சிந்தனைகளும், ஒழுங்கும் அர்த்தமற்றதாகி, புதிய உற்பத்திக்கேற்ற புதிய உறவு நிலைகள் உருவாகத் தொடங்கின. சாதியச் சிந்தனைகள் கிராமப் புறங்களில் ஆழமாக இருக்கையில், நகர்ப் புறத்தில் அவை பெருமளவுக்குப் பலமிழந்து போகத் தொடங்கின. இன்று இந்த நிலை கிராமங்களிலும் பெருமளவுக்கு வளர்ந்துள்ளது எனலாம்.

சாதியமைப்பைத் தகர்ப்பதில், இடதுசாரி இயக்கங்களின் போராட்டங்கட்குப் பிறகு நாட்டின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியும், அது ஏற்படுத்திய புதிய இடம்பெயர் வாழ்வு முறையும் கூடப் பெரும் பங்கு வகித்தன எனலாம். குறிப்பாகத் தீண்டாமையை இல்லாதொழிப்பதில் இவை பெரும் பங்களித்தன எனலாம். விடுதலை இயக்கங்கள் தோன்றிய 80களின் ஆரம்பத்தில் இடதுசாரி சார்புள்ள இயக்கங்களைச் 'சாதி-குறைந்த, கண்டதுகளை'யும் சேர்த்த இயக்கமாக முத்திரை குத்தும் போக்கு நிலவிய போதும், இந்தப் போக்கு நீண்ட காலம் நீடிக்கவில்லை. ஆயினும், - தீண்டாமை பெருமளவு உடைவுற்றுள்ள போதும் - திருமணம் இன்னமும் ஒரு சுயாதீனமான விடயமாக மாறவில்ல. சாதியச் சிந்தனைகளின் தாக்கம் வெவ்வேறு அளவுகளில் வெவ்வேறு மட்டங்களில் அடங்கியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். புலம்பெயர்ந்த நாடுகளில் நடக்கும் சாதிச்சண்டைகள் இதற்கு நல்ல உதாரணங்கள்.

இந்தத் தாக்கம் அடிப்படையில், பழைய அதே மரபுசார்ந்த பிரபுத்துவச் சாதீய அடிப்படையில் அமைந்ததாகவே உள்ளது. இதனால் தான் சாதிப் பெயர்களைப் பழைய சொற்களைப் பாவித்துச் சொல்கையில் அவை இழிவுபடுத்தும் சொற்களாக இனங்காணப்படுகின்றன. கடற்தொழிலாளர்கள் என்ற சொல்லும் மீனவர் என்ற சொல்லும் கரையார் என்ற சொல்லும் ஒரு சமூகக் குழுமத்தைக் குறிக்கும் போதும், இவை மூன்றும் வெவ்வேறு தாக்கத்தை ஏற்படுத்த வல்லன. தொழில் சார்ந்து அழைக்கப்படும் போது, நடுத்தர வர்க்கத்தின் 'தொழிலின்' முக்கியத்துவம் குறித்த சிந்தனை வெளிப்படுகின்றது. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்பதும் 'செய்யும் தொழிலே தெய்வம் என்பதுவும் அதன் தொழில் சார் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. செய்பவர், அவரின் சாதி என்பவை இரண்டாம் பட்சமாகி, அவரது தொழில் முதன்மைப்படுகிறது. இது முதலாளித்துவத் தொழிற் புரட்சியின் காரணமாக உருவாகி வளர்ந்த கோட்பாடு.

இன்று இந்தக் கோட்பாட்டின் தாக்கம் பலமாக எல்லா மத்திய தர வர்க்கத்தினரிடமும் வேரூன்றி இருப்பதைக் காணலாம். எல்லாமே 'தொழில்' என்ற வரையறைக்குள் வருவதால் ஒருவகை சமத்துவம் இத் 'தொழில்' குழுமங்களிடையே இருப்பதாக உணரப்படுகிறது. இவர்கள் அனைவரும் சமூக உற்பத்தியின் வெவ்வேறு கடமைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் என்ற எண்ணக் கரு வலுப்பெறுகிறது. இந்தச் சிந்தனை பழைய சொற்கள் பாவிக்கப்படுவதை இழிவுபடுத்தும் நோக்குடனான பாவனையாகக் காண்கின்றது.

சாதியில் ஏற்றத்தாழ்வு கிடையாது என்ற உண்மையை ஏற்றுக் கொண்டால் இந்தச் சொற்களால் ஒருவரை இழிவு படுத்திவிட முடியாது. இன்றைய சமூகத்தில் அர்த்தமிழந்த சொற்களாக மாறிக் கொண்டிருக்கின்றன தொழில்சார் சமூகங்களாகச் சாதிகள் தம்மை மாற்றியமைத்தமையின் அடுத்த கட்டமாகத் தொழில்களை நோக்கிய தொழிலாளர் உருவாக்கங்களும் நடக்கத் தொடங்கியுள்ளன. சலவை, சவரம், கடற்தொழில், நகைத் தொழில், இரும்புத் தொழில் என்பவை இன்று அவ்வக் குறிப்பிட்ட சாதியினரால் மட்டுமல்லாமல் பிறராலும் செய்யப்படுகின்றன.

இந்த அடிப்படையில் சாதியப் பெயர்கள் வெறுமனே ஆய்வுக் கட்டுரைகளில் மட்டும் அர்த்தம் தருகின்றவையாக மாறிவிட்டுள்ளன. அல்லது இழிவுபடுத்தும் நோக்கத்துடன் பேசப்படுபவையாக அமைந்துள்ளன.

நடுத்தர வர்க்கத் தொழில் தேடும் நகர்வுகளின் போது ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோர்க்கு முதலாளித்துவத் தொழில் முறை அதிகார அடுக்கில் கீழ் மட்ட வேலைகளே கிடைத்தன. றெயில் வேலையில் கல் அள்ளுபவர் முதல் காவலாளி, ஓட்டுநர் வரையான தொழிலும், பஸ் டிப்போக்களில் 'மெக்கானிக்' வேலை போன்றவையுமே கிடைத்தன. ஆனால் விரைவிலே படித்த மத்தியதர வர்க்க வேலையில்லாப் பிரச்சினை இந்த நிலைமைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எல்லாவிதமான வேலைகளையும், எல்லாச் சாதிகளைச் சேர்ந்தவர்களும் செய்யும் ஒரு நிலை இன்று வளர்ந்து விட்டிருக்கின்றது என்றே சொல்ல வேண்டும். சாதியை விடவும் கல்வியும், அதிகாரமும் இன்றைய நிலையில் அதிகாரப்படிநிலை ஒழுங்கை உருவாக்குகிறதையும் அது, இன்னொரு வித சமூகக் குழும உருவாக்கத்தை ஏற்படுத்தி வருவதையும் காணலாம்.

நாம் திரும்பவும் பழைய இடத்துக்கு வருவோமானால் சரிநிகரில் வெளியான இக்குறித்த கட்டுரையில் 'கரையார்' என்ற சொல் பாவிக்கப்படுவதற்குப் பதில் கடற்தொழிலாளர் என்ற சொல் பாவிக்கப்பட்டிருந்தால் இந்த விமர்சனங்கள் சிலவேளை எழுந்திருக்க வாய்ப்பில்லாமல் போயிருக்கலாம்.

எவ்வாறாயினும், இத்தகைய தம்மிடையே பல்லாயிரம் ஆண்டு பிரபுத்துவக் கலாசாரச் சுமையைச் சுமந்து கொண்டிருக்கும் சொற்கள் தவிர்க்கப்படுதல் நல்லது. சாதியப் பெயர்கள் மட்டுமல்ல, வேறெந்த பிரபுவத்துக் கலாசாரப் பண்புள்ள சொற்களும் இவ்வாறான விலக்குதலுக்கு உரியன. சரிநிகர் கட்டுரையில் இழிவுபடுத்தும் நோக்கம் எதுவும் இல்லாதிருப்பினும் கூட, இத்தகைய வியாக்கியானத்திற்கான வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. அதிலும் அதே பழைய சாதீயத் தாக்கங்கள் இன்னமும் முற்றாக நீங்காத வரை இந்த நிலைமை இருக்கவே செய்யும்.

இவற்றைத் தவிர்ப்பதற்கு முடியுமானவரை பொருத்தமான சொற்களைத் தேடிப் பயன்படுத்துவது நல்லது.

நன்றி - நூலகத்திட்டம்



# பொ.ஐ.முவுக்கு ஆதரவளித்தது எங்களுடைய தவறு தான்!

– சுரேஷ் பிரேமச்சந்திரன்

**ஜனாதிபதித் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப் எந்தக் கட்சிக்கும் ஆதரவளிப்பதில்லை. என்ற நிலைப்பாட்டை எடுத்ததற்கான காரணம் என்ன?**

ஐ.தே.க.வுக்கோ, பொ.ஐ.மு வுக்கோ வாக்களிக்கும்படி கோரக் கூடிய தார்மீக உரிமை எங்களிடம் இல்லை. ஏதாவது ஒரு கட்சிக்கு ஆதரவளிக்கிறோம் என்று சொல்லிவிட்டு மக்களிடம் போய் அவர்களுக்கு வாக்களியுங்கள் என்று கேட்க முடியாது.

இரண்டாவது வாக்களிக்கப் போகாமல் விடுவது என்பது வடகிழக்கைப் பொறுத்தவரை அங்கு வாக்கு மோசடிக்கே வழிவகுக்கும். அந்த வகையில் மக்கள் வாக்குச் சாவடிக்குப்போய் அவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்களோ அதனைச் செய்ய வேண்டும் என்பது தான் எமது கட்சி எடுத்த முடிவு. வாக்குச் சாவடிக்குப் போய் குறிப்பாக இன்னாருக்கு வாக்களியுங்கள் என்று மக்களிடம் கேட்க முடியாது என்பது தான் எமது முடிவு.

**ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கே தேர்தலில் வாக்களிக்க வேண்டும். அவர் தான் சமாதானத்தினைப் பற்றி ஓரளவாவது பேசுகிறார். இரண்டாவது முறையும் அவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டால் இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார். ஜே.ஆர் கூட இரண்டாவது முறை தெரிவு செய்யப்பட்ட போது தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை — இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்தினார் என்று கூறப்படும் அபிப்பிராயம் பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?**

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தானாக இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைக் கொண்டு வரவில்லை. அது இந்தியாவால் திணிக்கப்பட்டது. ஜே.ஆர். விரும்பிக் கொண்டு வந்ததோ அல்லது ஜே.ஆர் இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியானதால் கொண்டு வந்ததோ அல்ல. இந்தியாவின் நிர்ப்பந்தத்தினால் கொண்டு வரப்பட்டது. டிக்சிற் அதனை நேரே சொல்லி இருக்கிறார். நீர்மூழ்கிக் கப்பல் எல்லா வற்றையும் கோல்பேஸ் கடலில் கொண்டு வந்து வைத்துக் கொண்டே அவர்கள் அந்த ஒப்பந்தத்திற்கு வந்ததாக. ஆகவே நிர்ப்பந்தத்தின் மூலம் உருவாக்கப் பட்டது தான் அது.

இதேபோல சந்திரிகாவினுடைய இரண்டாவது ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் அவர் இப்பிரச்சி னையைத் தீர்ப்பார் என்று சொல்லலாம். ஆனால் இலங்கை அரசியலமைப்பின்படி 3வது முறையாக ஜனாதிபதியாக ஒருவர் வர முடியாது. எனவே என்ன நிர்ப்பந்தம் இரண்டாவது முறை வந்தால் இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று. இரண்டாவது ஆட்சிக் காலம் முடிய மூட்டையைத் தூக்கிக் கொண்டு போனால் யாரிடம் கேட்பது?

இரண்டாவதாக, நாங்கள் ஆரம்பத்தில் யோசித்தோம். சோஷலிச சிந்தனைகள் உள்ள ஒருவர், இனத்துவேசமற்றவர். ஆகவே பிரச்சினையைத் தீர்ப்பார் சிங்கள மக்கள் மத்தியிலே துணிச்சலாக சில கருத்துக்களைச் சொல்லக் கூடியவர் என்றெல்லாம் சொன்னோம்.

ஆனால் நடைமுறை அவ்வாறு இருக்கவில்லை. தென்னாபிரிக் காவில் அவர் பேசிய பேச்சும், யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டில் வந்தவுடன் அவர் நடந்து கொண்ட முறையும் அதற்குப் பின்னைய அவருடைய நடைமுறைகளும் அவருடைய சுயரூபத்தைக் காட்டுகிறது. ஆகவே இரண்டாவது முறை சந்திரிகா ஜனாதிபதியாக வந்தால் பிச்சினையத் தீர்த்து விடுவார் என்று சொல்ல அதை நம்ப எந்த அடித்தளமுமில்லை.

**கடந்த 5 வருட ஆட்சியில் பொ.ஐ.மு. இனப்பிரச்சினையை மோசமாக்கி இருக்கிறது. ஆகவே அதற்கு வாக்களிப்பதில் பிரயோசனமில்லை. ரணிலோ கறைபடாதவர். தான் ஜனாதிபதியானால் இரண்டு வருடங் கள் பிரபாகரனிடம் ஆட்சியைக் கொடுப்பதாக வேறு பேசி இருக்கிறார். ஆகவே ரணிலுக்கு வாக்களிக்கலாம் என்று சொல்கிறார்களே ஒரு தரப்பினர்...**

ரணில் ஐ.தே.கட்சியின் ஒரு பிரதிநிதி என்பதை நாம் மறந்து விடமுடியாது. அவர் கூட இனப் பிரச்சினைக்கு திட்டவட்டமான தீர்வு இது தான் என்று இதுவரை சொல்லவில்லை. சொன்னாலும் கூட இவர்கள் சொல்வது எல்லாவற்றையும் நம்பத்தான் வேண்டுமா என்று எங்களையே நாங்கள் கேட்டுப் பார்க்க வேண்டும்.

நானோ ஈ.பி.ஆர்.எல்.எப்.போ ஒரு காலத்தில் நம்பியவர்கள் தான். ஆனால் அதே தவறை நாம் மீளவும் விட வேண்டுமா? மக்களுடன் உடன்படிக்கை என்று ரணில் பிரசுரம் வெளியிடலாம். தேர்தல் முடிந்த பிற்பாடு அதற்கு என்ன நடக்கும் என்று சொல்ல வியலாது. இவை எதுவும் நம்பிக்கைக்கு உரியவையல்ல.

**அவ்வடிப்படையில் பார்க்கும் போது பொ.ஐ.மு. இப்பிரச்சினையை தீர்க்கும் என 94ல் நீங்கள் பொ.ஐ.— மு.வுக்கு கொடுத்த ஆதரவும் ஒத்துழைப்பும் அது தொடர்பாக அன்று நீங்கள் எடுத்த முடிவுகளும் தவறானவை என்று எண்ணுனுகிறீர்களா?**

நிச்சயமாக. அவை தவறான முடிவுகள் தான். அதனை இல்லை என்று சொல்ல முடியாது. தவறான முடிவுகளாக அவை இல்லா விட்டால் நாம் இவ்வாறு தடைப்பட்டிருக்க மாட்டோம். அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்ற வில்லை. அவர்கள் சொன்ன மாதிரி நடக்கவில்லை என்பது தான் பிரச்சினை.

**இடதுசாரிப் பாரம்பரியத்தில் வந்ததாகச் சொல்லிக்கொள்ளும் நீங்கள். இனவாத அரச கட்டமைப்பின் மேல் இயங்கும் இந்தக் கட்சிகள் வாக்குப் பொறுக்குவதற்காகச் சொன்னவற்றை எப்படி அப்படியே நம்பிக்கொண்டீர்கள்?**

இந்த இரு கட்சிகளுக்குமே இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற உளசுத்தி இல்லை என்று தெளிவாகப் புரிகிறது. அதை அவர்கள் தமது நடவடிக்கைகள் மூலம் திட்டவட்டமாக நிரூபித்திருக் கிறார்கள். ஆகவே ஒரு மூன்றாம் தரப்பு இல்லாமல் ஒரு கூட்டாட்சியோ அல்லது குறைந்த பட்சம் சமஷ்டி முறையிலோ இதனைத் தீர்க்க முடியாது. அவ்வாறு ஒரு மூன்றாம் தரப்பு இல்லாமல் இந்த யுத்தத்தை நிறுத்த முடியாது. அது ஒரு தொடர் யுத்தமாக தொடர் அழிவாக நீண்டு கொண்டே செல்லும்.

**ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சியில் தமிழ் கட்சிகள் ஈடுபட்டிருந்தன. ஆனால் பின்னர் அது கைவிடப் பட்டது. அது கைவிடப்பட்ட தற்கான காரணம் என்ன?**

இம்முயற்சியில் ஈ.பி.ஆர்.எல். எப்புடன் ரெலோ, புளொட் ஆகியனவும் சேர்ந்து ஈடுபட்டன. இவ்விரு பிரதான கட்சிகளையும் நம்பிப் பிரயோசனமில்லை. ஒரு 3ம் தரப்பு மத்தியஸ்தம் அவசியமானது. தமிழ் கட்சிகள் எல்லாம் சேர்ந்து நிறுத்தும் வேட்பாளருக்கு கிடைக்கும் இரண்டு அல்லது மூன்று இலட்சம் வாக்குகள் கிடைக்கும். அது எமக்கு கிடைத்த ஒரு அங்கீகாரமாக இருக்கும். சர்வதேச ரீதியாக தமிழ் மக்கள் ஒரே குரலில் ஒரு கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று தான் நாங்கள் நம்பினோம். இதற்காகத் தான் ஒரு பொது வேட்பாளரை நிறுத்த முயற்சித்தோம்.


ஈ.பி.டி.பி. அதைப் பற்றிப் பேசவே தயாராக இருக்கவில்லை. சந்திரிகா வுக்கு ஆதரவு வழங்குவது என்று அவர்கள் ஆரம்பம் முதலே திடமாக இருந்ததால் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

கூட்டணியுடனும் இரண்டு முறை பேசினோம். அவர்களிடம் இருந்தும் திடமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. நாம் பேசிவிட்டு சொல்கிறோம் என்பார்கள். ஆன்ல் பதில் ஒருபோதும் வராது.

குமார் பொன்னம்பலம் இடையில் எங்களுடன் வந்து சேர்ந்து கொண்டார். பின்னர் அவருக்கு ஏற்பட்ட இடைஞ்சலால் அவரும் நிறுத்திக் கொண்டார். வடகிழக்கில் அந்த நேரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் குறிப்பாக யுத்தச் சூழல் மோசமடைந்த நிலைமை. குறிப்பாக அந்த நிலையில் தமிழ் மக்களால் வாக்களிக்க முடியுமா? என்ற கேள்வி எங்களுக்குள் எழுந்தது. எனவே அதனை நாங்கள் கைவிட்டோம்.

**நீங்கள் வரதராஜப் பெருமாளை கட்சியிலிருந்து நீக்கியுள்ளதாக அறிவித்—துள்ளீர்கள். ஆனால் அவரோ தன்னை நீக்க உங்களுக்கு அதிகாரம் இல்லை என்கிறாரே?**

1990ல் பத்மநாபாவும் ஏனைய முக்கிய தோழர்களும் கொல்லப் பட கட்சியின் பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டது. அதற்குப் பிறபாடு நடந்த காங்கிரசில் நான் தான் ஏகமனதாக தெரிவு செய்யப் பட்டேன். காங்கிரசிலோ மற்றும் கட்சி நடவடிக்கையிலோ பங்கு பற்ற முடியாத நிலையில் தான வரதராஜப் பெருமாள் அன்று இருந்தார். அதற்குப் பிறகு 1999 ஜனவரி வரை அவர் இந்தியாவில் தான் தங்கி இருந்தார். அவர் விரும்பியிருந்தால் பல வருடங்களுக்கு முன் இங்கு வந்திருக்கலாம். ஏன் அங்கிருந்தே கட்சிப் பணியைச் செய்திருக்கலாம். அவர் கடந்த 9 வருடத்தில் கட்சிக்காக எதனையுமே செய்யவில்லை.



அவரை நான் கட்சியிலிருந்து நீக்கியது என்னுடைய விருப்பத் தாலோ அல்லது எனக்கும் அவருக்குமிடையிலான போட்டியினாலோ அல்ல. கடந்த 10 மாதங்களாக அவருடைய நடவடிக்கைகள் கட்சியின் நலன்களுக்கு விரோதமாக இருந்தது என்பது தான் உண்மை. கட்சியின் இமேஜைப் பாதிக்கும் நடவடிக் கைகளையே அவர் மேற்கொண் டார்.

அவர் இலங்கை வந்ததும் அவரை விமான நிலையத்தில் வரவேற்றதும், அவரைப் பாதுகாப்பாக வைத்திருந்ததும் சிறீலங்கன் சி.ஐ.டியினர் தான். வருகிற பொழுதுகூட 9 வருடங்களுக்குப் பிறகு வரும் அவர், கட்சிக்கோ கட்சியின் செயலாளர் நாயகத்துக்கோ அறிவிக்கவில்லை. அவர் அறிவித்தது இங்குள்ள சி.ஐ.டியினருக்கே. அவரை அழைத்து வந்ததும் இங்குள்ள சி.ஐ.டியினரே. அவரைப் பாதுகாத்து வைத்திருப்பதும் சி.ஐ.டியினரே. இதில் ஒரு விடயம் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. அதாவது அவருக்கு கட்சியிலுள்ள தோழர்களை விட சி.ஐ.டியினர் மீதுதான் அதீத நம்பிக்கை. தோழர்கள் மீது நம்பிக்கையீனம் தான் இருந்தது. மற்றது கட்சிக் கட்டுப்பாடுகளை அவர் தொடர்ந்தும் மீறி வந்திருந்திருந்தார். அவர் வந்த் பின்பும் மத்திய குழுவை கூட்டி பேசுவதற்காக 3 மாதங்களாக முயன்றும் கூட ஜனாதிபதியைச் சந்திக்கும் வரை கட்சியின் மத்திய குழுக் கூட்டத்துக்கு வரமாட்டேன் என்று மறுத்திருந்தார் அவர்.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கும் கட்சிக் கூட்டத்திற்கும் என்ன தொடர்பிருக்கிறது என்று எனக்கு விளங்கவில்லை. ஜனாதிபதியை சந்திப்பதற்குக் கூட கட்சி அங்கீகாரம் கொடுத்து போவது தான் சரியான நடைமுறையும் வழிமுறையுமாக இருக்கும்.

இதேபோல் அரசியல் தீர்வுத் திட்டத்திற்கு திருத்தங்களை நாங்கள் தனியாகவும் 5 தமிழ்க் கட்சிகளும் சேர்ந்து கூட்டாகவும் கொடுத்திருந்தோம். இவர் தானும் சில திருத்தங்களைக் கொடுத்திருந்தார். அதற்கும் கட்சியுடன் கலந்தாலோசிக்கவில்லை. இவ்வாறு கட்சிக் கட்டுப்பாட்டை மீறி தன்னிச்சையாகவே செயற்பட்டார்.

இறுதியாக கட்சியின் மத்திய குழு கூடித்தான் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் என்று பத்திரிகைப் பேட்டியில் கூறியவர், கட்சி மத்திய குழு கூட முன்னரே ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தி அவருக்கு ஆதரவளிப்பதாக உறுதிமொழியும் கொடுத்து அதற்கான பிரச்சார வேலைகள் செய்வதற்காக சுவரொட்டிகளையெல்லாம் யாழ்ப்பாணம் அனுப்பி ஈ.பி.ஆர்.எல்.எப் தோழர்களைக் கொண்டே அதனை ஒட்டப் பண்ணினார்.

அவர் ஜனநாயகம், கூட்டு முடிவு பற்றிப் பேசுவதெல்லாம் சுத்தப் பேத்தலும், பினாத்தலும் தான். அவருடைய இவ்வாறான நடவடிக்கைகள் கட்சியைப் பாதித்ததால் இது சம்பந்தமான முடிவு எடுத்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தால் தான் நாங்கள் அவரைக் கட்சியை விட்டு நீக்குவதாக முடிவு எடுத்தோம்.

**நடந்த சம்பவங்களைப் பார்க்கும் போது இப்படி ஒரு கேள்வி எழுகிறது. அவராக இங்கு வந்தாரா அல்லது அரசாங்கத்தால் அழைத்து வரப்பட்டாரா?**

அவர் சொல்கிறார் தானாக வந்தார் என்று. ஆனால் நிச்சயமாக அரசாங்கத்தினுடைய உதவி அவருக்கு தேவைப்படுகிறது. அரசாங்கத்துக்கு அவருடைய தேவை இருக்கிறது. ஆகவே பரஸ்பர தேவை அடிப்படையில் அவர் வரவழைக்கப்பட்டிருக்கிறார்.

**கட்சியின் காங்கிரஸ் கடைசியாக எப்பொழுது கூடியது பெருமாள் கடைசியாக எப்போது கலந்து கொண்டார்.**

92ல் கட்சியின் காங்கிரஸ் கூடியது. அதில் அவர் கலந்து கொள்ளவில்லை. 9 வருடங்களுக்கு பிறகு கடந்த பெப்ரவரியில் கூடிய மத்திய குழுவில்தான் அவர் கலந்து கொண்டார். இடைப்பட்ட காலத்தில் அவர் எந்தக் கட்சிக் கூட்டத்திலும் கலந்துகொள்ள வில்லை.

**தன்னை நீக்குவதற்குள்ள அதிகாரம் உங்களுக்கு இல்லை என்று சொல்லியிருக்கிறாரே?**

அது தவறு. மத்திய கமிட்டி உறுப்பினர்கள் மொத்தம் 15 பேர். அதில் இருவர் இப்போது கட்சியில் இல்லை. மீதி 13 பேர். இவர்களில் இன்றுவரை அவருடன் 4 பேர் தான் இருக்கிறார்கள். இந்தியாவிற்கு ஆள் அனுப்பி இருக்கிறார்கள், வறுமையில் உள்ள தோழர்களை விலைக்கு வாங்கி வர. ஆகவே மத்திய குழுவில் பெரும்பாலானோர் அவருடன் இருப்பதாகச் சொல்வது சுத்தப் பொய்.

**நீங்களும் வில்சன் என்பவரும் கட்சியின் நிதியை கையாடிவிட்டதாகக் கூறுகிறாரே பெருமாள்?**

உண்மையில் ஒரு அமைப்பில் நல்ல பெயருடன் இருக்கும் ஒருவருக்கு சேறு பூச வேண்டுமாயின் நிதி மோசடிக் குற்றச்சாட்டை அவிழ்த்து விடுவது இங்கு சாதாரணம்.

லட்சக் கணக்கில், கோடிக்கணக்கில் மோசடி செய்யப்பட்டது என்று பிரச்சாரம் செய்வது இதற்குத்தான்.

இந்திய அமைதிப்படை இருந்து காலத்தில் முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாள் ஊடாகத் தான் முழுக் கணக்கு வழக்கும் நடைபெற்றது. ஆனால் இதுவரை அவர் தன்னுடைய காலத்தில் எத்தனை மில்லியன் அவருடைய கைக்குக் கிடைத்தது. அவை எங்கே? என்று எந்தக் கணக்குமில்லை. எதுவுமே கிடையாது. ஆனால், முதன் முறையாக 1995இல் 90-95ம் ஆண்டுக்கான கணக்குகள் யாவும் என்னால் மத்திய குழுவிடம் ஒப்படைக்கப் பட்டது. நான் அதற்குப் பொறுப்பாக இருந்ததால் அதனைச் செய்தேன். அதன்பிறகு நிதிப்பொறுப்பாளர் ஒருவரே அதனைக் கையாண்டு வருகிறார். ஒரு சதம் கூட நான் எடுத்தேன் என்று நிரூபிக்க வரதராஜப் பெருமாளால் முடியாது. ஆனால் அதே நேரம் மத்திய குழு கூடி அவரிடம் கணக்கு கேட்ட போது அவரால் எதுவித பதிலும் சொல்ல முடியவில்லை.

**இலங்கை — இந்திய ஒப்பந்த காலத்தில் இந்தியாவால் பெரும் தொகைப் பணம் வழங்கப்பட்டது என்றும் அதில் முறை கேடுகள் ஏராளமாக இடம்பெற்ற தாகவும் கூறப்படுவது பற்றி...**

இலங்கை- இந்திய ஒப்பந்தக் காலகட்டத்தில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டது. ஈ.பி.ஆர். எல்..எப் . போட்டி யிட்டது. தமிழ் தேசிய இராணுவம் உருவாக்கப்பட்டது. இதற்காகப் பல இளைஞர் கள் துரத்திப்பிடித்து இணைக்கப் பட்டார்கள். இவர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டது செலவு செய்யப்பட்டது உண்மை. இவை மறுப்பதற்கான விடயங்கள் அல்ல. இன்னும் சொல்லப் போனால் குடிமக்கள் தொண்டர்படை உருவாக்கப்பட்டது. இந்தியா அவர்களுக்கு பயிற்சி கொடுத்தது. ஆரம்பத்தில் அவர்களுக்கு சம்பளம் கூட இந்தியாவால் கொடுக்கப்படும் என்று ஒப்பந்தங்கள் கூட ஏற்படுத்தப்பட்டன. இந்த வகையில் பல கோடி ரூபாய்கள் இவ்வாறான வேலைகளுக்கு இந்தியாவால் கொடுக்கப்பட்டது.

இவை எல்லாமே முதலமைச்சரூடாகவே நடைபெற்றன. இவற்றிற்கு இன்று பதில் சொல்லக்கூடிய ஒரே ஒரு ஆள் அன்று முதலமைச்சராக இருந்த வரதராஜப் பெருமாள் தான்.

இவற்றுக்காக எவ்வளவு வந்தது? எவ்வளவு செலவு செய்யப்பட்டது?

கட்சியில் யாருக்கும் அதைப்பற்றித் தெரியாது.

**கட்சியின் செயலாளர் நாயகம் என்ற வகையில் இவைபற்றி எதுவுமே உங்களுக்குத் தெரியதா?**

இது பற்றி மத்திய குழுவில் நான் கேட்டபோது எதுவித கணக்கு வழக்கும் இல்லை என்றே சொல்லப்பட்டது. இது தொடர்பாக எதுவித சரியான பதிலும் அவரிடம் இருந்து கிடைக்க வில்லை. அவருக்குத் தான் வெளிச்சம் எவ்வளவு வந்தது எவ்வளவு போனது என்று.

நன்றி - நூலகத்திட்டம்



# நாம் அரசாங்கத்துக்கு கை கொடுக்க வேண்டும்!

## முன்னாள் முதல்வர் வரதராஜப்பெருமாள்

**உங்களது இலங்கைக்கான மீள்வருகை பற்றிக் குறிப்பிடுவீர்களா? உங்களை அரசாங்கம் வரவழைத்ததா? அல்லது இந்திய அரசாங்கம் போகச் சொல்லி வற்புறுத்தியதா?**

நான் பாதுகாப்பு காரணங்களுக்காகவே இந்தியா சென்றேன். பாதுகாப்பிற்காகவே அங்கே நின்றேன். அங்கிருந்த போதெல்லாம் திரும்ப இலங்கைக்கு வந்து எனது அரசியல் பணிகளை மேற்கொள்ளும் விருப்புடையவனாகவே இருந்தேன். அதற்கான சூழல் நீண்டகாலமாக கிடைக்கவில்லை. கிடைத்தபோது மீண்டும் வந்தேன். மற்றும்படி இந்தியா என்னை போகவும் சொல்லவில்லை. நிற்கவும் சொல்லவில்லை. இலங்கை அரசாங்கம் வா என்று அழைக்கவும் இல்லை. ஆனால் நான் வருவதாக கூறியபோது அது எனக்கு பாதுகாப்புகளை வழங்கி ஒத்துழைப்பைத் தந்தது.

**தங்களை இந்திய அரசாங்கம் வேண்டத்தகாத விருந்தாளியாக கருதியதாக இந்தியப் பத்திரிகையில் செய்தி வெளிவந்ததே உண்மையில் வேண்டத்தகாத விருந்தாளியாக கருதியதா?**

உண்மையில் இக்கேள்வியில் அர்த்தம் இருப்பதாக தெரியவில்லை. குறிப்பிட்ட அப்பத்திரிகை ஆங்கிலத்தில் ஒன்றும் தமிழில் இன்னொன்றுமாக தலையங்கத்தினை வெளியிட்டிருந்தது. ஆங்கிலத்தில் இந்திய அரசாங்கத்தை நான் பதவி வேண்டி வலியுறுத்தியது போலவும், தமிழில் இந்திய அரசாங்கம் என்னை வேண்டாதது போலவும் எழுதியிருந்தது.

**இந்தியாவிற்கு செல்வதற்கு முன்னர் ஈழப் பிரகடனம் ஒன்றை விடுத்திருந்தீர்கள் அதனை வாபஸ் பெற்றுவிட்டீர்களா?**



நாம் ஈழப் பிரகடனத்தை விடுக்கவில்லை. ஒன்றுபட்ட இலங்கையில் ஒரு தீர்வைக் காண்பதற்கு அவசியமாக இருக்கக் கூடிய 19 கோரிக்கைகளையே முன்வைத்திருந்தோம். மத்திய அரசாங்கம் அக்கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் ஈழப்பிரகடனம் செய்ய வேண்டிவரும் என்றே கூறியிருந்தோம். அங்கு பிரதானமாக இருந்தது ஈழப்பிரகடனமல்ல. எமது 19 அம்சக் கோரிக்கைகளே! இதனை மூடிமறைத்துவிட்டு ஈழப்பிரகடனத்தை மட்டும் இப்போது சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்போது என்னுடைய கருத்து என்னவென்றால். ஒன்றுபட்ட இலங்கைக்குள் நியாயமான தீர்வு முன்வைக்கப்படாதவரை ஈழக்கோரிக்கை என்பது இருந்தே தீரும். அது யதார்த்தமானதா? இல்லையா? என்பது வேறு விடயம். தற்போதைய பிராந்திய சூழல் உலகச்சூழல் என்பவற்றிற்கு மத்தியில் அதற்கான சந்தர்ப்பம் இல்லை. ஆனால் கோரிக்கை என்பது இருந்து கொண்டேயிருக்கும். தீர்வு முன்வைக்கப்படும் போது அக்கோரிக்கைக்கு அவசியமில்லாது போய்விடும்.

**நீங்கள் முன்வைத்த 19 அம்சக் கோரிக்கையை இதுவரையான அரசாங்கம் எதுவும் நிறைவேற்ற வில்லைத்தானே!**

பிரேமதாசா அரசாங்கம் அதனை நிறைவேற்றவில்லை என்பது உண்மை. ஆனால் சந்திரிகா ஜனாதிபதியாக வந்த பின்பு அரசாங்கத்தின் தீர்வுத்திட்டம் மூலமாக அது தன்னால் முடிந்ததைச் செய்து கொண்டிருக்கின்றது. ஆனால் அது நடைமுறைக்கு வராததற்கான காரணம் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு கொடுக்காமையே. இது ஒரு வெளிப்படையான உண்மை. 16,17 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு கொடுத்திருந்தால் அது நிறைவேற்றப்பட்டிருக்கும்.

**அப்போ அரசின் தீர்வுத்திட்டம் நீங்கள் முன்வைத்த 19 அம்சக் கோரிக்கையையும் அடக்கியுள்ளது என்று கருதுகிறீர்களா?**

முழுவதும் அல்ல. ஆனால் நியாயமானவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும் முக்கியமாக ஒரு தீர்வினைக்காண்பதற்கான அடித்தளத்தினை அது உருவாக் கியுள்ளது.

**நீங்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் அரசாங்கத்துடன் போராட வேண்டியிருந்தது என்று கூறியிருந்தீர்கள். எவ்வெவ் விடயங்களில் யாருடன் போராட வேண்டியிருந்தது.**

உண்மையில் ஒரு மத்திய அரசாங்க-மாநில அரசாங்க உறவுகளை எடுத்துக்கொண்டால் மாநில அரசாங்கங்களை பராமரிப்பது, தேவைகளை கவனிப்பது, பாதுகாப்பு, நிதி உதவி கொடுப்பது, வேறுவகை ஒத்துழைப்பிணை வழங்குவது மத்திய அரசாங்கத்தின் கடமை. ஆனால் மத்திய அரசாங்கம் தான் நிறைவேற்றிய சட்டத்தினைக்கூட நடைமுறையில் நிறைவேற்றாமல் காலதாமதப்படுத்தியது. பிழையான பொருட்கோடலைக் கொடுத்துக்கொண்டிருந்தது. அதற்காக போராடவேண்டியிருந்தது. அரசியல் யாப்பின்படி மத்திய அரசாங்கம் அங்கீகரித்த விடயங்களைப் பெற்றுக் கொள்வதற்குக்கூட போராடவேண்டியிருந்தது. மாநில அரசினை உருவாக்கி தட்டி எழுப்ப வேண்டியது மத்திய அரசின் கடமை. ஆனால் உண்மையில் அதனை கட்டி எழுப்புவதற்காக நாம் போராட வேண்டியிருந்தது. எங்களுடைய பக்கத்தில் நாங்கள் பிழைகள் விடவில்லை. மத்திய அரசாங்கம்- தான் பிழை விட்டிருந்தது.

**குறிப்பாக எவ்வெவ் விடயங்களில் போராட வேண்டியிருந்தது?**

அதிகாரப் பரவலாக்களின் ஒவ்வொரு விடயத்திலும் போராடவேண்டியிருந்தது. உரிய அதிகாரங்களை பெறுதல் உட்பட இதர உதவிகளைப் பெறுதல் வரை போராட வேண்டியிருந்தது.

**பொ.ஐ.மு.வை ஆதரித்துக் கருத்துக்கூறி வருகிறீர்கள். பொ.ஐ.மு.வை ஆதரிப்பது நியாயம் என்று கருதுகிறீர்களா?**

பொ.ஐ.மு.வை தேர்தலுக்காக ஆதரிக்கவில்லை. பொ.ஐ.மு. என்ற கட்சிக்காக ஆதரிக்கவில்லை. அதற்காக மற்ற கட்சிகளை எதிர்க்கவுமில்லை. தற்போது நடைமுறையிலுள்ள அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு நாம் ஆதரவு கொடுக்க வேண்டும். அவர் செய்கின்ற வேலைகளுக்கு நாம் துணை நின்றால் தான் அது நடைமுறைக்கு வரும். தமிழர்களாகிய நாம் கை கட்டி நிற்க சிங்களவர்களின் அனுமதியைப் பெற்று அவர் எல்லாம் செய்வார் என நாம் எதிர்பார்ப்பது சரியான அணுகுமுறையாகாது. சந்திரிகா ஒரு அரசியல் தீர்வுத்திட்டத்தினை வைத்துள்ளார். பொதுவாக அதனை எல்லாத் தமிழ்க்கட்சிகளுமே ஏற்றுள்ளன. ஒரு தமிழ் புத்திஜீவிகூட இதனை நிராகரிக்கவில்லை. சில விடயங்களைத் தரவில்லை. தந்தால் சரி என்பதே பலருடைய கருத்தாக உள்ளது. எனவே இந்த விடயங்களை நிறைவேற்றுவதற்கு நாம் அரசாங்கத்திற்கு கைகொடுக்க வேண்டும்.

**அப்படியானால் தீர்வுத்திட்டம் தமிழர்களின் அபிலாசைகளை முழுமையாக திருப்தி செய்துள்ளது என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

முழுமையாக திருப்தி செய்தது என நான் கூறவில்லை. அதில் நியாயமான அளவுக்கு விடயங்கள் உண்டு. அதில் பல முக்கிய விடயங்கள் திருத்தப்பட வேண்டியுள்ளது. அநாவசியமான விடயங்கள் சில நீக்கப்பட வேண்டும். நிதி சம்பந்தமான விடயங்களில் 13வது திருத்தச் சட்டத்தை விட குறைந்த நிலையில் உள்ளது. இவையெல்லாம் திருத்தப்பட வேண்டும். ஆனால் பருமட்டாக பார்க்கின்ற போது தீர்வுத்திட்டம் ஏற்கப்படவேண்டும் என்பதே என் கருத்தாகும்.

**வடக்கு—கிழக்கு இணைப்பு போன்ற முக்கிய விடயங்கள் தீர்வுத்திட்டத்தில் தீர்க்கப்படாமல் இருக்கின்றதே?**

அக்குறிப்பிட்ட விவகாரத்தில் தெளிவு இல்லை என்பது உண்மை இது விடயத்தில் என்னுடைய கருத்து வடக்கு-கிழக்கு மாகாண எல்லை தொடர்பாக ஒரு வரையறை தேவையென்பதே ஆகும்.



**தீர்வுத்திட்டத்தில் அளிக்கப்பட்ட அதிகாரங்கள் பற்றி? இது தொடர்பாக ஒகஸ்டில் முன்வைத்த தீர்வு யோசனையில் பல பின்னர் ஜனவரியில் வெட்டப்பட்டுள்ளதே?**

அரசாங்கம் அறிக்கை வடிவில் இறுதியாக முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தைப் பற்றியே நான் கூறுகின்றேன். அதில் அதிகாரங்கள் பாரியளவு கொடுக்கப்பட்டுள்ளது. சில போதாமைகள் உள்ளன என்பதை மறுக்கவில்லை. அவையும் தீர்க்கப்பட வேண்டும். நான் முன்வைத்துள்ள தீர்வுயோசனைகளுக்கான கைநூலிலும் இதுபற்றிக் கூறியுள்ளேன்.

நீண்டகாலச் செயற்பாட்டுக்கு உத்தரவாதம் வேண்டும். மத்திய - மாநில முரண்பாடுகள் வராமல் இருக்கவேண்டும். மாநிலங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பறிக்கப்படாமல் இருக்க வேண்டும். இவையே தீர்வுத்திட்டம் தொடர்பாக பிரதானமானவையாக இருக்க வேண்டும் என்று நான் கருதுகின்றேன்.

**மத்திய அரசு மாநில அரசுகளின் அதிகாரங்களில் சில பிடிகளை வைத்திருக்கின்றதே?**

மத்திய அரசு-மாநில அரசுகள் தொடர்பாக பிடிகளை வைத்திருப்பது சகஜம் தான். பிரிவினை ஒன்றினால் மட்டும் தான் அப்பிடிகள் இல்லாமல் போகும். இந்தப் பிடிகள் என்கின்ற விடயம் அமெரிக்கா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா போன்ற எல்லா இடங்களிலும் தான் உள்ளது. இந்தியாவில் சுமார் 50 வருடங்களாக இப்பிடிகள் இருந்தபோதும் அவ்வமைச்சுக்குள்ளேயேயும் அது பலமுள்ளதாகவும், வளமுள்ள தாகவும் வளர்ந்து வருகின்றது என்பதுதான் உண்மை. திராவிட இயக்கங்கள் கூட இன்று பலமான இந்தியாவை உருவாக்குவதிலேயே கவனமாக உள்ளன.

**பொ.ஐ.மு. அரசின் மனித உரிமை மீறல் பற்றி குறிப்பாக செம்மணி படுகொலைபற்றி உங்கள் கருத்து யாது?**

செம்மணிப்படுகொலைபற்றி நான் புதிதாக ஒன்றும் கூறவேண்டிய தில்லை. எல்லாத் தமிழர்களுக்கும் அது தெரிந்த விடயம். வலுவாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம். அரசாங்கம் அதனை ஒப்புக்கொண்டு விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைத்து வெளிநாட்டு ஆய்வாளர்களின் முன்னிலையில் புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கைகளை எடுத்தது. அப்படி ஒன்று நடக்காமல் இருப்பதற்கான வழிவகைகளைத் தான் நாம்தேட வேண்டும்.

**வெளிநாட்டு மத்தியஸ்தம் பற்றி தங்கள் கருத்து யாது?**

வெளிநாடுகள் தான் மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமென்றில்லை. யாரும் மத்தியஸ்தம் வகிக்கலாம். இன்று மதகுருமார் உட்பட பலர் புலிகளுடனும் அரசாங்கத்துடனும் பேசுகின்றார்கள். அவர்கள் எல்லாம் மத்தியஸ்தம் வகிக்க முடியும். இங்கு என்ன முக்கியமென்றால், அரசாங்கம் பிரிவினையை விட்டு வா என்று சொல்லக் கூடாது. அதேபோல புலிகள் பிரிவினையோடு தான் வருவோம் என்று சொல்லக் கூடாது. பொது உடன்பாட்டுக்கு வருவதற்கு இருதரப்பும் தயாராக இருக்க வேண்டும். பேச்சுவார்த்தையின் போது ஆயுதம் ஏற்றிக் கொண்டிருப்பவர்களை மட்டும் அழைக்க வேண்டும் என்ற நிலை இருக்கக் கூடாது. பிரச்சினையோடு தொடர்புபட்ட. எல்லா அமைப்புகளையும் அழைக்க வேண்டும்.

**ஐ.தே.க.வின் 17 வருடகால ஆட்சியைவிட பொ.ஐ.மு.வின் 5 வருட ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள் பாரிய சரிவுகளைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. இதுபற்றி யாது கூறுகிறீர்கள்?**

இது உங்களுடைய கருத்து பொதுவான கருத்தாக அப்படி ஒன்றில்லை. இது சிலருடைய கருத்து. இது புள்ளிவிபரங்களைக் கொண்டு நாம் மதிப்பிட வேண்டும். இங்கு யுத்தம் நடக்கின்றது. பெருந்தொகையான மக்கள் இறக்கின்றார்கள். சொத்துக்கள் சீரழிகின்றன. பெருந்தொகையானவர் சாப்பாட்டிற்காக கஷ்டப்படுகின்றார். இந்த யுத்தத்தினை எப்படி நிறுத்துவது என்பது பற்றியே நாம் பேசவேண்டும். இதிலுள்ள தேர்தல் நோக்கங்கள் எங்களுக்கு பயன்படாது.

இந்த அரசாங்கம் பல தவறுகளுக்குள்ளேயும் முன்னேற்றகரமான முயற்சிகளைச் செய்தது. இன்று மனித உரிமை பேணப்படுகின்றது. கைதுசெய்யப்படுகின்ற ஒருவரை உடனடியாக விடுதலை செய்ய முடிகின்றது.

1983 கலவரம் தொடக்கம் வெலிக்கடைப்படுகொலை, கொக்கட்டிச் சோலைப் படுகொலை வரை எத்தனை குவியல் படுகொலைகள் ஐ.தே.க. அரசாங்க காலத்தில் நடந்துள்ளது. எங்காவது ஒரு விசாரணையாவது நடைபெற்றதா? இன்று புலிகளின் புத்திஜீவிகள் கொழும்பில் நின்று அரசியல் நடாத்தும் அளவிற்கு அவர்களுக்கு சுதந்திரம் இருக்கின்றது.

**ஈ.பி.ஆர்.எல்.எப் உங்களைக் கட்சியிலிருந்து நீக்கியுள்ளது என செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளாரே?**

அது சுரேஸ் உடைய பதட்டத்தனமான முடிவு. அவசரமான முடிவு. அநாவசியமானது. இதில் ஒரு அர்த்தமும் இல்லை. ஏனென்றால் 1993ஆம் ஆண்டு கூட்டப்பட்ட கட்சியின் காங்கிரசின்படி 1997ம் ஆண்டு வரையே மத்திய குழுவிற்கு அதிகாரம் உண்டு. 1997க்கு பின்பு மத்திய குழுவிற்கே அதிகாரமில்லை. மத்தியில் உள்ள எந்த உறுப்பினருக்கும் கட்சிக்கு உரிமை கொண்டாட அதிகாரமில்லை. மத்தியகுழுவே செயலாளரை தெரிவு செய்கின்றது. செயலாளரை நீக்குகின்றது. செயலாளர் கட்சிக்கு உரிமை கோருவது சட்ட விரோதமானது. 1997ம் ஆண்டு காங்கிரசைக் கூட்டவேண்டியது சுரேசினுடைய கடமை. அதை அவர் கூட்டவில்லை.

**அவருடைய கடமையை அவர் செய்யாமல் விட்டது ஒரு புறமிருக்கட்டும். ஏனைய அரசியல் குழு. மத்தியகுழு உறுப்பினர்கள் காங்கிரசைக் கூட்டச்சொல்லி வற்புறுத்தினார்களா?**

நாம் கூட்டச் சொல்லி ஒவ்வொரு தடவையும் வற்புறுத்தினோம். அதுவே எம்முடைய பிரதான கோரிக்கையாக இருந்தது. ஆனால் அதற்கு ஒவ்வொரு காரணத்தைச் சொல்லி மத்திய குழுவையே அவர் கூட்டவில்லை. மாதத்திற்கு ஒருதடவை மத்திய குழுகூட்டப்படல் வேண்டும். வருடத்திற்கு ஒருதடமை பொதுச்சபை கூட்டப்பட வேண்டும். 9 வருடமாக பொதுச்சபை ஒன்று இருப்பதுபற்றி செயலாளருக்கு தெரியாது.

**செயலாளர் சுரேஷ் அவர்கள் பி.பி.சி.க்கு அளித்த செவ்வியிலும். பத்திரிகைகளுக்கு வழங்கிய அறிக்கையிலும் பெரும்பான்மையான அரசியல் குழு உறுப்பினர்களும் மத்திய குழு உறுப்பினர்களும். பிராந்தியக்குழு உறுப்பினர்களும் தங்களை நீக்கியதை ஏற்றுக்கொண்டுள்ளனர் எனக் கூறியுள்ளாரே?**

அரசியல் குழு உறுப்பினர்களாக ஆறு பேர் உள்ளோம். சுரேஷ், சிறீதரன், றொபேட் ரட்ணம், வில்சன், நான் என்போரே இவ் ஆறு பேருமாவார்கள். இவர்களில் வில்சன் மட்டுமே சுரேஷின் கருத்தினை ஏற்றுள்ளார். அவரும் முழுநேர ஊழியரல்ல. பகுதிநேர ஊழியர். ஏனையவர்கள் சுரேஷின் கருத்தினை ஏற்கவில்லை. மத்தியகுழு உறுப்பினர்களாக 15பேர் உள்ளனர். அவர்களில் அரசியல் குழு

⇨ 19

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் மக்களின் பிரச்சினையை காலப்ந்தாட்டமாகி விட்டார்கள்!

- வாசு

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற முடிவுக்கு நீங்கள் வந்ததற்கான காரணம் என்ன?**

அந்த முடிவுக்கு வந்தது நான் அல்ல. ஜனநாயக இடதுசாரி முன்னணியே அம் முடிவுக்கு வந்தது. இந்த ஜனநாயக இடதுசாரி முன்னணி அடிப்படையில் பொ.ஐ.மு சக்திகளிடமிருந்தே உருவாகியது. ஜனநாயகம், சமூகநீதி, இன சுயாதீனத்துவம், சமாதானம், சமத்துவ எதிர்காலம் என்பவை தொடர்பாக எங்களுக்கு ஒரு குரல், ஒரு பலம் என்பனவற்றைக் கட்டியெழுப்ப மக்களை அணிதிரட்ட வேண்டியது அவசியம் என்ற அடிப்படையில் அமைந்த நோக்கத்திற்காக இந்தத் தேர்தலில் நிற்பதான முடிவை இம்முன்னணி எடுத்தது.

**ஜனாதிபதி தேர்தலை ஒட்டி உங்கள் அணியின் சார்பில் நீங்கள் மக்கள் முன் என்ன விடயங்களை முன்வைத்திருக்கிறீர்கள்?**

'எமது வேலைத்திட்டம்' என்ற சிறு நூலில் இதை வெளியிட்டுள்ளோம். தமிழிலும் வெளி-யிடப்பட்டுள்ளது. அதில் இந்த விடயம் மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதில் உள்ளவை தான் அடிப்படை-யான கோட்பாடுகள். எமது நிலைப்பாடு அது. அவற்றை அடைவதற்கான நேர்மையான நடவடிக்கைகள் இல்லை என்றால் எந்தப் பெரிய ஆலோசனைகளிலும் நிலைப்பாடுகளிலும் ஒரு பயனும் கிடை-யாது. அப்படிப்பட்ட நேர்மையான நடவ-டிக்கைகளைத் தான் யுத்தத்தை நிறுத்-துவது, மக்களுக்கு ஆறுதல் வழங்குதல், அன்றாட வாழ்க்-கையை சுமூக நிலைக்கு கொண்டுவருதல். அப்போதுதான் அம்மக்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான ஒரு சூழ்நிலை உருவாகும். அம்மக்களின் பிரதிநிதிகள் யாரோ அவர்களுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தி விட்டோம் என்பதால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடுவதில்லை. பிரச்சினை தீரவேண்டும் என்றால், சிங்கள தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வேலைத்திட்டம் அவசியமாகும். அப்போது தான் ஒத்த அபிப்பராயம் ஏற்படமுடியும். அது எற்பட்டால் தான் பிரச்சினையை தீர்க்க முடியும்.




**ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்று நீங்கள் தொர்டர்ந்து கூறிவந்துள்ளீர்கள். இப்போது அதே பதவிக்கு நீங்கள் தேர்தலில் நிற்கிறீர்கள். இது ஒரு முரண்பாடாக இல்லையா?**

இல்லை, அது ஒரு வெறும் தர்க்கம் மட்டுமே (இந்த வரிகளை தமிழில் சொல்கிறார்) அரசியல் அல்ல. அந்த நிலைப்பாட்டின் அரசியல் என்ன? ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்காகக் கூட ஜனாதிபதித் தேர்தலில் நிற்கமுடியும். அதை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதுதான் அரசியல். ஆனால், தர்க்கத்தில் வேண்டுமானால் ஒழிக்க விரும்புவதற்காக எப்படி தேர்தலில் நிற்பது என்று கேட்கலாம். அரசியலில் அப்படிஅல்ல.

**ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது வடக்கு கிழக்கு மாகாண ஆட்சியதிகாரத்தை 2 ஆண்டுகட்கு பிரபாகரனிடம் வழங்குவது தொடர்பாக எழுந்த சர்ச்சை பலமாக அடிபடுகிறதே இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

இது ஒரு பழைய ஏமாற்று வேலை தான். கால்பந்து அடிப்பது அவர்கள். இவர்களது பக்கத்துக்கு அடிப்பார்கள். இவர்கள் அவர்கள் பக்கத்துக்கு அடிப்பார்கள். தமிழ் மக்களின் பிரச்சினையே ஒரு கால்பந்தாட்டமாகிவிட்டது. இவர்களுக்கு - ரணிலுக்கு - வெல்லவேண்டும். அதனால் அவர் புலிகளிடம் 2 வருட அதிகாரத்தை வழங்கப் போவதாகச் சொல்கிறார். உடனே சந்திரிகா நாட்டைக் காட்டிக்கொடுக்கிறார் என்று கத்துகிறார். முன்பு அனுரர் பண்டாரநாயக்க அவர்கள் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது, ஐ.தே.கவிலிருந்தவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகக் கூறினார்கள். இது எப்போதும் நடக்கிற ஒரு விடயம் தான். இது பற்றி எனக்கு அக்கறையில்லை. இதற்கு எந்த அர்த்தமும் கிடையாது அத்துடன் இந்த அடிப்படையில் எதுவும் நடக்கப் போவதும் கிடையாது. தேர்தல் காலத்தில் எதையாவது பெற்றுக் கொள்ள செய்யும் நடவடிக்கை. யாருக்கும் தமிழ் வாக்குகள் அவசியம். தமிழ் வாக்குகளைப் பெறவும் சிங்கள வாக்குகளைப் பெறவும் இருக்கிற நல்ல வழி என்ன? புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக சிங்கள மக்களில் பெரும்பாலானோர் சொன்னால் அதற்கு எதிர்ப்பு அவர்களிடமிருந்து இல்லை. புலிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதாகச் சொன்னால்அதற்கும் எதிர்ப்பு இல்லை. தமிழ் மக்களுக்கு அவர்கள் வாழும் பிரதேசத்தில் அவர்களது அபிலாசைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் ஏதாவது அதிகாரத்தை வழங்குவதாக கூறின் அதற்கும் பெரும்பாலான சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்பு இல்லை. இப்போது ரணில் சொல்லியிருப்பது தொடர்பாக சிங்கள மக்கள் சரியான நிலையில் தான் இருக்கிறார்கள். ஆனால் இன்னமும் யுத்தவாத, மேலாதிக்கவாத அபிப்பிரா-யங்களுடன் தான் இருக்கிறார்கள் சிங்கள தலைவர்கள். ஐ.தே.கவிலும் பொ.ஐ.முவிலும் அவர்கள் தான் பிரச்சினை . சிங்களப் பொது மக்கள் அல்ல. பிரச்சினை இருப்பது சிங்களத் தலைவர்களிடம், சிங்கள அரச இயந்திரத்திடம் சிங்கள இராணுவத்திடம். அடுத்ததாக முதலாளிகளிடம். இராணுவத்திற்கும் யுத்தத்திற்கும் உதவிகளை வழங்குபவர்கள் பற்றி சிங்கள மக்கள் மத்தியில் அவ்வளவு பிரச்சினை இல்லை. புலிகள் வாசலுக்கு வந்துவிட்டார்கள். எல்லோரும் வாருங்கள் கட்சி பேதமின்றி போராடுவோம் என்று இவர்கள் கேட்டால் யாரும் போகத் தயாரில்லை. இதன் மூலம் தெரிவது மக்களின் சரியான நிலைப்பாடு. ஆனால் இந்த நிலைமையை ரணிலோ சந்திரிகாவோ பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துவது நடுத்தர வர்க்க தொழில் வல்லுனர்களைத் தான். அவர்களிடம் பெரிய இனவாதம் இருக்கிறது. வீரவிதானவின் பிரதான பகுதி இவர்கள் தான். ஒரு புறத்தில் யுத்தவாதிகளையும் மறுபுறத்தில் மத்திய அரசிடம் அதிகாரம் குவிய வேண்டும் என்ற கோட்பாட்டையும் இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். மத்திய அரசாங்கத்திடம் அதிகாரம் குவிந்திருக்க வேண்டும் என்று சொல்லும் போதே தமிழ் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது. சிங்கள மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்கவும் முடியாது.

**மாவீரர் தினப் பேச்சில் பிரபாகரன் மூன்றாவது தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவது பற்றி தெரிவித்திருந்தார். இதற்கு யுத்தம் நிறுத்தப்படுவது அவசியம் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். அது பற்றி?**

பிரபாகரன் சொல்வதும் நான் சொல்வதும் ஒன்று தான். நான் சொல்வதும் யுத்த நடவடிக்கையை நிறுத்து என்பது தான். யுத்த நடவடிக்கைகளை நிறுத்துவது என்பது யுத்தத்தை நிறுத்துவதல்ல. அதற்கு இன்னும் சிங்கள மக்கள் தயார்ப்படுத்தப்பட வேண்டும். ஆனால் யுத்த நடவடிக்கைகளை நிறுத்தலாம். மூன்றாம் த்ரப்பு வர வேண்டும் என்பதற்கு நான் முழு ஆதரவு.

**ஆனால் யுத்த நிறுத்தத்தின் போது புலிகள் தம்மை மீளப் பலப்படுத்திக் கொள்வார்கள் என்று அரசு தரப்பு கூறுகிறதே?**

அதற்காக... அப்படியானால் தீர்வே இல்லையா? நாங்கள் பார்க்க வேண்டியது புலிகள் பற்றியோ பிரபாகரன் பற்றியோ அல்ல. தமிழ் மக்கள் பற்றியே. தமிழ் மக்களுக்காக நேர்மையாக செய்பவற்றை புலிகள் பயன்படுத்தத் தான் செய்வார்கள். அதற்காக அதை செய்யாமல் விட முடியுமா? நாங்கள் தொலைபேசி வசதியை மக்களுக்கு வழங்கினால் புலிகளும் அதைப் பாவிப்பார்கள் தான். அதற்காக அதை கட்டுப்படுத்த முடியுமா? புலிகள் போரிட முடிவது தமிழ் மக்களின் ஆதரவு இருப்பதால் மட்டுமே. அவர்களுக்கு தேவை இல்லை என்றால் புலிகள் பலம் பெற முடியாது.

**பாராளுமன்ற தமிழ் கட்சிகளின் ஆதரவு உங்களுக்கு உண்டா? அவர்கள் என்ன சொல்கிறார்கள்?**

அவர்கள் தமது அக்கறையை வெளிப்படுத்தியுள்ளார்கள். அவர்களது ஆதரவு தொடர்பாக எப்போது முடிவு எடுப்பார்கள் என்று தெரிய்வில்லை. ஆனால் மற்றைய இரு கட்சிகளையும் தாம் ஆதரிக்கவில்லை என்றார்கள்.

**ஆனால் ரெலோ நீங்கள் வெற்றி வாய்ப்பைப் பெற மாட்டீர்கள் என்பதால் உங்களுக்கு ஆதரவளிக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறதே? அவர்கள் ஐ.தே.கவை ஆதரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்?**

ஆதரிக்கட்டும். ஆனால் ஒருவர் பதவிக்கு வருகிறாரா இல்லையா என்பதை வைத்து ஆதரவு தருவது என்பது சந்தர்ப்பவாதம். இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதை விட இந்தச் சந்தர்ப்பத்தில் எந்தக் கருத்துக்களை நாம் மக்கள் முன் எடுத்துச் செல்கிறோம் என்பது தான் முக்கியம். இதன் மூலம் தான் சரியான கருத்துக்களைப் பரவலாக்கவும் கட்சியை பலப்படுத்தவும் முடியும். இது ரெலோவுக்குப் புரியாவிட்டால் அவர்கள் மக்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அந்நியப்பட்டுப் போவார்கள்.

**மலையக முஸ்லிம் மக்கள் தொடர்பாக...**

மலையக மக்களின் பாதுகாப்பு, ஜனநாயக உரிமை, தனித்துவம் என்பவற்றுக்காக நாம் குரல் கொடுப்போம். முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அவர்களது பிரதேசத்தில் சுதந்திரமாக பாதுகாப்புடன் வாழ அனுமதிக்கப்பட வேண்டும். புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேசும் சந்தர்ப்பம் வந்தால் நான் அவரிடம் கேட்கும் முதலாவது கேள்வியே வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை அவர்களது பகுதியில் போயிருக்க அனுமதிக்க வேண்டும் என்பதாகத் தான் இருக்கும்.

## எமது வேலைத்திட்ட நூலிலிருந்து...

7.1) அரசியல் யாப்பில் மக்களின் அடிப்படை உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்படு-வதோடு அந்த அடிப்படை உரிமைகளை மீறி குற்றவாளிகளென்று நீதிமன்-றங்களால் தீர்ப்புக் கூறப்பட்டவர்கள் அவர்கள் வகித்த பதவிகளிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

7.2) பெண்கள் உட்பட மற்றும் சமூகத்தில் பலவீனமானவர்களையும் தேசத்தின் அரசியல் வாழ்வில் பங்குபற்ற வைக்கும் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

7.3) பொதுநன்மையையும், சமூகத்தினது நன்மையையும் கருதி நீதிமன்றங்களில் முறையீடு செய்ய நாட்டின் எந்தப் பிரஜைகளுக்கும் உள்ள உரிமையை உத்தரவாதப்படுத்தல் வேண்டும்.

7.4) சிறுவர்களினதும் குழந்தைகளினதும் நல்வாழ்வை உறுதிப்படுத்துவது அடிப்படைப் பொறுப்பாகும்.

7.5) முதலாவதாக திறமை அடிப்படையிலும் இரண்டாவதாக புவியியற் காரணி-களாலும், சமமற்ற வளர்ச்சிக் கார-ணிகளினாலும் கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கும் மக்களுக்கு விசேட கவனமும், மூன்றாவதாக இடப்-பெயர்வு காரணமாகவும் தேசிய மாகாண இன விகிதாசாரத்திற்கு அமை-யவும் உரிமைகளையும் தேவைகளையும் பிரித்துக் கொடுத்தல் வேண்டும்.

7.6) அனைவருக்கும் சமூகப்பொருளாதார சமவாய்ப்புகள் வழங்குவது அரசின் குறிக்கோளாக அமைய வேண்டும்.

8.1) வடக்கு- கிழக்கின் யுத்தம் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். அப்படி நிறுத்தப்படும் போது யுத்தத்தில் ஈடுபட்டோர் தாம் தாம் இருந்த இடத்-திலேயே இருப்பதற்கும், பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றிற்காக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும் வேண்டும்.

8.2) யுத்த நடவடிக்கைகளை உடனே நிறுத்தி அப்பிரதேசங்களில் மக்கள் வாழ்க்கையை மீண்டும் ஸ்தாபித்து மக்களின் சமாதான அபிலாசைகளுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதும் அச்சூழ்நிலையில் பேச்சு வார்த்-தைகளையும் இணக்கத்தையும் ஏற்படுத்தி அதன் மூலம் இனப்-பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்தி நிரந்தர அமைதிக்கு அத்திவாரமிடப்பட வேண்டும்.

8.3) எல்லா இனங்களுக்கும் சமமானதும் சுயாட்சியினை அடிப்படையாகக் கொண்டதுமான ஒரு நிர்வாகத்திற்கு அவ்வினங்களுக்குள்ள உரிமையை ஏற்றுக் கொள்ள வேண்டும். எல்லா இன மக்களுக்கும் இக் கொள்கை சமமான முறையில் உரித்தாகும்.

நன்றி - நூலகத்திட்டம்





# இடதுசாரிகளால் மட்டுமே ஜனநாயகவாதிகளாக முடியும்!

**-நந்தன குணதிலக**

**நீங்கள் ஜனாதிபதித தேர்தலில் போட்டியிடுவதன் நோக்கம் யாது?**

1982 ஜனாதிபதி தேர்தலில் தோழர் றோஹண போட்டியிட முன்வந்தது, 78இல் ஜே.ஆரின் யாப்பினால் கொண்டுவரப்பட்ட இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை கலைத்து விடவே ஆகும். அன்று தொடக்கம் எமது கட்சி அதற்காக முன்னின்று செயற்பட்டு வருகின்றது. வரலாற்றில் அரசியல் வளர்ச்சி போக்கு இன்று கட்டியெழுப்பியுள்ள நிலைமையின்படி நாம் போட்டியிட முன்வந்ததிற்கு மேலும் ஒரு காரணம் உண்டு. அதாவது, உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் போன்ற ஏகாதிபத்திய சக்திகளின் தேவைகளின் அடிப்படையில் செயற்படும் ரணில் - சந்திரிகா இருவரையும் தோற்கடிப்பதற்காகவாகும்.

**நீங்கள் இம்முறை தேர்தலில் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகள் என்ன?**

எமது நாட்டு மக்கள் தேர்தல் வாக்குறுதி என்ற பெயரில் எந்நாளும் ஏமாற்றத்துக்குள்ளாகி வந்துள்ளனர். நாம் முன்வைக்கும் கருத்துக்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் என்பன் ஒருவருக்கு வாக்குறுதிகளாக தோன்றக் கூடும். ஆயினும். நாம் இலங்கை மக்கள் முகம் கொடுக்கும் வெவ்வேறுபட்ட சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு தரக் கூடிய சமவுடமை வேலைத் திட்டங்களையே முன்வைக்கின்றோம்.

**இடதுசாரி பொது வேட்பாளரான உங்களுக்கு கிடைக்கக் கூடிய வாக்குகள் எந்த தொகுதியினரிடமிருந்து அதிகம் கிடைக்கும் என எண்ணுகின்றீர்கள்?**

கடந்த காலங்களில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் விழிப்புணர்வு காரணமாக இடதுசாரிகளின் வாக்குகள், முதலாளித்துவ கட்சிகள் இரண்டின் மீது வெறுப்பு கொண்டு மூன்றாவது சக்தி தொடர்பான எதிர்பார்ப்புடன் எம்மை நோக்கும் மக்களின் வாக்குகள் மற்றும் புதிதாக பதிவு செய்துள்ள இளைஞர்களின் வாக்குகள் என்பன எமக்கு கிடைக்கும்.

**அவ்வாறெனின் நீங்கள் இடதுசாரி வாக்குகளை மட்டும் எதிர்பார்க்கவில்லையா?**

இல்லை. இடதுசாரி வாக்குகளை மட்டுமல்ல. உண்மையில் இடதுசாரிகள் இயல்பிலேயே ஜனநாயகவாதிகள். எவராவது இடதுசாரிகளுக்கு புறம்பாக ஜனநாயகவாதிகள் உள்ளனர் என்று கூறுவார்களாயின் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனநாயகத்தின் உண்மையான விளக்கம் இடதுசாரிகளிடமே உள்ளது.

**மாக்ஸிய — லெனினியவாத கருத்துக்களைக் கொண்ட இடதுசாரிகளை தவிர்ந்த வேறு கருத்துக்களை கொண்ட ஜனநாயகவாதிகள் இருக்க முடியாதா?**

ஹிட்லரையும் ஜனநாயகவாதி என்று தான் முன்பு குறிப்பிட்டனர். எனினும் அவரது செயற்பாடுகளில் ஜனநாயகத்தைக் காண முடியவில்லை. உண்மையான ஜனநாயகவாதிகள் மக்களை மக்களாக மதிப்பர். எந்தவொரு முதலாளித்துவ தலைவரும் தான் ஒரு ஜனநாயகவாதி என்று கூறிக் கொள்ளலாம். எனினும் அவரது செயற்பாடுகளில் சிற்சில வரையறைகள் காணப்படுகின்றன.

**ஜனாதிபதித் தேர்தலின் பின் பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற வாய்ப்பிருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான நிலையில் நீங்கள் அமைத்துள்ள இடதுசாரி கூட்டினை மிகவும் பரந்துபட்டதாக்கும் எண்ணம் உள்ளதா?**

நாம் இடதுசாரிகளின் இணக்க விடயத்தில் பிற கட்சியினரை எம்முடன் இணைய வேண்டாம் என்று ஒரு போதும் குறிப்பிட்டதில்லை. இந்த விடயத்தில் தேர்தலை அடிப்படையாக வைத்து நாம் இணக்கத்தை ஏற்படுத்த முனையவில்லை. இணக்கமான வேலைத்திட்டத்தின் மூலம் பரந்த அடிப்படையில் இடதுசாரிகளை ஒன்றுப்படுத்தவே நாம் முயற்சி எடுக்கின்றோம்.

**எனினும் அந்த பொது வேட்பாளர் ஜனதா விமுக்தி பெரமுண—வைச் சேர்ந்தவராக மட்டும் இருக்க வேண்டும் என்று நீங்கள் கூறினீர்களா?**

இல்லை. எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வேட்பாளரை முன்னிறுத்தவே நாம் முயன்றோம். இருந்தாலும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை.

**இம்முயற்சி வெற்றியளிக்காததற்கு காரணம் என்ன?**

ஜனாதிபதி தேர்தல் சட்டத்தில் கட்டாயமாக கட்சியின் அங்கத்தினர் அல்லது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் போட்டியிட முன்வரவேண்டும். எமது கலந்துரையாடலின்படி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. இறுதியில் ஜே.வி.பி. வேட்பாளரை முன்னிறுத்தவும், அவருக்காக பிற கட்சிகளின் இணக்கத்தை பெறவும் தீர்மானிக்கப்பட்டது.

**இந்த ஜனாதிபதி தேர்தலில் வாக்கினை வெட்டிவிடுங்கள் எனக் கூறும் பிரசாரமும் மேற்கொள்ளப்படுகின்றது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

இந்நாட்டு பிரதான அரசியல் கட்சிகள் தேர்தல்களின் போது செயற்படும் முறை பற்றிய வெறுப்புத் தன்மை பலர் மத்தியில் காணப்படுகின்றது. எனினும் தேர்தல் செயற்பாடுகளின் போது வாக்குச்சீட்டை பழுதாக்குதல் சிறந்த செயற்பாடு அல்ல. ஜனநாயக செயற்பாட்டின் போது மக்களினால் நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ள இருக்கும் ஒரே ஒரு சந்தர்ப்பம் வாக்களிப்பாகும். மக்களின் இந்த குறைந்த பங்களிப்பு கூட இல்லாமற் போனால் அராஜகமே தோன்றும்.

**உங்களது வேலைத்திட்டம் சமவுடமை தன்மையானது. எனினும் நிலவும் பொருளாதார சூழ்நிலையில் உங்களது செயற்பாடுகளுக்கு வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும் தன்மை உள்ளதா?**

எமது சமூக பொருளாதார திட்டத்தினால் இந்நாட்டின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு உண்டு என நான் கூற மாட்டேன். தற்பொழுதுள்ள கட்டமைப்பிலிருந்தே நாம் அனைத்தையும் ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

இதன்படி இங்குள்ள அனைத்து சொத்துக்களையும் பொதுச் சொத்தாக மாற்ற வேண்டும் என கூறுவது தவறு. பாரிய அளவிலான தொழில்கள் மற்றும் விவசாய சொத்துக்களை பொது சொத்தாக மாற வாய்ப்பளித்து விட்டு தனியார் சொத்துக்கள் நிலவவும் இடமளிக்கப்பட வேண்டும். எமது நாட்டில் தற்பொழுது இல்லாத தொழினுட்ப திறமைகளை பெற்றுக் கொள்ள சுரண்டல் அற்ற நிலையில் வெளிநாட்டு இறக்குமதிக்கு யாப்பில் இடமளிக்கப்பட வேண்டும். இந்த நிலைமையில் வேறுபாடு அற்ற நிலையில் மக்களின் அடிப்படை தேவைகள் பாதுகாக்கப்படும் சமூகத்தை கட்டியெழுப்பலாம்.

**இனப்பிரச்சினை பற்றிய உங்களது வேலைத்—திட்டத்தை நோக்கும் போது அவற்றை எப்படி தீர்க்க முடியும்?**

இலங்கையின் இனப்பிரச்சினையை சமவுடமை வேலைத்திட்டத்தின் மூலமே தீர்க்கப்பட கூடும் என்பதே எமது நம்பிக்கையாகும். முதலாளித்துவ வர்க்கத்தினால் வழங்கப்படும் எந்தவொரு தீர்விலும் அசமத்துவம் காணப்படும். அப்படியாயின் அது தேசிய பிரச்சினையை தீர்ப்பதாகாது.

**உங்களது கட்சி. இந்நாட்டின் தமிழ். முஸ்லிம். மலையக மக்களுக்கு சமவுடமை ஏற்படும் வரை காத்திருங்கள். இனப்பிரச்சினையை தீர்க்கின்றோம் என்றா கூறுகின்றது?**

எவராவது முதலாளித்துவ அமைப்பிற்குள் இனங்களின் உரிமைகள் மற்றும் தேவைகள் நிறைவேற்றப்படும் என கருதுவார்களாயின் அது தவறான அபிப்பிராயமாகும். இந்த முதலாளித்துவ பொருளாதார திட்டத்தில் யுத்தத்தை நிறுத்த முடியாதிருப்பது மக்களின் உரிமைகளை அரசால் வழங்க முடியாதிருப்பதனாலாகும். இன்று ஆயுதப் போராட்டத்தில் இறங்கியுள்ள அவர்களது அடிப்படை இலக்கு தனி அரசாகும். அவர்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை இந்த முதலாளித்துவ அரசிடமிருந்து தமக்கு உரிமைகளைப் பெற முடியும் என்று. தெற்கில் ஜனநாயக அரசியலில் செயற்படும் கட்சிகளுக்கு தமது குறைந்த உரிமைகளையாவது வழங்க தயாரற்ற அரசாங்கத்திடமிருந்து தமது உரிமைகளை மீளப் பெற முடியாது என்று அவர்கள் நம்புகின்றார்கள்.

**இந்நாட்டு சிறுபான்மை மக்களுக்கு இடதுசாரி பொது வேட்பாளராக நீங்கள் கூறும் செய்தி என்ன?**


இந்நாட்டு அனைத்து மக்களதும் தேசியத்துவத்தை கருத்திலெடுக்காது உரிமைகளை வழங்காத வரையில் இந்த பிரச்சினையை தீர்க்க முடியாது. எனினும், நாம் அதற்கு தயார். இங்கிருந்தே ஆரம்பிக்க தயார். இவ்வாறான நிலைமையில் இனங்களின் கலாசார பல்வித தன்மையை பாதுகாக்கும் வகையில் சுயாட்சியை ஏற்படுத்தவும் நாம் தயார்.

**ஜே.வி.பியில் கட்சி உறுப்பினர்களாக இருந்த மற்றும் கட்சியிலிருந்து வெளியேறியவர்கள் உங்களது கட்சியின் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள். முதலாவது உங்கள் கட்சி தலைவர் இதுவரையில் நாடு திரும்பாதது பற்றியதாகும்.**

நாம் எம்மைப் பற்றி ஒரு பிம்பத்தை கட்டியெழுப்ப முயற்சிக்கவில்லை. நாம் எவரும் கட்சியின் பொறுப்புகளையன்றி பதவிகளை வகிப்பதில்லை. தோழர் சோமவங்க அமரசிங்க அவர்கள் சர்வதேச தொடர்புகளை பலப்படுத்திக் கொண்டு இன்னும் சில நாட்கள் வெளிநாட்டில் இருக்க வேண்டும் என்பது கட்சியின் தீர்மானம். அதேவேளை அவருக்கெதிரான பயமுறுத்தல் இன்னும் உள்ளது.

**மக்களுக்கு சந்தேகம் ஒன்றுள்ளது. உங்களது பிரச்சார சுவரொட்டியில் மணி சின்னத்தின் முன்னால் "1" இலக்கம் இருப்பது பற்றியே இந்த சந்தேகம் நிலவுகின்றது. நீங்கள் இதன் மூலம் விருப்பத் தெரிவை இவருக்கு இடுங்கள் என கூறுகின்றீர்களா?**

ஒருபோதும் இல்லை. தேர்தல் சட்டத்தில் மூன்று விருப்பத் தெரிவுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் புள்ளடி பற்றி கூறப்படவில்லை. நாம் பொது வேட்பாளரைத் தவிர வேறு தெரிவு இல்லை என்று தெளிவாகக் கூற விரும்புகின்றோம்.



# கருணையினால் அல்ல!

ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய நால்வரின் கருணை மனுவை, தமிழக அமைச்சரவையின் ஆலோசனையைக் கேட்காமலேயே ஆளுநர் நிராகரித்தது தவறு என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ராஜீவ் கொலையையொட்டிக் 'குற்றம்' இழைக்காமலேயே தண்டனை பெற்ற தமிழகம் முழுவதும் தாக்கப்பட்ட தி.மு.க. தொண்டர்களின் தலைவர் கருணாநிதி இக்கருணை மனுவின் மீது கருத்துச் சொல்லியாக வேண்டும்.

இந்நால்வரின் தண்டனையும் ரத்து செய்யப்பட வேண்டுமென்று நாம் கோருகிறோம். ராஜீவ் கொலை என்பது அடிப்படையில் ஓர் அரசியல் நடவடிக்கை. இந்திய ஆளும் வர்க்கத்தின் தெற்காசிய விரிவாக்க நோக்கத்திற்கு ஈழத் தமிழ் மக்களின் தன்னுரிமைப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு அதைச் சீர்குலைத்தது இந்திய அரசு. 'இந்திய இலங்கை ஒப்பந்தம்' என்றொரு அரசியல் சதித் திட்டத்தை உருவாக்கி ஈழத்தமிழ் மக்கள் மீது திணித்தது. தன்னுரிமையை மறுக்கும் அந்த ஒப்பந்தத்தைப் புலிகளும் ஈழத்தமிழ் மக்களும் ஏற்க மறுத்தனர். இதையே ஒரு முகாந்திரமாகக் கொண்டு இந்திய இராணுவம் ஈழத்தின் மீது ஓர் ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தியது. ஆயிரக்கணக்கான தமிழ் மக்களும், புலிகளும் கொல்லப்பட்டனர். பாலியல் வன்முறை உள்ளிட்ட அனைத்து வெறியாட்டங்களையும் இந்திய இராணுவம் நடத்தியது. இறுதியில் தோல்வியுற்றுத் திரும்பியது.

இந்த ஆக்கிரமிப்புப் போரின் எதிர்விளைவு தான் ராஜீவ் கொலை. எனவே அது போர்க் குற்றவாளிக்கெதிரானதொரு நடவடிக்கை. இந்திய இலங்கை ஒப்பந்தத்தால் புனிதப்படுத்தப்பட்ட தமது ஆக்கிரமிப்பை ஓர் அரசியல் நடவடிக்கையாகச் சித்திரித்துக் கொள்ளும் இந்திய ஆளும் வர்க்கம், இந்த பதில் நடவடிக்கையை மட்டும் அரசியல் வகைப்படாத கிரிமினல் நடவடிக்கையாகச் சித்திரிப்பதும், அதன் அடிப்படையில் தண்டிப்பதும் மோசடியாகும். ராஜீவ் கொலையுண்ட போதும் நாம் இந்தக் கருத்தைத் தான் முன்வைத்தோம். இன்று இந்நால்வரின் தண்டனை ரத்து செய்யப்பட வேண்டும் என்பதையும் அதே அடிப்படையில் தான் கோருகிறோம்.


அடுத்து இந்தத் தீர்ப்பும் தண்டனையும் சட்டவிரோதமானது என்கிறோம். ஏற்கெனவே 26 பேருக்கு மரண தன்டனை விதித்த சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பும், தற்போது நான்கு பேருக்கு மரண தண்டனையை உறுதி செய்திருக்கும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பும் அரசியல் நோக்கத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கொலை பயங்கரவாத நடவடிக்கை அல்ல என்றும், எனவே அச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே கூறியுள்ளது. தடா சட்டமும் காலாவதியாகிவிட்டது. தற்போது இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் இத்தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும், தீர்ப்புக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்ட சாட்சியங்களும், வாக்குமூலங்களும் தடா சட்டத்தின் கீழ் பெறப்பட்டவை தான்.

மேலும், குற்றம் சாட்டப்பட்டோருக்காக வாதாடிய வழக்கறிஞர்கள் முன் வைத்த வாதங்களுக்கு விடை கூறாமலேயே கட்டைப் பஞ்சாயத்துத் தீர்ப்பை அளித்திருக்கிறது உச்ச நீதிமன்றம். தீர்ப்பை மீளாய்வு செய்யக் கோரும் மனுவை பரிசீலனைக்கே எடுத்துக் கொள்ளாமல் மரண தண்டனையை மீண்டும் உறுதி செய்திருக்கிறது. தாங்களே புனிதம் என்று கூறும் சட்ட நடைமுறைகளை உச்ச நீதிமன்றம் அலட்சியப்படுத்தியுள்ளது. எனவே சட்ட ரீதியாகச் செல்லத்தக்கதல்ல என்ற அடிப்படையிலும் இத்தண்டனை ரத்துச் செய்யப்பட வேண்டும் எனக் கோருகிறோம்.


மரண தண்டனை விதிக்கப்பட்ட நால்வரும் இந்நடவடிக்கையில் நேரடியாகப் பங்கேற்றவர்களல்ல என்றபோதிலும், சட்ட ரீதியாகவே கூட இது செல்லத்தக்கதல்ல என்ற



நளினி



முருகன்



சாந்தன்



பேரறிவாளன்

போதிலும் உச்ச நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பு வழங்குவதற்கும், ஆளுநர் பாத்திமா பீவி உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது ஆளுநரின் அதிகாரம் குறித்துத் தானே வழங்கிய தீர்ப்புக்கு எதிராக, இப்போது கருணை மனுவை தன்னிச்சையாக நிராகரிப்பதற்கும் காரணம் இருக்கிறது.

"ஈழ விடுதலைக்கு இந்திய அரசு எவ்வளவோ உதவியபோதிலும், அவர்களது நன்மைக்காகவே ஒரு ஒப்பந்தத்தை அரும்பாடுபட்டு ராஜீவ் உருவாக்கித் தந்த போதிலும் நன்றிகெட்டதனமாகப் புலிகள் அமைதிப் படைச் சிப்பாய்களைக் கொன்றனர். தேர்தலில் வெற்றி பெற்றிருக்கக் கூடிய ஒப்பற்ற இளம் தலைவர் ராஜீவையும் கொன்றுவிட்டனர்" - என்ற பொய்ப் பிரச்சாரம் அன்று முதல் இன்றுவரை தொடர்ந்து இங்கே நடத்தப்படுகிறது. ஈழத்தில் இந்திய அரசு நடத்திய சதிகள், ஒப்பந்தத்தின் மோசடித் தன்மை, 'அமைதி'ப்படையின் அட்டூழியங்கள் என்பன முதல் அத்தேர்தலில் தோல்வியடையும் நிலையில் தான் ராஜீவ் இருந்தார் என்பது வரையிலான பல உண்மைகள் திட்டமிட்டே இருட்டடிப்பு செய்யப்படுகின்றன. மரண தண்டனையை ஆதரிக்கும் சோ முதல் வாழப்பாடி ஈறான அனைவரும் இப் பொய்களையே தம் தரப்பு வாதங்களாக முன்வைக்கின்றனர். எனவே, இப்பொய்ப்பிரச்சாரம் தோற்றுவித்த உணர்ச்சியின் அடிப்படையில் தான் உச்ச நீதிமன்றத் தீர்ப்பும், ஆளுநரின் நடவடிக்கையும் அமைந்திருந்தன.

இந்நிலையில் இந்த மரண தண்டனையை ரத்து செய்யக் கோருவோரின் அணுகுமுறை எவ்வாறிருக்க வேண்டும் என்பதைப் பரிசீலிப்பதும் அவசியமாகிறது.

இன்று இந்த நால்வரின் மரண தண்டனையை ரத்துச் செய்வதற்குப் பெரிதும் முனைந்து வருபவர்கள் (அநேகமாக) அனைவருமே, அன்று ராஜீவ் கொலை செய்யப்பட்டபோது, 'கொலையாளி'களை வன்மையாகக் கண்டித்தார்கள். ராஜீவுக்கு இரங்கல் தெரிவித்தார்கள். இந்தக் கொலை சி.ஐ.ஏ.யின் சதி என்கிறார்கள். இதற்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை என்றும், நீதிமன்றம் விசாரித்து யாரைக் குற்றவாளி என முடிவு செய்தாலும் அவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கட்டுமென்றும் முன் மொழிந்தார்கள்.

இத்தகைய போக்குகளை விமரிசித்து ராஜீவ் கொலைக்கான நியாயங்களை நாம் எழுதினோம். அதன் விளைவாக நாம் "மல்லிகை"யின் மணத்தை நுகர நேர்ந்ததுடன், ஏராளமான தோழர்கள் தடா, தே.பா.சட்டம், ராஜதுரோகம் உள்ளிட்ட வழக்குகளில் சிறை செல்லவும் நேர்ந்தது. எனினும், 'ஈழத்தமிழர்' என்று சொன்னாலே வேட்டையாடப்பட்ட ஒரு காலத்தில், ஈழ ஆதரவு எனப் பேசினாலே கைது செய்யப்பட்ட காலத்தில் 'புத்திசாலித்தனமாக' மௌனம் சாதிப்பதை விட வெளிப்படையாகப் பேசுவது நம் அரசியல் கடமை என்ற அடிப்படையில் நாம் அவ்வாறு செய்தோம்.

அன்று அரசியல் பேசாமல் "நீதிமன்றம் தீர்ப்பளிக்கட்டும்" என்று சட்டவாதத்தில் நுழைந்து தப்ப முயன்றவர்களது அணுகுமுறை தவறு என்று மீண்டும் இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. அரசியல் முன்முயற்சியை இழக்காமல் சட்டவாய்ப்புகளைப் பயன்படுத்துவது என்பது வேறு, சட்ட வாதத்தையே அரசியலாக்கிக் கொள்வதென்பது வேறு.

சட்ட வாதத்தையே அரசியலாக்கிக் கொள்பவர்கள் இந்திய ஆளும் வர்க்கத்தின் அரசியல், அதன் சட்டம், நிறுவனங்கள் இவற்றின் எல்லைக்குள் நின்று பேச முடியுமேயொழிய இவற்றைக் கேள்விக்குள்ளாக்க முடியாது. எனவே தான் "ஒரு ஆக்கிரமிப்புப் போர் குற்றவாளியைக் கொன்றதற்குத் தூக்கு தண்டனையா" என்ற கேள்வியை இன்றைக்கும் அவர்களால் முதன்மைப்படுத்த இயலவில்லை. நீதிமன்றத்தின் மீது தங்களது விசுவாசத்தைப் பிரகடனம் செய்தவர்கள் தீர்ப்பின் மோசடியை முதன்மைப் படுத்தியும் இயக்கம் எடுக்க முடியவில்லை. அதன் மீது அதிருப்தி தெரிவிக்க மட்டுமே முடிகிறது.

நான்கு பேரைத் தூக்கிலிடுவது அரசியல் ரீதியான அநீதி, சட்ட ரீதியாகவும் அநீதி என்று போராடுவதற்குப் பதிலாக "இந்த நால்வருக்காகக் கேட்கவில்லை. மரண தண்டனையே ஒழிக்கப்பட வேண்டும் எனக் கோருகிறோம்" - என்று முதலாளித்துவ மனிதாபிமானத்தின் அடிப்படையில் கோரிக்கை எழுப்பப்படுகிறது. அப்படியானால் "ஆட்டோ சங்கருக்கு ஏன் கேட்கவில்லை?" என்று பார்ப்பனத் திமிருடன் சோ கேட்டால் "அப்போதே கேட்காதது தவறு தான்" என்று பதிலளிக்கிறார் இராமதாஸ். அதுமட்டுமல்ல, குறிப்பாக இந்த நால்வருக்காகப் பேசாமல் பொதுவாக மரண தண்டனை ஒழிப்புப் பற்றிப் பேசும் கலைஞர், வை.கோ. போன்றோரை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்தி நிர்ப்பந்தம் கொடுப்பதற்குப் பதில் அவர்களது புகழ் பாடப்படுகிறது. மரண தண்டனை விதிக்கப்பட வேண்டிய மத வெறிக் கொலைகாரன் தாக்கரே போன்றோரிடம் ஆதரவு திரட்டப்படுகிறது.

இறுதியாக சோனியாவே 'குற்றத்தை' மன்னித்துவிட்டார். யாரையும் தூக்கிலிட வேண்டுமெனத் தானோ, தன் பிள்ளைகளோ விரும்பவில்லை எனக் கூறிவிட்டார். 'மிகக் கொடிய கொலையைச் செய்த குற்றவாளிகளுக்கும்' இரக்கம் காட்டிய தாயுள்ளத்துக்கு நன்றி தெரிவிக்க வார்த்தையில்லாமல் தடுமாறுவதாகக் கூறியுள்ளார் இராமதாஸ். மரண தண்டனை ரத்தாவதற்கு முன்னால், ராஜீவ் கொலையின் அரசியல் ரீதியான நியாயத்தையும், நால்வரும் நிரபராதிகள் என்ற சட்ட பூர்வமான உண்மையையும் ஒரே வாக்கியத்தில் ரத்து செய்துவிட்டார் இராமதாஸ்.

ஜெயின் கமிசன் அறிக்கையில் பொய்க் குற்றம் சாட்டப்பட்ட தி.மு.கவை அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும் என்று கோரி அதற்காக ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கவிழ்த்த காங்கிரஸ் - சோனியாவின் திடீர் கருணைக்கு பல காரணங்கள் இருக்கலாம்.

புலிகளின் விரோதம் தேவையில்லையென்பதில் தொடங்கி, இந்த அறிவிப்பு அளிக்கக் கூடிய 'அனுதாப அரசியல்' ஆதாயம் வரை காரணம் எதுவாயுமிருக்கலாம். எனினும், சோனியாவின் மனிதாபிமானம் நால்வரையும் மரண தண்டனையிலிருந்து விடுவிக்கு முன்னால், அவரது கணவரை ஈழ ஆக்கிரமிப்புப் போர்க் குற்றத்திலிருந்து - வெகுசனக் கருத்திலும் விடுதலை செய்து விடும். "மரண தண்டனை ஒழிப்பு - மனிதாபிமான" முழக்கத்தின் சாதனை இது.

என்னதானிருந்தாலும் நான்கு பேரைத் தூக்கு மேடையில் நிறுத்தி வைத்துக் கொண்டு அரசியல் பேசிக் கொண்டிருக்க முடியுமா என்று சிலர் கேட்கலாம். நான்கு பேரின் உருவத்தில் தூக்கு மேடையில் நின்று கொண்டிருப்பது ஒரு அரசியல் நியாயம். மரண தண்டனை ஒழிப்பு எனும் பொதுவான முழக்கம் அவர்களைக் காப்பாற்றக் கூடும். ஆனால், அந்த அரசியல் நியாயத்தை அது தூக்கிலிட்டுவிடும்.

மரண தண்டனை என்பது குற்றவியல் சட்டம் சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல. வர்க்க, சாதி, இன ஒடுக்குமுறை நிலவும் சமுதாயத்தில் அந்த ஒடுக்குமுறைகளின் விளைவாக எந்த நீதிமன்ற விசாரணையுமின்றி அன்றாடம் ஆயிரக்கணக்கான மக்களின் உயிர் பல வடிவங்களில் பறிக்கப்படுகின்ற சமுதாயத்தில், அவற்றுக்கெதிராகப் போராடும் மக்கள் 'எதிர் வன்முறையைப் பயன்படுத்தும் உரிமை'யுடனும் நேரடியாகச் சம்பந்தப்பட்டது இந்தப் பிரச்சினை. இந்த உரிமையின் அடிப்படையில் நால்வரின் மரண தண்டனையும் ரத்து செய்யப்பட வேண்டும் என்று கோருகிறோம் - கருணையினால் அல்ல.

நன்றி: புதிய கலாசாரம்
டிசம்பர் 99

(தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் புதிய கலாசாரம் சஞ்சிகையின் ஆசிரிய தலையங்கம் இது.)

நன்றி - நூலகத்திட்டம்



# கைலாசபதி: முழுமையும் பகுதியும்

– சி. சிவசேகரம்

கைலாசபதி தவறுகட்கு அப்பாற்பட்ட அதிமானுடரல்லர். அவர் அத்தகைய அதி மானுடராகத் தன்னைக் கருதியவருமல்லர். அவருடன் கடுமையான கருத்து வேறுபாடுடையோர் பலர் அவர் வாழ்ந்த காலத்திலேயே தமது கருத்து வேறுபாடுகளைக் கூறியுள்ளனர். சிலர் அவர் இறந்த பின்னரே தமது மாறுபட்ட நிலைப்பாடுகளைக் கூற முன் வந்தனர். இதற்கான காரணங்களை நான் இங்கு ஆராய விரும்பவில்லை. கைலாசபதியின் சமுதாயப் பங்களிப்பு பல்துறை சார்ந்தது. அவர் தன்னை ஒரு அரசியல்வாதியாகவோ பகிரங்கமாக எந்தவொரு அரசியற் கட்சியின் உறுப்பினராகவுமோ காட்டிக் கொள்ளவில்லை. ஆயினும் அவரது பல்துறை சார்ந்த நடவடிக்கைகளிலும் அவரது அரசியல் நிலைப்பாட்டின் முத்திரை தெளிவாகவே பதிந்திருந்தது. சர்வதேச விவகாரங்களிலும் உள்நாட்டு அரசியலிலும் அவர் ஒடுக்கப்பட்ட மக்களதும் அவர்களது போராட்டங்களினதும் தரப்பிலேயே நின்றார். சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தின் பிளவின் பின் ஏற்பட்ட விவாதத்திலும் அவரது நிலைப்பாடு தெளிவாக மார்க்சிய லெனினிய வாதிகளின் பக்கத்திலேயே இருந்தது.

கைலாசபதி பற்றிய கடுமையான விமர்சனங்கள் பெரும்பாலும் வலதுசாரி அரசியற் சார்புடையோரிடமிருந்தே வந்தன். சில சமயங்களில் தம்மை மார்க்சிய வாதிகளென்று கூறிக் கொள்வோரும் கைலாசபதியுடன் முரண்பட்டது உண்டு. மார்க்கிசியம் என்பது விவாதங்கட்கும் அபிப்பிராய வேறுபாடுகட்கும் அப்பாற்பட்ட திட்டவட்டமான நிலைப்பாடுகளின் கோவை அல்ல.எனவே ஒரு நிலமையை ஒருவர் அறிந்துள்ள தன்மைக்கேற்ப அது பற்றிய அவரது

மதிப்பீடுகளும் அவர் முன் வைக்கும் தீர்வுகளும் வேறுபடலாம். கைலாசபதியுடன் முரண்பட்ட பல

வலதுசாரிகள் அவரது அடிப்படையான நிலைப்பாட்டுடன் முரண்பட்டனர். கைலாசபதி-யின் சமூகச் சார்புடைய இலக்கிய விமர்சனர் பார்வையை நேரடியாக எதிர்த்தது முறியடிக்க முடியாத காரணத்தால் தனிப்பட்ட அவதூறுகளில் இறங்கினோரும் உள்ளனர்.

கைலாசபதியின் பங்களிப்புக்களில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அவர் அளித்த ஊக்கமும் கல்வித் துறையில் அவர் ஆற்றிய பணியும் பற்றி அதிகம் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை. அவர் ஒரு அரசியல்வாதியதகக் கருதப்படாததால் அவரதுஅரசியல் நிலைப்பாடு பற்றிய வாதப் பிரதிவாதங்கள் அதிக முக்கியத்துவம் பெறவில்லை. கைலாசபதி என்ற திறனாய்வாளர் தான் அதிகளவிற் சர்ச்சைக்குரிய மனிதரானார். இலக்கியம் பற்றி அவர் வெளிப்படுத்திய கருத்துகள் பல்வேறு சூழ்நிலைகள் தொடர்பாகவும் பல்வேறு கோணங்களில் நின்றும் வழங்கப்பட்டவை. அவற்றைத் தனித்தனியாக எடுத்துப் பார்த்து அவற்றின் குறைபாடுகளை அவரது பார்வையினது குறைபாடென்றோ அதை விட ஒருபடி அப்பாற் சென்று மார்க்சிய அணுகுமுறையின் குறைபாடென்றோ வாதிப்பது குருடனுக்குப் பால் காட்டிய கதையின் பாங்கிலேயே அமையும். இவ்வாறு கைலாசபதியின் திறனாய்வு பற்றிக் குறை கூறுவோர் ஒருவருக்கு ஒருவர் முரணான முறையிலேயே அவருக்கு எதிரான வாதங்களை முன் வைக்கவும் நேருகிறது. ஆறுமுகநாவலரின் பங்களிப்பை அவர் மதிப்பிட்டு அதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதைக் கண்டிப்பவர்கள் இலக்கியத்தின் வர்க்கத் தன்மை பற்றிய அவரது நிலைப்பாட்டை மறுப்பவர்களுடன் வேறுபடுகின்றனர். சில சமயம் இரண்டு விதமான தாக்குதல்களும் ஒரே தளத்திலிருந்து வந்துள்ளன. இதற்கான காரணங்களுட் கைலாசபதி பற்றிய விமர்சனங்கள் கைலாசபதி பற்றியும் மார்க்சிய அணுகுமுறை பற்றியும் விமர்சகர்கள் கொண்டிருக்கும் விறைப்பான பார்வையும் அடங்கும்.

ஒரு குறிப்பட்ட சமுதாயப் பார்வையும் வர்க்க அடிப்படையும் கொண்ட ஆக்க இலக்கியப் படைப்பை உருவாக்குபவர் ஒரு போதனாசிரி-யரின் பாங்கில் இன்ன வகையில் இப்படி எழுதினாற்தான் தனது நிலைப்பாட்டை வலியுறுத்த முடியும் என்று திட்டமிட்டு எழுதுகிறார் என்பது மார்க்சியத் திறனாய்-வுக்குரிய கருத்தல்ல. ஒரு படைப்பாளியின் ஆக்கங்கள் அவரது அனுபவத்திற்கும் அறிவிக்கும் ஏற்றவாறே அமைகின்றன.ஒருவரது அறிவும் அனுபவ்மும் அவரது சமுதாயச் சூழலில் தங்கியுள்ளன. வர்க்க சமுதாயத்தில் தனி மனித சிந்தனை ஒருவரது வர்க்கப் பின்னணிக்கும் சமுதாயப் பார்வைக்கும் ஏற்றவாறு அவரது அனுபவங்களூடு விருத்தி அடைகிறது. என்வே சரி-பிழை, நீதி-அநீதி, நெறி-நெறியல்லாதது போன்ற மதிப்பீடுகளும் மனிதாபிமானம் அழகியல் என்பன தொடர்பான கொள்கைகளும் ஒரு புறம் மனித இனம் என்ற அடிப்படையிற் சில பொதுவான தன்மைகளைக் காட்டினாலும் மனித இருப்பின் வேறுபாடுகளையும் தம்முட் கொண்டிருப்பன. இலக்கியமோ பிற கலை வடிவங்களோ அழகியலோ மனிதரது இருப்புக்கு

அப்பாற்பட்டவையல்ல. மனித இருப்புக்கும் அதனைத் தீர்மானிக்கும் சமுதாய இயல்பிற்கும்

இயக்கத்திற்கும் அடிப்படையான முரண்-பாடுகளை கலைகளிலும் இலக்கியங்களிலும் ஆதிக்கஞ் செலுத்துகின்றன. மனித உறவுகளை நிர்ணயிக்கும் சமுதாய முரண்பாடுகள் இலக்கியத்திற் தெரிவது மட்டுமின்றி அம்முரண்-பாடுகளின் தீர்வுக்கான போராட்டமும் இலக்கியத்தினூடு நடை பெறுகின்றது. மனிதனது சமுதாய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் சமுதாயத்தின் வர்க்கத் தன்மையாலும் வர்க்கப்-போராட்டத்தாலும் நிர்ணயிக்கப்படுமாயின் இலக்கியமும் பிற கலை வடிவங்களும் அதற்கு விலக்காக அமைய முடியாது. இந்த வாதத்தை ஒருவர் வரட்டுத்தனமாக ஆதரிக்க முடியும். வரட்டுத்தனமாகவே இன்னொருவர் அதனை எதிர்க்கவும் முடியும். இவை சிறுபிள்ளைத்தனமான விவாதங்களுக்கே வழிவகுப்பன. கைலாசபதி கலை இலக்கியங்களில் அழ்கியலை



வலியுறுத்தியவர். அதே வேளை அழகியல் ஆக்கங்களின் உள்ளடக்கத்தினின்று வேறுபடுத்தப்பட்டு உள்ளடக்கத்தினும் மேலான ஒன்றாகக் காட்டப்படுவதை வன்மையாக எதிர்த்தவர். அழகியற் கோட்பாடுகளை மிகையாக வலியுறுத்தி 'கலை கலைக்காகவே' என்ற கோஷத்துக்கு புத்துயிர் ஊட்டியவர்கள் இக்காரணத்துக்காகவே கைலாசபதியை கடுமை-யாகத் தாக்கினர். மார்க்சியக் கலை இலக்கிய நோக்கைத் தமிழர் பழைய இலக்கியங்கட்கும் பிரயோகித்துத் தமிழர் வரலாறு பற்றிய பிரமைகளைக் களையவும் அவற்றினூடு தமிழர் வரலாறு பற்றிய தெளிவான ஒரு பார்வையைப் பெறவும் கைலாசபதி பெரும் பங்களித்தார். கைலாசபதி பற்றிச் செய்யப்படும் மதிப்பீடுகள் கைலாசபதியின் ஒட்டு மொத்தமான பங்களிப்பை முதன்மைப்படுத்துவது நியாயமானது. கைலாச-பதியின் விமர்சனங்களில் உள்ள குறைபாடுகள் அவை செய்யப்பட்ட சூழலின் அடிப்படையில் கருதப்படுவதும் அவசியம்.

மு.தளையசிங்கம் பற்றிய விமர்சனத்தில் கைலாசபதியின் வாதங்கள் சில அவரது முக்கியமான கருத்தைப் பலவீனப்படுத்தும் வகையில் அமைந்திருந்தன. அக்குறைபாடுகள் தளையசிங்கம் பற்றிய அவரது மதிப்பீட்டைப் பொய்ப்பிக்கவில்லை. கனமான வாதங்கட்கு அருகருகாகக் கனங் குறைந்த வாதங்களை வைத்தமை கைலாசபதியின் விமர்சனத்தை அவரது அரசியல் எதிரிகள் தாக்குவதற்கு வசதி ஏற்படுத்திற்று. அதே வேளை கைலாசபதி மீது அவர்கள் தொடுத்த தாக்குதல்களின் கீழ்த்தரமான தன்மை அவர்களது தரப்பில் எவ்வளவு நியாயம் இருந்தது என்பதன் அளவு கோலாகவே எனக்குத் தெரிந்தது. இத்தனைக்கும் தளையசிங்கத்தின் மார்க்சிய விரோதத்தின் வறுமையைக் கைலாசபதி கணிசமான சகிப்புத் தன்மையுடனேயே விமர்சித்திருந்தார்.

கைலாசபதியின் முக்கியமான ஒரு தவறு மஹாகவி பற்றிய அவரது மதிப்பீடு தொடர்பானது.

மஹாகவியின் சமூக அரசியற் பார்வையின் போதாமையை 1960களின் அரசியற் சூழல் மிகைப்படுத்தியதன் விளைவாகவே கைலாசபதி மஹாகவியின் முக்கியத்துவத்தைத் தவற விட்டு

விட்டார் என நினைக்கிறேன். இத்தவறு பற்றிக் கைலாசபதியை இன்று விமர்சிப்போர் சிலர். கைலாசபதி இருந்த காலத்தில் அதைத் திருத்து-விக்க வாய்ப்பிருந்தும் ஏன் முயலவில்லையோ தெரியாது.

ஈழத்து இலக்கிய விமர்சன நடைமுறையின் இடர்ப்பாடுகள் சகல விமர்சகளையும் வெவ்வேறு

அளவுகளிற் பாதித்துள்ளது. கைலாசபதியின் தவறுகள் அலட்சியம் செய்ய வேண்டியவையல்ல. அவை நேர்ந்த சூழலின் அடிப்படையில் மதிப்பிட வேண்டியன. நமது இலக்கியத் துறையின் விஞ்ஞான ரீதியான பார்வையும் சமுதாயச் சார்பும் சமுதாய மாற்றத்துக்கான முனைப்பும் கைலாசபதியிடம் இருந்து பெற்றவற்றைக் கருத்திற் கொண்டால் கைலாசபதியின் குறைபாடுகள் மிக

அற்பமானவையே. இந்த இடத்தில் சாள்ஸ் டார்வின் முன் வைத்த பரிணாமக் கோட்பாடு அவர் முன் வைத்த அதே வடிவில் இன்று ஏற்கப்படுவதில்லை என்பது நினைவூட்டத்தக்க்து. குறிப்பான பல அம்சங்களில் டாவினின் விளக்கங்களில் குறைபாடுகளும் தவறுகளும் காணப்படுகின்றன. ஆயினும் அவர் எடுத்துக் காட்டிய பரிணாமவாத அடிப்படை (உயிரினங்கள் எளிய ஜீவராசிகளிலிருந்து தோன்றிச் சூழலுக்கமைய மாற்றமடைந்து உயரிய வடிவங்களாக விருத்தி பெற்றன என்ற கருத்து) அதாவது டாவினது வாதத்தின் முழுமை இன்னமும் மறுக்க இயலாததாகவே உள்ளது. டாவின் சொன்னவை பல தவறானவை. எனவே பரிணாமக் கொள்கையும் செல்லுபடியாகாது என்ற

வாதம் சிலரால் இன்னமும் முன் வைக்கப்படுகிறது. இவர்களது வாதம் கைலாசபதியின் விமர்சனத் தவறுகளை ஆதாரமாக்கி அவரது இயங்கியல் பொருள் முதல்வாத அடிப்படையிலான இலக்கியக் கொள்கையை நிராகரிப்பவர்களது வாதத்தினின்று மூடத்தனத்தின் அளவில் வேறுபட்டதல்ல.

தமிழிலக்கியத் துறைக்கு கைலாசபதியின் ஒட்டு மொத்தமான பங்களிப்பு என்னவென்று பல முறை

பலரும் விவரமாக வெவ்வேறு கோணங்களி-னின்றும் எழுதியுள்ளனர். அதைச் சுருக்கமாக அங்கு குறிப்பிடுவது தகுமென்று நம்புகிறேன்.

கைலாசபதி விமர்சனத் துறையில் அடியெடுத்து வைக்கும் வரை தமிழிலக்கியத்தில் இடதுசாரி

முனைப்போ இயங்கியற் பார்வையோ இல்லாதிருந்தது என்று எவரும் சொல்லியதில்லை. ஆயினும் தமிழ் இலக்கிய விமர்சனம் விறைப்-பான மரபு சார்ந்த பார்வையின் ஆதிக்கத்தின் கீழேயே இருந்தது. இலக்கியத்தின் சமுதாயச் சார்பான பண்பையும் சமுதாய மாற்றத்தில் அதன்

பணியையும் உணர்ந்த முற்போக்கு இலக்கியம் கைலாசபதியின் வருகைக்கு முந்தியதேயாயினும்

விஞ்ஞான ரீதியான விமர்சன முறையையும் இலக்கியத்தின் சமூகச் சார்பான தன்மையையும்

தெளிவுபடுத்தி தமிழிற் பிரதேசம் வரையில் அவரது பங்களிப்பு முன்னோடியானது.

கைலாசபதியின் விமர்சன முறை அவரது பல்துறை சார்ந்த பார்வையாற் செழுமை பெற்றது. கலை கலைக்காகவே என்ற சமுதாயச் சார்பற்ற அழகியற் கோட்பாட்டையும் யாந்திரிகமான மரபு வாத அழகியற் கோட்பாட்டையும் வெற்றிகரமாக எதிர்ப்பதில் அவரது விரிந்த பார்வை மிகவும் பயன்பட்டது. மார்க்சிய லெனினியவாதிகள் அல்லாத இடது சாரிகளை அதிர வைக்கும் விதமாகச் சோவியத் யூனியனில் ஏற்பட்ட மாற்றங்கள் பிற்போக்கு முகாமுக்கு ஒரு ஊக்கியாகி விட்டன. இலக்கியத் துறையிலும் பிற்போக்கின் பீடிப்பை நாம் மேலும் அதிகமாக உணர முடிகிறது. அதற்கு முகங் கொடுப்பதில் கைலாசபதி முன் வைத்த இலக்கியக் கோட்பாடு இன்னும் முற்போக்கு இலக்கியவாதிகளதும் விமர்சகர்-களதும் கையில் ஒரு வலிய ஆயுதமாகவே உள்ளது.

தமிழ் இலக்கிய வரலாறு பற்றியும் பழந்தமிழ் சமுதாயங்கள் பற்றியும் தமிழரிடையே கட்டியெழுப்பப்பட்ட பொய்களையும் பிரமை-களையும் களையும் முகமாகத் த்மிழகத்தில் வானமாமலை வரலாற்றியல், தொல்பொருட் துறைகளில் ஆற்றிய பணியுடன் இணைந்து கைலாசபதியின் இலக்கிய ஆய்வு செயற்பட்டது. சங்க இலக்கியங்கள் பற்றியும் தமிழரின் பொற்காலம் எனப்படும் சோழர் ஆட்சிக் காலச் சமுதாயம் பற்றியும் கைலாசபதி அவர்கள் முன் வைத்த விளக்கங்கள் தமிழர் த்ம் வரலாற்றை நிதானத்துடன் நோக்குவதற்குப் பெரிதும் உதவ்வன.

பாரதி ஆறுமுகநாவலர் போன்றோர் பற்றி தமிழர் நடுவே நிலை பெற்ற படிமங்களின் அடிப்படை

யிலேயே நெடுங்காலமாக அவர்களது பங்களிப்பு மதிப்பிடப்பட்டு வந்துள்ளது. கைலாசபதி அவர்களது பங்களிப்பை யதார்த்த பூர்வமாகவும் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்துடனும் மதிப்பிட்டமை மார்க்சியவாதிகளால் எவ்வாறு தமது அகச் சார்பும் சமுதாயப் பார்வையும் தமது புற நிலையான ஆய்வுகளிற் குறுக்கிடாது நிதானமாகச் செயற்படக் கூடுமென்பதற்கான நல்ல

எடுத்துக் காட்டு எனலாம்.

ஈழத் தமிழ் இலக்கியத்திற்குரிய தனியான தன்மையை எடுத்துக் காட்டியதோடு பல எழுத்தாளர்களையும் விமர்சகர்களையும் ஊக்குவித்து வளர்ப்பதில் கைலாசபதியின் பணி

அனைவரும் அறிந்ததே.எனினும் இதில் முக்கியமான அம்சம் ஏதெனில் ஈழத்து ஆக்க இலக்கியம் பற்றி தமிழகத்தின் இலக்கிவாதிகள் சிலர் வெளியிட்ட தாழ்வானதும் தவறானதுமான

எண்ணத்தை மறுதலித்துப் பேசியதுடன் செயலிலும் இறங்கிய கைலாசபதி ஈழத்து இலக்கியத்தை தமிழகத்துடன் பகைமையான ஒன்றாகக் காணவோ காட்டவோ முனையவில்லை.அவர் போன்றோர் தரமான சமுதாய உணர்வுடைய ஆக்கங்களை ஊக்குவித்து உலாவ விட்டதன் மூலம் வியாபார இலக்கியத்திற்கு சவாலாக நிமிர்ந்து நிற்கும் அளவிற்கு ஈழத்து முற் போக்க ஆக்க இலக்கியத்தால் உயர முடிந்தது. கைலாசபதியின் இப்பங்களிப்பின் முக்கியத்துவம் ஈழத்தில் மட்டுமின்றி தமிழகத்திலும் உணரப்பட்டதென்றாற் தவறில்லை.

கைலாசபதியின் எழுத்தாற்றல் அவரது சொல் வன்மைக்கும் அறிவுத் திறனுக்கும் மட்டும் உரியதல்ல.நினைத்ததை மூடி மறைக்காமலும் மழுப்பாமலும் சொல்லும் திறமை அதன் ஒரு முக்கி

அம்சமெனலாம். இது அவருக்குப் பல பகைவர்களைச் சம்பாதித்தது உண்மைதான். எனினும் அவரது எழுத்தின் உறுதியும் தைரியமும் விசயங்களை ஆய்ந்தறிந்து சொல்லும் நிதானமும் எந்த நல்ல இலக்கியவாதியிடமும் விமர்சகனிட-மும் விரும்பத்தக்க பண்புகள்.

கைலாசபதியின் பங்களிப்பின் தன்மையும் முக்கியத்துவமும் பற்றி அறிய விரும்புவோருக்கு ஒரு நல்ல அளவு கோலெதெனின் அது அவரது கருத்துகளுடன் உடன்படுவோரது மதிப்பீடு எதுவுமல்ல.

மார்க்சிய விரோதிகளது பிரதான இலக்காகத் தமிழ் எழுத்துலகிற் கைலாசபதி இன்னமும் திகழ்வது அவரது முக்கியத்துவத்தை இடது சாரி முற்போக்கு இலக்கிவாதிகள் மறந்தாலும் பிற்போக்குவாதிகள் எளிதில் மறக்கமாட்டார்கள் என்பதையே நினைவூட்டுகிறது. என்றைக்கு மார்க்சிய விரோதிகள் கைலாசபதியைப் பாராட்டத் தொடங்குகிறார்களோ அன்றைக்கு முற்போக்குவாதிகள் கொஞ்சம் விழிப்பாக இருக்க வேண்டி ஏற்படும்.

நல்ல மார்க்சியவாதி மார்க்ஸ் சொன்னதை-யெல்லாம் கிளிப்பிள்ளை போல ஒப்புவிக்கக் கற்றவரல்ல மாறி வரும் உலகச் சூழலுக்கேற்ப மார்க்சிய அறிவு முறையைப் பயன்படுத்த வல்லவர் நல்ல மார்க்சியவாதி. அவரது மார்க்சியம் விஞ்ஞான ரீதியானது.

கைலாசபதி மார்க்சிய விஞ்ஞானத்தைத் தமிழ் இலக்கியத் துறையை ஆராயவும் செழுமைப்-படுத்தவும் பயன்படுத்தியவர். பல வகைகளில் ஒரு முன்னோடியும் கூட. அவரது பங்களிப்பின் முக்கியத்துவம் அவர் இதுவைர வழங்கிய-வற்றிடையே மட்டும் முடங்கி விடாது.

அதன் பெரும் பகுதி அவரது பங்களிப்பை சமகாலத்திற்கும் எதிர் காலத்திற்கும் ஆக்க பூர்வமான முறையில் பயன்படுத்திச் செய்ய வேண்டிய காரியங்களிலேயே உள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்

# கழுதைகளின் விஜயம்

ஊரெல்லாம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது. யாரைச் சந்தித்தாலும் இது பற்றியே பேசிக்கொண்டனர். ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது. கழுதைகளுக்கு இப்படியொரு வரவேற்பா? சிலர் தம் எரிச்சலைத் தீர்த்துக் கொண்டனர். இந்தக் கழுதைகளைக் கண்டு எத்தனை வருஷமாயிற்று.

போர் தரித்த பூமியில், இப்போது கழுதைகள் வருவதில்லை என்பதையாவது ஜீரணிக்கலாம். இந்தக் கழுதைகள் கஞ்சியூற்றிய குடிகளைக் கூட மறந்து விட்டனவே. ஒரு குடியானவன் சந்தியில் நின்று கருத்துச் சொன்னான். அனேக விழிகள் அவனை எச்சரிக்கை செய்யுமாற்போல் எரித்து நின்றன.

முன்பு கழுதைகள் மலிந்த ஒரு காலமிருந்தது. சலவைத் தொழிலாளியின் கழுதைக்கே பலம் அதிகம் என இவன் பால்யத்தில் நினைத்திருந்தான். அழுக்கு மூட்டைகளைக் காவிக்கொண்டு, வெகு ஒய்யாரமாக அது நடந்து செல்லும் அழகே தனியழகு. மாலையில் மடமடக்கும் துணிகளை உலர்த்திக் கொண்டு, ஊருக்குள் நுழையும், மையிருட்டில் முச்சந்திக்கு வரும் கழுதைகள் தென்னங்கள்ளும், வாழைப்பழத் தோலும் தின்று ஏப்பமிடும். உண்ட மயக்கம் தொண்டனுக்கு மட்டுமா? பல வருடங்களாக ரயில் ஓடாத தண்டவாளத்தில் கழுத்தை நீட்டிப் படுத்துக் கொள்ளும்.

ஒரு கழுதைக்கு ஐந்து கால்கள் என ஒரு மாலை நேரம் பள்ளியடி வீட்டிலிருந்து அது திருட்டுத்தனமாய் வெளியேறிய போது இவன் தெரிந்து கொண்டான். இவனைப் போலப் பலருக்கும் அந்த இரகசியம் அம்பலமாயிற்று. அதற்கு ஐந்து கால்கள் தான். பள்ளியடி வீட்டிலிருந்த அவளுக்குக் கழுதைச் சாயலில் ஒரு குழந்தை பிறந்தது. அவளின் கற்புப் பிற்காலத்தில் பல கழுதைகளின் சொத்தாயிற்று.

சலவைக்காரனின் கழுதை என்பதால் ஊரிலும் அதற்குக் கியாதியிருந்தது. அது தூய்மையான சின்னமெனப் போற்றப்பட்டது. பள்ளிக் கூடம், பள்ளி வளவு, பொது மைதானம், வாசிக சாலை, திருமண வீடு, பொலிஸ் நிலையம் ஒன்றும் பாக்கியில்லாமல் கழுதை மேய்ந்து வந்தது, படுத்துப் புரண்டது. தட்டிக்கேட்பாரின்றி அமர்க்களம் செய்தது. அதன் முதுகில் சவாரிக்கும், பேன் குடிக்கும் சில குருவிகள் "செக் பொயின்றுகளில் அடையாள அட்டையின்றிப் பயணம் செய்தன. கழுதைக்கு வேண்டியோர் துன்புறுத்தப்படலாமா? இது தவிரச் சில கட்டாக்காலிக் கழுதைகளும் ஊரில் வாழ்ந்தன. சலவைத் தொழிலாளியின் கழுதைக்கும், அவைகளுக்கும் ஒத்து வருவதில்லை. பொது வைபவங்களில், இரண்டும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு போக்குக் காட்டின.

இந்தக் கழுதை இனம் இன்னும் சில தினங்களில் ஊருக்குள் வருவதையிட்டு, ஊரே திமிறிக்கொண்டு நிற்கிறது. இதில் உடன் பாடில்லாதவர்கள், வாய்மூடி இருக்கட்டும் என்று ஊர்ப் பெரியவர்கள் சட்டம் போட்டு விட்டார்கள். ஊர் கூடிக் கழுதைக்குக் கொண்டாட் டம் நடத்தப்போகின்றது. இவனும் இவனின் கருத்தை ஒத்த சிலரும் கடுப்பாயிருந்தனர். பொரித்த கிழங்கும், 'பாபத ' அவியலும் தின்று கொண்டே ஊர்ப் பள்ளிக் கூட மைதானத்தில் விடிய விடியப் பேசித் தீர்த்தனர். திட்டங்கள் வகுத்தனர். தேவைப்பட்டபோது சமூகத்துக்குப் பயன்படாத கழுதைகள் இப்போது மட்டும் எதற்கு இங்கு வரவேண்டும்.


தனிநாடு கேட்டுப் போராடியவர்கள் ஊரின் நடுவே ஷெல்லெறிந்தார்கள். ஆன்மீகம் பொங்கும் பள்ளியின் முகப்பில் ஒரு ஷெல். ஏதுமறியாச் சிறுவர்கள், பெண்கள் எனத் தூக்கத்திலிருந்தோரின் வீடுகளை நோக்கி விழுந்த ஷெல்கள் என ஊரே உயிரைப் பிடித்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடித் தவித்தபோது, இந்தக் கழுதைகள் எங்கே போயின. செஞ்சோற்றுக் கடனாவது கழிக்க வரவேண்டாமோ? எல்லாக் கழுதைகளும் ஊரை அம்போ என்று விட்டு விட்டு நகரத்துக்கு ஓடிவிட்டன. அங்கு சாக்கடை நீரைப் பருகிக் கொண்டு, மயானங்களில் உறங்கியெழுந்தன.

ஊருக்குள் ஜனாசாக்கள் தீப்பெட்டிபோல ஒரே வரிசையில் அடுக்கப்பட்டு, கிரியைகள் நடந்தன. அப்போதும் ஒரு கழுதையேனும் இங்கு வந்து ஆறுதல் சொல்லவில்லை. அப்படியொன்று தான் வளர்ந்து, வாழ்ந்து வந்த கிராமத்தில் தவிடும், புண்ணாக்கும் தந்து வளர்த்த மக்களுக்கு நடந்ததாக எந்தக் கழுதையும் அறிந்ததாகத் தெரியவில்லை. கோவேறு கழுதைகள், குதிரைகள் போல் பேசித் திரிந்தன. முன்பு நகர சபையாலும், பட்டின சபையாலும் அழுக்குச் சுமந்த கழுதைகள் மமதையுடன் தலைநகரில் சேரிப் புறத்தில் குதிரைச் சாயம் பூசிக்கொண்டு கும்மாள-மிட்டன. இந்தக் கேடுகெட்ட கழுதைகளுக்கு எதற்கு விழாக் கோலம்?

உருப்படியான ஆலோசனைகள் வரவில்லை. கழுதைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். இவன் நண்பன், மறந்துவிட்ட ஒன்றை நினைவுபடுத்துவது போல் அடியெடுத்துத் தந்தான்.

"கறுப்புக் கொடி காட்டுவோம், கடையடைப்புச் செய்வோம், மூன்றாமவனோ, அதை ஹர்த்தால் என்று சுருக்கமாகச் சொல்லன். அதுக்கும் ஊர் ஒத்துக் கொள்ளணுமே என்றான். நாம் என்ன செய்திடினும் கழுதைகள் வரத்தான் செய்யும். கடையடைப்பு, ஹர்த்தால், ஆர்ப்பாட்டமெல்லாம் அவைகளுக்கு அத்துப்படி. அது தவிர சமயத்தில் ஆள் வைத்து அடிக்கவும், அடக்கவும் அவைகள் முற்படக் கூடும். கழுதை மனம் யாரறிவர்? இது தேவைதானா என்றான் மறுபடியும் இரண்டாமவன்.

நாங்கள் எதிர்ப்புக் காட்டாவிட்டால் கழுதைகளுக்குத் தலைக்கனம் பிடித்துவிடும். ஊருக்குள் தமக்கு இன்னும் மவுசு குறையவில்லை என மக்களின் தலையில் மிளகாய் அரைக்க முனையும். எப்போதும் அவை பொது நலன் பே... வில்லை, நாடி பிடிக்கத்தா... வருகின்றன. அதன் தாடையை உடைத்து அனுப்ப வேண்டும். இவன் தன் பங்கிற்கு அபிப்பிராயம் சொன்னான். மூன்று பேரும் மெதுவாக விவாதித்துத் தம்மை அறியாமலேயே கலவரப்பட்டனர். கழுதை விவாதம் சூடுபிடிக்கத் தொடங்கிற்று.



ஊருக்குள் வருகை தரும் பழைய கழுதை, புதிய கழுதை, ஊரை விட்டும் ஓடிப் போய் முகமூடி அணிந்து வரும் உள்ளூர்க் கழுதை எல்லா-வற்றிக்கும் எதிர்ப்புத் தெரிவித்து, ஊர்வலம் செல்வதென்று தீர்மானித்த பின் - இன்னதென்று சொல்ல முடியாத பேரமைதி - இவர்களைச் சூழவும் கவ்விக் கொண்டது. மேற்கொண்டு பேசுவதற்கு இனி ஒரு விடயமும் இல்லை என்றாற்போல் மௌனம் குவிந்திருந்தது. எனினும், இந்த அமைதி அச்சம் தந்தது. ஆர்ப்பரிக்காத குளத்தில் பதுங்கி-யிருக்கும் முதலையின் காத்திருப்புப்போல் பல்வேறு கழுதைகளின் சுவரொட்டிகள் சுவர்களை அடைத்திருந்திருந்தன. பச்சை குத்திய கழுதை, நீல நிறக் கழுதை, பல் நிறத்தாடை கொண்ட, சடைத்த கம்பீரக் கழுதை என ஒரே கழுதை மயம். எல்லாக் கழுதையின் பெயருக்கு முன்னாலும் ஒரு சிறப்புப் பெயரும் பட்டமும் இருந்தன. சமூகத் தொண்டன், சமூக ஜோதி, தியாகச் செம்மல், சமூகத்-தலைவன்என்கிறாற் போல். ஒரு எருதையும், அதற்கீடாக எருமையையும் தொடுத்து விட்ட மாட்டு வண்டிபோல சிறிதும் பொருந்தாமல் அப்பெயர்களை விட்டும் விலகியே இருந்தன கழுதைகள்.

முகத்தில் மயிர்கள் அடர்ந்த வசீகரக் கழுதைகள், சற்று மிடுக்காகப் போஸ் கொடுத்தபடி போட்டோக்களில் சிரித்துக்-கொண்டிருந்தன. சீருடையணிந்த ஒரு கழுதை மூன்று காலில் சிரித்துக் கொண்டிருந்தது. புகைப்படத்தில் மட்டும் வசீகரிக்கும் சில முகங்கள், நேரிடையாகப் பார்க்கும்போது ஏமாற்றம் தரும். இவர்களுக்குத் தெரிந்த

நன்றி - நூலகத்திட்டம்




அப்படிப்பட்ட முகங்களும் சுவர்களை அலங்கரித்திருந்தன.

கழுதைகளுக்கென, விஷேட பிரார்த்தனை நடத்தவிருப்பதாக வெள்ளிக்கிழமைத் தொழுகைக்குப் பின் அறிவித்தார்கள். சிறீமாவின் பிறந்த நாளுக்கு விஷேட பிரார்த்தனை செய்து ஜே. பீ. பட்டம் பெற்ற ஒரு பிரபல மௌலவிக்கு இனிக் கழுதைகளின் புண்ணியத்தால் கலாபூஷணம் தான்.

வெட்கங்கெட்ட சமூகம், மறுபடியும் கழுதைகளை எதிர்நோக்கி மனுக்களுடன் காத்திருந்தது. ஊருக்குள் ஷெல்லடிபட்டு இறந்தவர்களின் குடும்பங்களும் கையில் படிவங்களுடன் அலைந்தது சகிக்க முயடிாமலிருந்தது. ஊருக்குள் மரணங்கள் விழுந்த போது ஏனென்றும் கேட்காத கழுதைகளுக்கு இந்த மனுக்கள், புத்தகம் சுமப்பதுபோல, "புத்தகம் சுமக்கும் கழுதைகள்" இவனும், நண்பர்களும் இந்தச் சுலோகத்தை உரத்துச் சொல்லி கெக்கலித்தனர்.

இத்துணை கவுரவமா? இவன் தன் நண்பர்களுக்கு ஜாடை காட்டினான். மடித்து வைத்திருந்த கொடும்பாவிகள் மைதானத்தில் எரிக்கப்பட்டன. பதாதைகள் எழுந்தன. கோஷங்கள் இல்லாமல் "புத்தகம் சுமக்கும் கழுதைகள்" இவன் அடித் குரலில் கத்தினான். இவன் குரலுடன், ஒரு நண்பனின் குரல் மட்டும் இரைந்து வந்தது. அதிர்ச்சியுடன் திரும்பினான். "கிழங்குப் பொரியல், தின்று கழுதைகளுக்கெதிராக இவனுடன் அமர்ந்து கிளர்ச்சி பேசிய நண்பர்களை மேடை நடுவே கண்டான். அவமானத்தில் முகம் கறுத்திற்று.

அவர்களில் ஒருவன் கழுதைகள் போட்டுக் கழற்றிய மாலையுடன், மற்றவனோ, பன்னீர்ச் செம்புடனும் மேடையின் ஓரத்தில் கூச்சமின்றி நின்றிருந்தான். நாடி, நரம்புகள் இற்றுப்போகப் பற்களை நெரித்துக் கொண்டான்.



ஏக குரலில் கத்திப் பார்த்தனர். திடீரெனத் தீப்பொறிகள் கனன்றன. இந்தச் சுலோகத்தையே கழுதைகளுக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் முழங்கலாம். இவன் புத்தியை மெச்சிக் கொண்டு, மண்ணில் கால் பாவாது கும்மாளமிட்டுக் கோஷமிட்டனர்.

கழுதைகள் எந்த நிறத்தில் வந்தாலும், அதை ஆதரிக்கவென ஒரு கூட்டமிருந்தது. எல்லாக் கழுதைகளுக்கும் தொண்டரடிகள் இருந்தனர். கூஜா தூக்கிக்கொண்டு, பைலாப்போட ஒரு பேரணி இருந்தது. எந்த முகத்தில் வந்தாலும், கழுதை கழுதைதான் என்பது இவர்களின் தீர்மானமாயிற்று.

கழுதைகளை வாழ்த்துவதே தன் வாழ்வின் பிறவிப்பயனாக எண்ணி வாழும் ஒரு கவிஞர் ஒரு நீண்ட கவிதையை, மர நிழலில் அமர்ந்து பாடிப்பாடி ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்தக் கழுதைகள் தான் ஊருக்குள் வருகின்றன. 'கழுதைத் தரிசனம் பெறவும், குரவையிட்டு, ஆரத்தி எடுக்கவுமெனப் பெண்கள் வீதி மருங்கில் அணிவகுத்து நின்றனர். முன்பு சண்டியராய்த் திகழ்ந்த மடிச்சிக் கட்டிகள், ஊர்த் தலைவராகிக் கழுதைகளை வரவேற்கவென மாலையுடன் காத்திருந்தன. வில்லன் முகம் மாறா அவர்களின் சிரிப்பு மட்டும் சற்றுத் தூக்கலாய்த் தெரிந்தது கூட்டத்தில்.


ஒரு ஈ, எறும்பும் புக முடியாத பந்தோபஸ்து ஒழுங்கைகளில் விட்டேச் சாரியாகச் சுற்றிய கழுதைகளுக்கு

எனினும், இவன் அதிரும் வண்ணம் கத்தத் தொடங்கினான். சனங்கள் இவன் பக்கம் திரும்பி ஒரு பைத்தியம் என்று விட்டுக் கழுதைகளின் சிரிப்பில் இலயிக்கத் தொடங்கினர். கழுதைகள் கனைக்கத் தொடங்கின. 'கறள்' படிந்த ஒலி பெருக்கிகள், அதை வாங்கி ஊருக்கு வெளியே மிதக்க விட்டன. உயர்ச்சி மிகு கோஷங்கள் முழங்கின. யுகாந்திரமாகக் கேட்டுப் புளித்த பல்லவிகள்.

இவன் நெஞ்சே அதிரும்படி கைதட்டல்கள். சனங்கள், கழுதைகள் வாழ்கவெனக் கோரஸ் பாடினர். சீனடிச் சிலம்புகள் காதைப் பிளந்தன. இவன் நெஞ்சுமுட்டும் பெருமையுடன் மறுபடியும் கழுதைகளுக்கெதிரான கோஷங்களை முழங்கியபடி முன்னேறத் தொடங்கினான். கனவிலும் தரிசித்தறியா குரூர முகங்கள் இவனை நோக்கிப் பாய்ந்து வந்தன. மேடையிலிருந்த நண்பர்களோ இலகுவாக இவனை அடையாளம் காட்டிவிட்டு முதுகைக் காட்டியபடி பராக்குப் பார்த்தனர்.

எனினும், இவன் தனியனாய்க் கால்களைப் பரப்பி முன்னேறத் தொடங்கினான்.' இவன் முன் எல்லாமே இருண்டு வந்தன. தன்னைச் சூழவும் பலத்த கேலிச் சிரிப்பை நுகர்ந்தான். நன்கு பழக்கப்பட்ட குரல்களை இனங்கான விழித்திரை விரித்தான். எனினும் உலகைத் தரிசிக்க முடியா இருளுக்குள் தான் மெல்லமெல்ல அமிழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தபடி விறைத்துக் கிடந்தான்.

- அறபாத்



## ஒரு கணப்பீதியில்......

நெஞ்சைப்பிய்த்துப் போனதாய்
எனக்குள் உணர்வு ஊறும்.
காற்றைக் கிழித்து தசைத் துண்டுகள்
வீட்டினுள் விழும்......
இது இரவுப் பொழுதுகள்
நித்திரையை கண் கடன் கேட்கும்
கனவுகள் கலைந்து காதல் கண்மணி பக்கத்தில்
அழுவதைக் கேட்பேன்.
இதயம் நிம்மதியைப் புதைத்து
மின்சாரக் கம்பியில் கூடு கட்டிப் பார்க்கும்.

சன்னங்கள் யன்னல்களில் கண்ணாடியுடைவுடன்
சிரித்து ரசனையாகும்.
என் ஒன்றை உயிருடன்
பல உயிரும் தளர்வதை உறுத்தும் உணர்வேன்.
மீண்டும் என் அருகினில் குண்டுத் தொனி... ....
கப்பம் பறிக்கும் உடலின் அசைவை,
அதனால் குருதிப் பூக்கள் பூக்கும், பிணங்கள் காய்க்கும்.
அம்மா என்னை இறுக அரவணைத்துப் பிடிக்க தேகத்தை
மண்டை பிளந்த ரத்த கசிவுகளால் நனைவேன்.
அதுவுடன் செல்லடியில் சிதைந்த ஒரு ஆந்தை
மௌனமாய் அலறல் பாடும்.
என் முறிந்த கைகளுடன் கனத்த வேதனை
ஆந்தையைத் தேடல் கொள்ளும்.

பாசை தெரியாத மொழி ஆபாசமாய் கூவலுடன்
வளவுகளுக்கு தடைபோட்டு முளைத்து வளர்ந்த
தாவரமும் முறியக் கேட்டேன்.
என் கவலைகள் தொடர்ந்து புணர்ந்து போக
ரோஜா பறிக்க
முன் வேட்டையில் விரயமான குருதியானேன்.
கோடைக் கால புற் செடிக் காம்பில் பறக்கும் பொலித்தீன்
பைகளாக... என் உறுப்புகள் நடுங்கக் கண்டேன்.
ரத்தழுத்தங்கள் உதட்டை தரிசாக்கி
வார்த்தைகளை விழுங்கிக் கக்கும்.
சிறு நீர்க்குழாய் நிரம்பி வெடிப்பதாய் அடையாளம்.
சொட்டுச் சொட்டாய் வழியும்
ஈரமான போர்த்தாடையானேன்.
சூடேறிப் போன நுரையீரல் மூச்சடங்கி திணறும்.

பசிதொண்டையுடன் சண்டை பிடிக்க
இரைப்பைக்குடல்கள் இதயத்தைத் தின்னும்.
வயிற்றுப்போராட்டம் தொடரும்.
தம்பி வளர்த்த புறா இறக்கையுடன் பசி தீர்த்துப் போகும்.
நாய் விடிய விடிய ஊளையிட சுவருடையும்.
உடைவிலிருந்து பாம்புக்குட்டிகள் ஊடுருவும்
பதட்ட நிலவரம் நீடிக்கும்.

உடல் பிளந்து தசை சிதறும்,
மூளை கற்கள், மரங்கள், தெறித்து ஒட்டிப் போகும்.
மண்ணுடன் ரத்தம் சிந்திப் பரவும்,
உயிர் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொள்ளும்.

கோ. நாதன்
பொத்துவில்-03

நன்றி - நூலகத்திட்டம்



# ஐரோப்பாவில் நவநாசிகளின் வளர்ச்சி புலம் பெயர் தமிழர்களின் இருப்பிற்கு ஆபத்தா?

ஆஸ்திரிய அரசை தூக்கி எறிந்துவிட்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன் நவநாசிகளின் குழு ஒன்றினால் திட்டமிடப்பட்ட சதியொன்று பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டு முறியடிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக குழுக்களின் தலைவர்களான எட்டுப் பேர் (Ring Leaders) கைது செய்யப்பட்டிருப்பதுடன் மேலும் 60 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என ஆஸ்திரிய பத்திரிகை ஏஜென்சி (Austrian Press Agency) அறிவித்துள்ளது. இதிலுள்ள முக்கியமான விடயம் என்னவென்றால், இக் குழுக்கள் ஹிட்லர் பிறந்து, வளர்ந்த தனது இளமைப் பருவத்தைக் கழித்த இடத்தில் தான் இயங்கி வந்துள்ளன. மேல் ஆஸ்திரியாவில் (Upper Austria) உள்ள மூன்று மாவட்டங்களிலேயே இக்குழுக்கள் கைது செய்யப்பட்டுள்ளன. பொலிசாரால் இவர்களிடமிருந்து ஆயுதங்கள், வெடி மருந்துகள், பிரச்சார சாதனங்கள், வீடியோ சிடிக்கள், வாயு முகமூடிகள் (Gas Masks), இராணுவ உடைகள் என பல பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் அரசியல் சதியை நிறைவேற்றும் நோக்குடன் அங்கத்தவர்களைப் பயிற்றுவிப்பதற்கான முகாமையும் செக் குடியரசில் (Czech Republic) அமைப்பதற்கும் திட்டமிட்டுள்ளார்கள். தற்போது நடந்து முடிந்த தேர்தலில் வெளிநாட்டவருக்கு எதிரான வலதுசாரிக் கட்சி ஈட்டிய குறிப்பிடத்தக்க வெற்றியையும் நாம் இதனுடன் ஒப்பு நோக்க வேண்டியுள்ளது. இவ் வலதுசாரிக் கட்சியின் தலைவரான ஹெய்டர் (Joerg Haider), நவநாசிக் குழுக்களுடனான உறவை மறுத்துள்ள போதும் அக் குழுவைச் சேர்ந்தவர்களை (Waffen S S Members) மனிதப் பண்பாளர்கள் (Men of Character) என விபரித்துள்ளார்.

இன்று ஐரோப்பாவில் வளர்ந்து வரும் நவ நாசிக் கட்சிகளின் வளர்ச்சியை நோக்கும்போது நாம் மிகவும் அச்சம் கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில், அதற்கான ஒரு அரசியல் சூழல் தான் உலகில் நிலவுகின்றது. தனி ஒரு ஏகாதிபத்தியமே உலகின் பொலிஸ்காரனாக இருந்து கொண்டு படு மோசமான சுரண்டலை நடாத்தும் போது பிரான்ஸ் போன்ற முதலாம் உலக நாடுகளே அந்த ஏகாதிபத்திய சுரண்டலுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டியுள்ள நிலையில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் கூட வேலை இழப்பும், வேலை வாய்ப்பின்மையும் வளர்ந்து வருகின்றன. இப்போது பல வருடங்களாக ஒரு ஸ்தாபனத்தில் வேலை செய்யும் ஒருவர் எந்த நேரத்திலும் (Lay off) வேலையை விட்டு விலக்கப்படலாம். அதன் மூலம் நவகாலனித்துவ புதிய ஒழுங்கின் கீழ் பகுதி நேர வேலை (Part Time) முறையே பெரிதும் புகுத்தப்படும் ஒரு சூழலில் நடுத்தர வர்க்கம் மத்தியில் எதிர்காலம் பற்றிய ஒரு பயம் நிலவுகின்றது. இந்தப் பயத்தை நவ நாசிகள் மற்றும் தீவிர வலதுசாரிகள் தங்கள் நலனிற்குப் பயன்படுத்துகின்றார்கள். முக்கியமாக ஐரோப்பாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் உதாரணமாகக் கொள்ளப்பட்ட ஜெர்மனியில் 10 தொடக்கம் 11 வீதம் வரையில் வேலையில்லாதவர்கள் உள்ளார்கள். இவர்கள் ஜெர்மனியின் மக்கள் தொகையில் 50 இலட்சத்திற்கு மேற்பட்டவர்களாகும். இவ்வாறு வேலையில்லாதோர் தொகை இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு முன் இருந்த நிலையிலும் மோசமானதாகும். பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளிலும் கிட்டத்தட்ட 32 இலட்சம் பேர்



வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். முன்னர் தொழிலாளர்களால் போராட்டங்கள், தியாகங்கள் மூலம் வென்றெடுக்கப்பட்ட பல உரிமைகள் இன்று ஆளும் வர்க்கங்களால் பறிக்கப்படுகின்றன. மேலும் தொழிலாளிக்கும், அதிகாரிக்கும் இடையிலான சம்பள வேறுபாடு இன்று மிகவும் உயர்ந்துள்ளது. இது சில வேளை 45 மடங்காக உள்ளதாக பினான்ஸியல் ரைம்ஸ் (Financial Times) இன் ஒரு புள்ளி விபரம் ஞாபகத்திற்கு வருகின்றது. அன்று சூரியன் அஸ்தமிக்காத உலகை ஆளும் கற்பனையில் பிரித்தானியா உலகிலுள்ள நாடுகளை சுரண்டவும் அடக்கி ஒடுக்கவும் முனைந்து நின்று மக்களால் வீழ்த்தப்பட்டது. ஆனால், இன்று அதே கனவுகளோடு அமெரிக்க ஏகாதிபத்தியமும் உலகிலுள்ள 60ஆயிரம் பன்னாட்டு கம்பனிகளும் அவர்களுடன் இணைந்து 5லட்சம் வெளிநாட்டு முகவர்களுடனும் கச்சை கட்டிக் கொண்டு ஒன்றுபட்டு நிற்கின்றார்கள். ஆனால், உலக மக்களோ செய்வதறியாது திகைத்துப் போய் செயலிழந்து நிற்கின்றார்கள்.

இந்தப் பின்னணியில் தான் பாசிசத்தின் விளை நிலமான நடுத்தர மக்களின் மனநிலையைப் புரிந்துகொள்ள முடியும். மேற்கு ஐரோப்பிய மக்களைப் பொறுத்தவரை வெளிநாட்டவர் வருகை முக்கியமாகக் கிழக்கு ஐரோப்பியர்கள், மத்திய தரைக் கடல் பகுதியை சேர்ந்தவர்கள் மற்றும் ஆசியர்கள் தங்களது வேலைகளை மலிவான கூலிக்கு காவு கொள்கிறார்கள் என்றும், இவர்களால் குற்றச் செயல்கள், போதை மருந்து பாவிப்பு, விபச்சாரம் என்பன அதிகரித்துள்ளதாகவும் நினைக்கின்றார்கள். இவ்வாறு மக்கள் மத்தியில் நிலவும் பயத்தையும், வெறுப்பையும் நவ நாசிக் கட்சிகள் நன்றாகப் பயன்படுத்துகின்றார்கள்.

இந்தச் சூழல் நவ நாசிகளை மாத்திரமல்ல மாபியாக்களையும் தான் வளர்த்துவிட்டுள்ளது. சோவியத்தின் உடைவுடன் இந்த மாபியா வலைப் பின்னல் உலகம் முழுவதும் மிகவும் பரந்தும் வளர்ச்சியடைந்தும் உள்ளது. இதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டுமானால்பினான்ஸியல் ரைம்ஸ் (Financial Times) இல் வெளிவந்த ஒரு செய்தியில் "இன்றைய ரஷ்யாவின் பொருளாதாரத்தின் ஐந்தில் ஒரு பங்கை மாபியாக்கள்தான் கட்டுப்படுத்துகின்றார்கள்" என்ற உண்மையை ஆழமாகப் பார்க்க வேண்டும். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் நவகாலனித்துவ அமைப்பின் கீழ் பல தேச விடுதலை இயக்கங்களும் சீரழிந்துபோய் அவர்களும் மாபியாக்களுடன் கூட்டுச் சேர்ந்து இயங்குகின்றார்கள் என்பது தான். அத்துடன் அவர்களும் போதைவஸ்து கடத்தல், ஆயுதக் கடத்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றார்கள்.

அடுத்து ஐரோப்பாவில் அண்மையில் நடந்து முடிந்த தேர்தல்களின் பின் உள்ள நவ நாசிக் கட்சிகளின் நிலையை இங்கு நோக்குவோம். அழகான மலைத் தொடர்கள் நிறைந்த அல்பின் தேசங்கள் (Alpine Nations) என அழைக்கப்படும் ஆஸ்திரியா, சுவிற்சலாந்து போன்ற நாடுகளில் நடந்து முடிந்த தேர்தல்கள் வலதுசாரி தேசியக் கட்சிகளின் வெற்றி ஐரோப்பாவில் நவ நாசிகளின் புதிய எழுச்சி ஆகியன ஒரு பயத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆஸ்திரியாவில் சுதந்திரக் கட்சி (Freedom Party), 49 வயது ஜோர்க் ஹைடர் (Joerg Haider) இன் தலைமையின் கீழ் 27சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது. இக்கட்சி வெளிநாட்டவருக்கு எதிரான பிரச்சாரத்தையே முன்னிறுத்தி வென்றுள்ளது. முக்கியமாக ஆஸ்திரியாவில் வாழும் யூத சமூகத்திற்கு எதிரா[illegible] நாசிகளின் தாக்குதல்கள் தி[illegible]ரித்துள்ளன.

[illegible]ள ஆஸ்திரிய கத்தோலிக்க தேவாலயங்களின் கார்டினல் Schoen born வெளிநாட்டவருக்கு எதிரான பிரச்சாரம் பற்றி விசனம் தெரிவித்துள்ளார்.

மேலும் சுவிற்சர்லாந்து நாட்டில் கிறிஸ்ரோப் போல்கர் (Christoph Blocher) தலைமையிலான மக்கள் கட்சி (Peoples Party), ஒக்டோபர் 24ல் நடந்து முடிந்த தேர்தலில் 23 சதவீத வாக்குகளைப் பெற்று தனிப் பெரும்பான்மைக் கட்சியாக வந்துள்ளது. இத்தாலியில் Fini தலைமையிலான நவ பாசிசக் கட்சி 80களிலும் பின்னர் 90களிலும் மிகவும் வளர்ந்து வந்துள்ளது. இதேபோல் ஜீன் மாறியே லெ பென் (Jean Marie Le Pen) தலைமையிலான நவ நாசி தேசிய முன்னணியும் கூட ஓரளவு பலமான நிலையிலேயே உள்ளது.

இவ்வாறான ஒரு புதிய அரசியல் சூழலுக்கு முக்கிய காரணங்களாக பொருளாதார, அரசியல், பண்பாட்டு சூழல்களின் தாக்கங்கள் இருந்த போதிலும் கம்யூனிசத்தின் வீழ்ச்சியும் மேற்படி நாசிச சக்திகளின் வளர்ச்சிக்குரிய சூழல் உருவாகின்றதற்கான முக்கிய ஒரு காரணியாகும். அன்று சோவியத் யூனியன் ஸ்ராலின் என்ற மாபெரும் புரட்சியாளனின் தலைமையின் கீழ் உறுதியாக நின்று ஜீவ மரணப் போராட்டத்தில் பல இலட்சக்கணக்கான கம்யூனிஸ்டுகளையும் தேசபக்த ஜனநாயக சக்திகளையும் பலி கொடுத்து நாசிகளின் அழித்தொழிப்பிலிருந்து உலக மக்களைக் காப்பாற்றியது. ஆனால் இன்றோ மக்கள் இதுவரை எந்த பக்கபலமுமற்ற கையறு நிலையில் இருப்பதால் ஆளும் வர்க்கங்கள் முதலாளித்துவ சர்வாதிகார வடிவிலோ அல்லது இல்லை, ஏகாதிபத்திய வடிவிலோ இல்லை, நாசிகளாகவோ இருந்து செயற்பட முடியுமல்லவா? அவர்களை தட்டிக் கேட்கக் கூட ஆட்கள் இல்லையே. தென்கிழக்காசியாவில் கூட மத வெறி பாசிச சக்திகளின் வருகையைக் கூட மேற்படி நிகழ்வுடன் பின்னிப் பிணைந்த ஒன்றாகவே நாம் பார்க்க வேண்டும். இந்தியாவில் இந்து ம[illegible]வெறி பார்ப்பனிய ஆர்.எஸ்.-[illegible]. சங்கபரிவாரின் அரசியல் ஸ[illegible]ாபனமான பி.ஜே.பியின் வருகை எதிர்கால பாசிச ஆட்சிக்கு வழி கோலுவதாகவே உள்ளது. அதுபோல் ஆப்கானிஸ்தானில் இஸ்லாமிய மத வெறியர்களும் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியின் மீள்வருகையும் கூட நல்ல சகுனங்களல்ல.

இதேவேளை ஐரோப்பிய யூனியன் மூலம் அந்நாடுகளிடையே ஏற்பட்டுள்ள நெருக்கமான உறவு நாசிகளின் செயற்பாடுகளுக்கு சவாலாகவே இருக்கும் என்பதுடன் நாசிகளை ஓரளவு தற்காலிகமாகவாயினும் கட்டுப்படுத்தலாம். ஏனெனில், அன்று ஜெர்மனி, இத்தாலி ஆகியன நாசிச பாசிச ஆட்சியை நிலைநாட்டிய போது இவ்வாறான ஒரு ஐக்கிய முன்னணி இருக்கவில்லை. இன்று ஒரு தனி நாட்டில் அல்லது ஒரு சில நாடுகளில் நாசிகள் அதிகாரத்திற்கு வந்தாலும் கூட அவர்கள் ஐரோப்பிய யூனியிலிருந்து தனிமைப்பட வேண்டி வரலாம்.

இந்த ஐரோப்பிய யூனியன் என்ற கூட்டுக் கூட உண்மையில் மக்களுக்கானதல்ல. இவர்கள் கூட்டமும் உண்மையாகவே ஐரோப்பிய ஆளும் வர்க்கத்தின் கூட்டே தான். நவ நாசிசத்திற்கு ஓரளவு சவாலாக இருந்தாலும் கூட தொழிலாள வர்க்கத்தின் சுதந்திரமான செயற்பாட்டிற்கும் அவர்களது வர்க்க ரீதியான எழுச்சிக்கும் கூட தடையாகவே இருப்பார்கள். ஆனால், மக்கள் தான் வரலாற்றைப் படைப்பவர்கள் என்பது சர்வ நிச்சயமாக உள்ளவரை இவை யாவும் தற்காலிகமான பின்னடைவே.

இனி புலம்பெயர் தமிழ் மக்கள் இவ்வாறு எழுந்து வரும் சூழலிற்கு எவ்வாறு முகம் கொடுப்பதென்பது எம்முன் உள்ள மிக முக்கியமான கேள்வியாகும். கடந்த காலங்களில் புலம்பெயர் தமிழ் மக்கள் சரியான அரசியல் வழிகாட்டல் இல்லாத நிலையில் அங்குள்ள மக்களுடன் ஒன்று கலந்தோ இல்லை அவர்களது போராட்டங்களில் இணைந்தோ செயற்பட்டதில்லை. எப்போதும் அன்னியப்பட்டு ஒதுங்கி வாழ்ந்ததுடன் தம்மளவில் குறுகிய தேசியவாத உணர்வுடன் சில தனிமையான செயற்பாடுகளிலேயே எப்போதாவது ஈடுபட்டுள்ளார்கள். ஆனால், புலம்பெயர்ந்த நாடுகளில் ஏனைய சமூகத்தவர்கள் அந்த நாட்டு மக்களுடன் இரண்டறக் கலப்பதுடன் அவர்களின் போராட்டங்களிலும் பங்கு பற்றி தங்களை வெளிப்படுத்திக் கொள்வார்கள். தமிழ் மக்கள் தங்களைச் சுற்றியுள்ள சுயநல சிறையை உடைத்துக் கொண்டு வெளியேறுவதுடன் அறிவுரீதியாகச் சிந்திக்கவும் ஏனைய மக்களுடன் இரண்டறக் கலந்து செயல்படவும் போராடவும் முன்வரவேண்டும், இல்லையெனில் யூதர்கள் போல் துன்ப துயரங்களைத் தான் நோக்க வேண்டிவரும்.

- தவம்

நன்றி - நூலகத்திட்டம்



அரச சார்பற்ற கட்டமைப்புக்குள் இயங்கும் பெண்கள் அமைப்புக்கள் தமது கொள்கைகளையும், நோக்கங்களையும் பரப்பும் முகமாக வெளியீடுகளை மேற்கொண்டு வருகின்றன. பெண்கள் அமைப்புக்கள் பலத்த சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் (பெண்களின் இரட்டை வேலைச்சுமை) மத்தியில் இப்பணியில் ஈடுபட்டு வெளியீடுகளை மேற்கொண்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.


பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பெண்கள் பக்கம் எனக் கூறப்படும் பகுதிகளில் வெளிவரும் விடயங்கள். தனியே பெண்களுக்கான வெளியீடுகள் பரவலாக வெளிவர வேண்டிய தேவையை அறுதியிட்டுக் காட்டுகின்றன. வெறும் அழகுக் குறிப்புகளும், பிள்ளை பராமரிப்பும், ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதற்கான யோசனைகள் என்பனவும் தான் பெண்கள் பக்கங்களின் விதி என காலம் காலமாக ஆண்நிலைச் சமூகம் கற்பிதது வருகிறது. தற்போது புதிய வானொலி சேவைகளும் இந்த நடைமுறையைத் தான் கடைபிடிக்கின்றன என்பது துரதிருஷ்டவசமானது. அந்த வகையில் கோட்பாட்டு ரீதியில் பெண்ணிய விடயங்களை முன்வைத்து, பெண்கள் கவனத்தை இவ்விடயங்களில் சீர்படுத்த வேண்டிய கடப்பாடு பெண்கள் அமைப்புகளுக்கு உள்ளன. பரவலாக பெண்களின் கைகளுக்கு இவ்வமைப்புகளினால் வெளியிடப்படும் வெளியீடுகள் சென்றடைவதில்லை என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகின்ற போதிலும், பெண்களின் படைப்புத்திறன் மாற்றத்தை நோக்கிச் செல்ல இவ் வெளியீடுகள் பெரும் காரணமாக உள்ளன எனலாம்.


இவற்றைத் தவிர பல பெண்கள் அமைப்புக்கள் பெண்கள் சம்பந்தமான ஆய்வுக் கட்டுரைகள், அறிக்கைகள்,பெண்ணிலைவாதம் தொடர்பான நுல்களை தமது நூலகங்களில் கொண்டுள்ளன. இந்த வகையில் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம். சென்வோர் நிறுவனம் என்பன குறிப்பிடத்தக்கவை.

இந்த வகையில் பெண்கள் அமைப்புக்களினால் வெளியிடப்படும் மாத இதழ்கள். செய்தி மடல்கள் பற்றிய ஒரு சிறு அறிமுகத்தை வழங்குவது பயன் தரும் எனக் கருதுகிறோம்.

இதர பெண்கள் அமைப்புகள் தமது வெளியீடுகள் பற்றி அறியத் தந்தால் அவற்றையும் வாசகர்களுக்காக சரிநிகரில் அறியத் தரலாம்.

## பெண்கள் கல்வி ஆய்வு நிலையம்




**(அ) வெளியீட்டின் பெயர்** — நிவேதினி
**மொழி** — ஆங்கிலம்
**ஆசிரியர்** — செல்வி திருச்சந்திரன்
**ஆசிரியர் குழுவில் உள்ள உறுப்பினர்கள்** — மீள்பார்வைக்கென சிலருக்கு வழங்கப்படும்
**பிரதிகள் விற்பனை பற்றிய விபரங்கள்** — 350 பிரதிகள்
**விலை** — ரூ. 150
**பிரதி வெளிவரும் காலம்** — ஆண்டுக்கு 2 இதழ்கள், ஜுன், டிசம்பர் மாதங்களில் வெளிவருகின்றது.
**உள்ளடக்கம்** — பெண்ணியம் சம்பந்தமான உயர் கோட்பாட்டு ரீதியான விடயங்கள்

**(ஆ) வெளியீட்டின் பெயர்** — நிவேதினி
**மொழி** — சிங்களம்
**ஆசிரியர்** — தரங்கா த சில்வா
**பிரதிகள் விற்பனை பற்றிய விபரங்கள்** — 350 பிரதிகள்
**விலை** — ரூ. 75
**பிரதி வெளிவரும் காலம்** — ஆண்டுக்கு 2 இதழ்கள். ஜுன், டிசம்பர் மாதங்களில் வெளிவரும்
**உள்ளடக்கம்** — பெண்ணியம் சம்பந்தமான உயர் கோட்பாட்டு ரீதியான விடயங்கள்

**(இ) வெளியீட்டின் பெயர்** — நிவேதினி
**மொழி** — தமிழ்
**ஆசிரியர்** — செல்வி திருச்சந்திரன்
**பிரதிகள் விற்பனை பற்றிய விபரங்கள்** — 350 பிரதிகள்
**விலை** — ரூ. 75
**பிரதி வெளிவரும் காலம்** — ஆண்டுக்கு 2 இதழ்கள். ஜுன், டிசம்பர் மாதங்களில் வெளிவரும்
**உள்ளடக்கம்** — பெண்ணியம் சம்பந்தமான உயர் கோட்பாட்டு ரீதியான விடயங்கள்

**(அ) வெளியீட்டின் பெயர்** — பிரவாகினி செய்திமடல்
**மொழி** — தமிழ்
**ஆசிரியர்** — செல்வி திருச்சந்திரன்
**பிரதிகள் விற்பனை பற்றிய விபரங்கள்** — 350 பிரதிகள்
**விலை** — இலவசம்
**பிரதி வெளிவரும் காலம்** — ஆண்டுக்கு 2 இதழ்கள். ஜுன், டிசம்பர் மாதங்களில் வெளிவரும்
**உள்ளடக்கம்** — சிறு செய்திகள், தகவல்கள், நிறுவனம் பற்றிய அறிமுகம், நூல் அறிமுகங்கள் எளிய மொழியிலான சிறு பத்திகள்

**(ஆ) வெளியீட்டின் பெயர்** — பிரவாகினி செய்திமடல்
**மொழி** — சிங்களம்
**ஆசிரியர்** — தரங்கா த சில்வா
**பிரதிகள் விற்பனை பற்றிய விபரங்கள்** — 350 பிரதிகள்
**விலை** — இலவசம்
**பிரதி வெளிவரும் காலம்** — ஆண்டுக்கு 2 இதழ்கள். ஜுன், டிசம்பர் மாதங்களில் வெளிவரும்
**உள்ளடக்கம்** — சிறு செய்திகள், தகவல்கள், நிறுவனம் பற்றிய அறிமுகம், நூல் அறிமுகங்கள் எளிய மொழியிலான சிறு பத்திகள்

**(இ) வெளியீட்டின் பெயர்** — பிரவாகினி செய்திமடல்
**மொழி** — ஆங்கிலம்
**ஆசிரியர்** — திருமதி அபேரத்ன
**பிரதிகள் விற்பனை பற்றிய விபரங்கள்** — 350 பிரதிகள்
**விலை** — இலவசம்
**பிரதி வெளிவரும் காலம்** — ஆண்டுக்கு 2 இதழ்கள். ஜுன், டிசம்பர் மாதங்களில் வெளிவரும்
**உள்ளடக்கம்** — சிறு செய்திகள், தகவல்கள், நிறுவனம் பற்றிய அறிமுகம், நூல் அறிமுகங்கள் எளிய மொழியிலான சிறு பத்திகள்




## பெண்ணின் குரல்

**வெளியீட்டின் பெயர்** — பெண்ணின் குரல்

**மொழி** - தமிழ்

**ஆசிரியர்** - பத்மா சோமகாந்தன்

**பிரதிகள் விற்பனை பற்றிய விபரங்கள்** — விபரங்கள் தரப்படவில்லை.

**விலை** - ரூ. 20

**உள்ளடக்கம்** - பெண்ணியம் சம்பந்தமான எளிமையான மொழியிலமைந்த விடயங்கள், பெண்கள் சம்பந்தமான பொன்மொழிகள், குட்டித் தகவல்கள், கவிதைகள், சிறுகதை, பிரபல பெண்ணிநிலைவாதிகளின் ஆக்கங்களின் மொழிபெயர்ப்புகள். சட்டம் , சுகாதாரம் தொடர்பாக விடயங்கள், புதிய பெண் எழுத்தாளர்களுக்கான களம்

* *

**வெளியீட்டின் பெயர்** - வொய்ஸ் ஒப் வுமன்

**மொழி** - ஆங்கிலம்

**ஆசிரியர்** - ஈவா ரணவீர

**பிரதிகள் விற்பனை பற்றிய விபரங்கள்** — விபரங்கள் தரப்படவில்லை.

**விலை** - ரூ. 20

**உள்ளடக்கம்** - குறித்த ஒரு தலைப்பை அடிப்படையாகக் கொண்ட கட்டுரைகள், தகவல்கள். (உதாரணம் - போக்குவரத்து, வன்முறை, சுகாதாரம்),சிறு செய்திகள், தகவல்கள், ஆய்வுக்கட்டுரைகள்

* *

**வெளியீட்டின் பெயர்** - காந்த்தா ஹண்ட

**மொழி** - சிங்களம்

**ஆசிரியர்** - ஈவா ரணவீர

**பிரதிகள் விற்பனை பற்றிய விபரங்கள்** - விபரங்கள் தரப்படவில்லை

**விலை** -ரூ. 20

**உள்ளடக்கம்** - சிறு செய்திகள், தகவல்கள், பெண்ணியம் சம்பந்தமான விடயங்கள், ஆக்கங்கள், கட:டுரைகள்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்




**வெளியீட்டின் பெயர்** - பெண் சஞ்சிகை

**ஆசிரியர்** - கௌரவ ஆசிரியர்கள் ஒவ்வொரு இதழுக்கும்

**பிரதிகள் விற்பனை பற்றிய விபரங்கள்** - 750 பிரதிகள்

**விலை** - ரூ.30

**பிரதி வெளிவரும் காலம்** - ஆண்டுக்கு 4 இதழ்கள்

**உள்ளடக்கம்** - கவிதைகள், பல்வேறு துறைகள் தொடர்பான பெண்கள் ஆக்கங்கள், புதிய எழுத்தாளர்கள் படைப்புக்கள், திரைப்பட விமர்சனங்கள்

**

**வெளியீட்டின் பெயர்** - பெண்கள் செய்தி மடல்

**ஆசிரியர்** - விஜயலக்ஷ்மி

**விலை** - இலவசம்

**பிரதி வெளிவரும் காலம்** - ஆண்டுக்கு 4 இதழ்கள்

**உள்ளடக்கம்** - அமைப்பின் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய விபரங்கள், நூல் அறிமுகம், சிறு செய்திகள்

## பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு



**வெளியீட்டின் பெயர்** — எய (அவள்)
**மொழி** — சிங்களம்
**ஆசிரியர்** - சுமிக்கா பெரேரா
**ஆசிரியர் குழுவில் உள்ள உறுப்பினர்கள்** - சுனிலா அபேசேகர, அனோமா ராஜகருணாநாயக்க,
அனுலா த சில்வா, புஷ்பா ரமீலனி, வயலா
**பிரதிகள் விற்பனை பற்றிய விபரங்கள்** - 300 பிரதிகள் தபாலில் சந்தாவின் அடிப்படையில் அனுப்பப்படும்.
**விலை** - ரூ. 25
**பிரதி வெளிவரும் காலம்** - முன்னர் 3 மாதங்களுக்கொரு முறை. தற்போது 4 மாதங்களுக்கு ஒரு முறை
**உள்ளடக்கம்** - ஆசிரியர் தலையங்கம், திரைப்பட விமர்சனம், பெண்கள் பற்றிய சர்வதேச ரீதியான கண்ணோட்டம், சுகாதார விடயங்கள், கவிதை. பெண்கள் கட்டுரை, சிறுகதை, பெண்களால் வெளிடப்பட்ட புதிய நூல்கள் பற்றிய விமர்சனக் குறிப்புக்கள்
**பின்குறிப்பு** — புத்தக நிலையங்கள் இவ்விதழின் வித்தியாசமான அட்டைப்படம், தோற்றம் காரணமாக வ ி ற ் ப னை க ் கு அனுமதிக்கவில்லையென ஆசிரியர் குறிப்பிட்டார்.




**வெளியீட்டின் பெயர்** — ஒப்ஷன்ஸ்
**மொழி** — ஆங்கிலம்
**ஆசிரியர்** — நிலுபா டி மெல்
**ஆசிரியர் குழுவில் உள்ள உறுப்பினர்கள்** — ஆசிரியருக்கு உதவிக்கென உதவியாளர்
**பிரதிகள் விற்பனை பற்றிய விபரங்கள்** — 750 பிரதிகள். வெளிநாட்டில் அதிகம் சந்தாதாரர்கள், பெரும்பாலும் ஆங்கில மொழி வாசகர்கள்
**விலை** — ரூ. 50
**பிரதி வெளிவரும் காலம்** — ஆண்டுக்கு 4 இதழ்கள்
**உள்ளடக்கம்** — பெண்ணியம் சம்பந்தமான விடயங்கள், ஆய்வுக்கட்டுரைகள், பல நாடுகளைச் சேர்ந்த பெண்ணிலைவாதிகளின் ஆக்கங்கள் மீள் பிரசுரம்

நன்றி - நூலகத்திட்டம்



# புலிகளின் அரசியலை புரிந்து கொள்வது எப்படி?

சரிநிகர் ஒகஸ்ட் 05 - ஒகஸ்ட் 18 - 1999 பக்கம் 10ல் காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைகளின் ஒன்பதாவது ஆண்டை நினைவு கூர்ந்து புலிகளின் அச்செயல்பாட்டினை வன்மையாகக் கண்டித்தும், இனி அவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற அவாவுடன் அல்லது எதிர்பார்ப்புடன் எழுதப்பட்ட கட்டுரையை மீள்பார்வைக்கு உட்படுத்துதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மேற்படி கட்டுரையின் ஆரம்பத்தில் அக்கொடூரமான சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் மக்களின் சோகத்தையும், துன்பதுயரத்தையும் எடுத்தியம்புவதுடன் அந்த நடவடிக்கை, மத அடிப்படையிலான யுத்த தர்மத்திற்குக் கூட எதிரானதென்பதையும் சுட்டிக் காட்டும் கட்டுரையாளர் அதே வேளை முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் அவர்கள் மத்தியிலுள்ள வெறியர்களாலும் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதையும் நினைவு கூர்ந்திருந்தால் அது நியாயமானதாக இருந்திருக்கும். இதற்காக புலிகளின் குறுந் தேசியவாத வெறியை நியாயப்படுத்துவதாகவோ அல்லது இரண்டையும் ஒன்றாக சமன்படுத்துவதாகவோ விளங்கிக் கொள்ளக் கூடாது.

அடுத்து சிங்களப் பெருந்தேசியவாதத்திற்கு எதிராகப் போராடும் ஒரு சிறுபான்மைச் சமூகம் இன்னொரு சிறுபான்மைச் சமூகத்தை (முஸ்லிம் சமூகத்தை) அழிக்க நினைப்பது எந்த வகையில் சரியாகும் என்ற வினாவை நியாயமாகச் சிந்திக்கும் தமிழ் மக்கள் முன்வைப்பது வரவேற்கத்தக்கதே. அத்துடன் எம்.ஐ.எம்.முஜீப் சுட்டிக் காட்டுவது போல் அக்கேள்விக்கு இன்று வரை மிகச் சரியான பதில்களோ நியாயங்களோ அளிக்கப்படவில்லை என்பது தான் சோகமாகும். ஆனாலும் உத்தியோகப்பற்றற்ற முறையிலே புலிகளின் தலைமைப்பீடம் அடங்கலாக அனைவருமே உள்ளார்ந்த ரீதியில் கவலை கொண்டு உணர்வலைகளை இலேசாக வெளிப்படுத்தியதாகவும் ஆசுவாசப்படுகின்றார். இவ்விடத்தில் தான் மிக முக்கியமான ஒரு விடயம் சுட்டிக் காட்டப்பட வேண்டும். அதாவது புலிகள் இதுவரை இந்த அநியாயத்திற்காக உத்தியோக ரீதியாக தங்கள் தவறுகளுக்காக வருந்தி மன்னிப்புக் கோராத நிலையில் சில சந்தர்ப்பவாத அதிமேதாவித்தனமான புத்திஜீவிகள் ஏதோ மாய்மாலம் கொட்டுவதை வைத்துக் கொண்டு தமிழ்த் தேசியம் தன் தவறுக்கு மன்னிப்புக் கோரி விட்டது என்று நம்பிவிட முடியாது சரடு விடுகின்றார்கள்.

ஆனால், புலிகள் தங்கள் தவறுக்கு நேர்மையாக மன்னிப்புக் கோரினால் முஸ்லிம் சமூகம் தமது வாழ்வியல், உரிமை, இருப்பு தொடர்பான விடயங்களிலே புலிகளோடு சந்தேகமில்லாத ஒரு உறவு முறையைப் பேணலாம் என்பது கட்டுரையாளரின் வாதமாகும். ஆனால் புலிகளின் தலைமையில் தொடர்ந்தும் தமிழ்க் குறுந்தேசியவாதச் சிந்தனை ஆதிக்கம் செலுத்தும் வரை முஸ்லிம் மக்கள் அவர்களில் நம்பிக்கை செலுத்த முடியாது. இது தான் உண்மை நிலை. புலிகளின் தலைமை என்பது நாசமறுப்பான் சுட்டிக் காட்டியுள்ளது போல தமிழ் மக்களின் நியாயமான, தர்மமான போராட்டத்தின் திசையையே எதிர்ப்பாதைக்கு இட்டுச் செல்வதாக இருக்கின்றது.

மேலும் கட்டுரையாளர் முஸ்லிம் மக்களை முஸ்லிம் காங்கிரஸ் அல்லது அதன் தலைவர் போன்றோரை முஸ்லிம் மக்களின் முழுமையான பிரதிநிதிகளாகக் கொள்ள வேண்டாம் என்று கூறுவதுடன் கடந்த காலங்களில் புலிகளின் பிழையான செயற்பாடுகளுக்கு இப் புரிதல்கள் தான் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகம் எழுப்புகின்றார்.


இங்கே இன்னுமொரு முக்கியமான விடயத்தை சுட்டிக் காட்ட வேண்டிய தேவையுமுண்டு. முதலாவதாக முன்னைய வரலாற்றில் முஸ்லிம்களின் தலைமை கொழும்பு வாழ் வசதி படைத்த முஸ்லிம் தனவந்தர்களிடம் இருந்த, முஸ்லிம் காங்கிரசின் வருகையோடு கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் நிலையிலும் முன்னைய காலங்களில் எந்தவொரு அதிகாரத்தையும் பெறாதவர்கள் என்ற முறையிலும் முஸ்லிம் காங்கிரசின் வருகையைக் கணக்கில் எடுப்பதுடன் முஸ்லிம் என்ற தேசிய சிறுபான்மை இன உருவாக்கத்தையும் நாம் கணக்கில் எடுக்க வேண்டும். இங்கே முஸ்லிம் மக்கள் ஒரு தேசிய இனமாக முகிழ்ந்து வருவதை பெருந்தேசியவாத சிங்கள இனவெறியர்களோ இல்லை குறுந்தேசியவாத தமிழ் வெறியர்களோ விரும்பாதுள்ள போதும் அதுவே யதார்த்தமாக உள்ளது. இதுதான் மலையக மக்களைப் பொறுத்த மட்டிலும் கூட எவ்வாறு கறுவாக்காட்டு தமிழ் தலைமைக்கு மாற்றீடாக வந்த பனங்காட்டு தமிழ்த் தலைமை தமிழ்தேசிய இனத்திற்கு துரோகமிழைத்து குறுந்தேசியவாத வெறியை வளர்த்து "ஆண்ட பரம்பரை மீண்டுமொருமுறை ஆளநினைத்துள்ளதோ" அதேபோல் கொழும்பு மேல்தட்டு முஸ்லிம் தலைமைக்கு மாற்றீடாக வந்த முஸ்லிம் காங்கிரசும் அதே தமிழ் தரகு முதலாளித்துவத்தின் பாதையையே நாடுகின்றது. ஆனால், முஸ்லிம் காங்கிரசோ இல்லை தொண்டமானோ தங்கள் பேரத்தைப்பேணும் நோக்குடனும் தமிழ் தரகு முதலாளித்துவத்தின் புலிகளுடனான மற்றும் பெருந்தேசியவாதப் பிசாசுகளுடனான முன் அனுபவத்தைக் கணக்கிலெடுத்து செயல்படுகின்றார்கள். இதன் விளைவாகவே தொண்டமான் மலைய்க மக்கள் என்ற சமூகத் தொகுதியின் தேசிய எழுச்சியை கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்திய வம்சாவளி மக்கள் முன்னணியை உருவாக்கியதும், முஸ்லிம் காங்கிரசின் அரசியல் தலைமை முஸ்லிம் மக்களின் தேசிய உருவாக்கத்திற்காக குரல் கொடுப்பதைத் தவிர்த்துள்ளதுமான நிலைமை. இந்தச் சூழ்நிலையில் தான் இதே சரிநிகர் பத்திரிகையில் அஷ்ரஃப் அவர்களுடனான பேட்டியின் போது அவர் தெரிவித்த கருத்துக்கள் முன்னிற்குப் பின் முரணாக உள்ளன.

மதச் சார்பற்ற நாடு அல்லது பௌத்த நாடு என்பதற்கும் இனப்பிரச்சினைக்கும் எவ்விதமான தொடர்புமில்லையென்று அறுதியிட்டுக் கூறும் அஷ்ரஃப் அவர்கள் அடுத்த பந்தியில், இனப்பிரச்சினைத் தீர்வில் பாராளுமன்றத்திற்கு வெளியே இருக்கும் பௌத்த பிக்குகள் சக்திவாய்ந்த ஒரு அமைப்பினராக இருக்கிறார்கள் அதை யாரும் மறுக்க முடியாது. சிங்கள மக்களும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்றார்கள். அரசியல்வாதிகள் பௌத்த சங்கத்திற்கு தலை வணங்குகின்றார்கள். இந்நிலையில் பௌத்த பிக்குமாரைக் கல்வியூட்டாமல் எதுவும் செய்ய முடியாது என அறுதியிட்டு முன்னுக்குப்பின் முரணாக தன்னையே குழப்பிக் கொள்கின்றார்கள். இத்துடன் அவர் நிறுத்தாமல் கட்சி எல்லாம் பொய். தனி நபர்களான சந்திரிகா அல்லது ரணிலைத் தான் நம்ப வேண்டும் என்று கூறுவதன் மூலம் தனிநபர் தலைமையை அதாவது தன்னை முதன்மைப்படுத்துகின்றார். இவற்றையெல்லாம் இக்கட்டுரையாளர் எந்தளவு சீர்தூக்கிப் பார்க்கின்றார் என்பது புரியாமலுள்ளது.

மேலும் இக்கட்டுரையாளர் கூறுகிறார். "ஏலவே புலிகளின் போராட்டத்தில் தடையாக இருந்தவர்கள், காட்டிக் கொடுத்தவர்கள் என்ற வகையில் பலர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இவற்றிலே அவர்களது இனத்திலே நிறைய பேரும், ஏன் நிறையவே ஆயுத குழுக்களும் அடங்கும். இந்நிலை இன்னும் தொடர்கிறது... ( இங்கு முஸ்லிம்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் அவ்வகையானவை அல்ல என்பதை சுட்டிக் காட்டுவது முக்கியம்.) அவற்றிற்கு இன்னுமே புலிகள் சரியான பதில் சொல்லவில்லை.)

இக்கூற்றுகளினூடாக புலிகளால் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் மக்களை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலம் கட்டுரையாளர் ஏனையோர் துரோகிகளாகவே கணிக்கப்படுகின்ற பாரிய தவற்றை இழைக்கக் காரணமாகிறார்.

*உண்மையில் புலிகளால் துரோகிகள். சமூகவிரோதிகள். காட்டிக் கொடுப்போர் என முத்திரை குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்களில் உண்மையான தேசபக்த. ஜனநாயக. புரட்சிகர சக்திகள் பலரும் அடங்குவர் என்பதை மறுக்க முடியாது. இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் என்பதுடன் தமிழர் சமுதாயத்திற்கும் அவர்களது போராட்டத்திற்கும் பேரிழப்பாக எண்ணப்பட வேண்டியவர்களின் பட்டியலில் இங்கே ஒரு சிலரையாவது குறிப்பிட்டேயாக வேண்டும். பல்கலைக்கழக மாணவன் விஜிதரனின் படுகொலையையும். புலிகளின் ஜனநாயக மறுப்பையும். அராஜக பாசிச நடவடிக்கைகளையும் விமர்சித்து யாழ் பல்கலைக்கழக மாணவரின் போராட்டத்தை முன்னின்று நடாத்திய விமலேஸ்வரன். புலிகளால் கொல்லப்பட்ட விஜிதரன். "புதியதோர் உலகம்" என்ற போராட்ட நாவலை எழுதியவரும். புளொட்டின் உள் படுகொலை ஜனநாயக மறுப்பை விமர்சித்து வெளியேறி "தீப்பொறி" என்ற குழுவாக இயங்கிய கேசவன். யாழ். பல்கலைக்கழக மாணவியும். பெண் கவிஞருமான செல்வி. யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளரும் இந்திய இராணுவத்தின் செயல்பாட்டினால் சீரழிக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழகத்தை அழிவிலிருந்து பாதுகாத்தவரும் அவர்களது இராணுவ அட்டூழியங்களை விமர்சித்தித்து செயல்பட்டவருமான ராஜினி திராணகம. மண் சுமந்தமேனியர் புகழ் தில்லை. NLFT யைச் சேர்ந்த ரமணி இவ்வாறு தெரிந்த பலரும் தெரியாத பல நூறு பேரும் அடங்குவர்.*




கடைசியாக தனது கட்டுரையின் முடிவில், முஜீப் அவர்கள் தனது சமூகத்தைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற கையறு நிலையில் தனது கருத்தை முன்வைப்பது அவரது அரசியல் பார்வையின் மிகப் பலவீனமான சிந்தனையையே வெளிப்படுத்துகின்றது. இதே கூற்றை முன்னொரு முறை செல்வநாயகம் அவர்கள் 1970 களில் ஸ்ரீ.ல.சு.க.தேர்தல் வெற்றியின்போது கூறிச் சென்றார். இதற்கான அடிப்படைக் காரணம் அந்த முறையுடன் தமிழ் தரகு முதலாளித்துவ தலைமையின் பேரம் பேசும் அரசியல் வலுவிழந்து போனதையே அவர் அவ்வாறு வெளிப்படுத்தினார்.

இவ்வாறு முஜீப்பின் சிந்தனையை உரைத்துப் பார்த்த பின் முஸ்லிம் மக்களிற்கும் ஏனைய சிறுபான்மை இன மக்களிற்கும் இன்றைய சூழ்நிலையில் முன்வைக்கும் அரசியல் வழி என்ன? என்ற வினாவிற்கு விடை பகிராமல் விடுவது நியாயமல்ல.

முதலாவதாக புலிகளின் தேசியம் எழுந்தமானமாக தமிழ்த் தேசியம் என்று கூறி அதனை நியாயப்படுத்த முடியுமா? உண்மையில் 2வது உலக மகாயுத்த காலத்தில் உலகிலே அடிமைப்பட்டு நசுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட தேசங்களும், இனங்களும், நாடுகளும் முன்னெடுத்த தேசியம் என்பது ஒரு முன்னேறிய தேசியமாகவே இருந்தது. அதற்கான அடிப்படைக் காரணம் அன்றைய போராட்டங்கள் யாவும் இவை யாவற்றிற்கும் அடிப்படையாக காரணகர்த்தாகவாக இருந்த ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததுடன் உலக மக்களின் நண்பனாக போர்ராட்டத் தோழனாக ஒரு சோசலிச முகாம் பின்னணியில் இருந்தது. இரண்டாவதாக அன்றிருந்த உலக ஒழுங்கமைப்பில் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க வடிவம் காலனித்துவ சுரண்டலாக இருந்ததுடன் அது நேரடியாகவே மக்களை அடக்கி ஆண்டதால் எதிரியை மக்கள் நேரடியாகவே அறிந்து கொண்டார்கள். எனவே உள்ளூர் முதலாளித்துவ சக்திகளும் சன்யாட் சென் போன்றோரும் மக்களுடன் இணைந்து ஏகாதிபத்தியத்தை நேரடியாக எதிர்த்துப் போராடினார்கள். அன்றைய நிலையில் தேசியம் என்பது ஒரு முற்போக்கான முன்னேறிய பாத்திரத்தை வகிக்க முடிந்தது.

இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் பாரதியாரின் குரல் மிக மிக முன்னேறிய குரலாகவும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மாத்திரமல்லாமல் நிலப்பிரபுத்துவ அடக்குமுறைகளான பெண் அடிமைத்தனம, சாதிய ஒடுக்குமுறை வறுமை, சுரண்டல் எல்லாவற்றிற்கும் எதிரானதாகவும் ஒலித்தது.

ஆனால், இன்றுள்ள உலக மயமாக்கல் என்ற தனி ஒரு ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தின் கீழான பொருளாதார, அரசியல் சூழல் முற்று முழுதாகவே வேறுபட்டது. இன்றைய ஏகாதிபத்திய பொருளாதார ஆதிக்கம் என்பது நவகாலனித்துவம் என்ற நிலையையே முன்னெடுத்துள்ளது. இதன் மூலம் ஏகாதிபத்தியம் என்ற பொது எதிரி கண்ணாமூச்சி விளையாடவும் உண்மையான எதிரியை மக்கள் தெரிந்து அறிந்து கொள்ளவும் முடியாததுமான ஒரு நிலைமை உள்ளது. அத்துடன் அன்றிருந்த சோசலிச முகாம் இன்று சின்னாபின்னப்பட்டு சீரழிந்து போய் உள்ளது.

இதன் பின்னணியிலே தான் இன்று உலகில் நடைபெறுகின்ற தேச விடுதலை, இனவிடுதலைப் போராட்டங்களை நாம் நோக்கவேண்டும். பலரிடம் உள்ள பொதுவான கேள்வி ஏன் புலிகளின் பேராட்ட நடைமுறையில் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு சமாந்தரமான நடைமுறைகள் கைக் கொள்ளப்படவில்லை என்பதாகும். ஏனெனில், பெண் அடிமைத்தனம், சாதிய ஒடுக்குமுறை என்பவற்றில் கூட அவர்களால் கொள்கை அடிப்படையில் ஒரு சரியான செயல்பாட்டை வெளிப்படுத்த முடியவில்லை? சிலர் கூறலாம் சாதிய ஒடுக்கு முறை, பெண் அடிமைத்தனத்திற்கு எதிராக புலிகள் சில நடவடிக்கைகளை எடுத்தார்கள் என. ஆனால், அவர்கள் அதை கொள்கை அடிப்படையில் எடுத்தார்கள் என்று கூறமுடியாது. ஏனெனில், நவகாலனித்துவ சமூக அமைப்பில் உலக ஒழுங்கு மயமாக்கல் என்ற ஏகாதிபத்திய பித்தலாட்டத்தின் கீழ் ஏகாதிபத்தியமே பல தேச இனவிடுதலைப் போராட்டங்களை நலனிற்கு பயன்படுத்துவதையும் இப்போராட்டங்களுக்கு தலைமை தாங்குகின்ற முதலாளித்துவ சக்திகள் தங்களை அறியாமலே அதற்கு துணைபோவதையும் தான் நாம் இன்று காண்கிறோம்.

ஆகவே இன்றுள்ள இவ்வாறான ஒரு தேக்க நிலையில் எமது மக்கள் முன் உள்ள கேள்வி என்னவென்றால் எமது புதிய பாதை என்ன என்பதே?


இன்றுள்ள சூழலில் சிங்களப் பெருந்தேசியவாதம் சிங்களப் பயங்கரவாதமாக வளர்ந்துள்ள நிலையில் அதன் பின்னணியில் ஏகாதிபத்தியம் உள்ள நிலையில் மக்கள் முன்னுள்ள ஒரே வழி இனங்களின் தேசிய சுதந்திரத்தை சுயநிர்ண உரிமையை அங்கீகரிக்கிற ஏகாதிபத்தியத்திற்கும், சிங்களப் பெருந்தேசியவாதத்திற்கும், 'தமிழ் குறுந்தேசியவாதத்திற்கும் எதிரான ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணியாகத் திகழ்வதாகும்.

**தேசபக்தன்**

நன்றி - நூலகத்திட்டம்



## வாசகர் செ(ா)ல்லடி



# சிங்களப் பேரினவாதக் குரங்கிடம் தராசைக் கொடுத்தது முஸ்லீம் காங்கிரஸ்தான்!

இலங்கை முஸ்லிம்களின் தேசியத் தானைத் தலைவரெனத் தன்னைத்தானே வரிந்து கொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் அவர்களும், அவரது சகபாடிகளும் அண்மையில் வெளியிட்டுவரும் கருத்துக்கள் அவர்களினது அரசியலுக்குத் தொடர்பில்லாத விசித்திரங்களைப் புலப்படுத்துவதாக இருப்பினும், இவை பற்றிய தீர்க்கமான உண்மைகளையும், விமர்சனங்களையும் எண்ணிப் பார்க்காத பாமர ஏழைகளும், வாய்களுக்குப் பூட்டுப் போடப்பட்ட புத்திஜீவிகளும் எம்மிடையே இருக்கத்தான் செய்கின்றனர்!

ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் மு.கா. மூத்த துணைத் தலைவர் மருதூர்க்கனி அவர்கள் பொலநறுவை மாவட்ட முஸ்லிம் மக்களிடையே, "விடுதலைப் புலிகளுடைய நியாயமான, தமிழ்த் தேசியவாதப் போராட்டத்தை எதிர்ப்பதற்கு, முஸ்லிம் மக்களுக்கு எந்தவித அவசியமும் இல்லை" என்று பிரச்சாரம் செய்து வருகின்றார்.

இவர் கூறுகிற இந்தக் கூற்று உண்மையில் வரவேற்கக் கூடியதே! ஆயினும், இப்படி மேடைகளில் முழங்குபவர்கள், அரசியல் ரீதியாகத் தங்களது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ளவும் வேண்டுமே? விடுதலைப் புலிகளுடைய போராட்டம் நியாயமாக இருக்கும் பட்சத்தில், பேரினவாத அரசியலின் மந்திரிப் பதவிகளுக்கும், மற்றும் சலுகைகளுக்கும் விலைபோன முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிரான அடக்கு முறைகளுக்கும், வன்முறைகளுக்கும் பேரினவாத அரசோடு கைகோர்த்து இணைந்து கொண்டு நாட்டில் அவசர காலச் சட்டத்தை அமுல்படுத்தவும், தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் துணைபோவதில் என்ன நியாயம் இருக்கின்றது? இப்படிப்பட்டவர்களுக்கு, விடுதலைப் புலிகளினுடைய நியாயமான தமிழ்த் தேசியவாதப் போராட்டங்களை விமர்சனம் செய்வதற்கு என்ன யோக்கியம் இருக்கின்றது?

இவர் இப்படிக் கூறுவது உண்மையெனில், உடனடியாகத் தாம் சார்ந்துள்ள பேரினவாதக் கட்சிகளுக்கான தமது ஆதரவுகளை நீக்கிக். கொண்டு, இவர்களால் சுயாதீனமாகக் குரலெழுப்ப முடியுமா? தமிழர்களானாலும், சிங்களவரானாலும் மாய்ந்து, மடிந்து போகும் மனித நேயமற்ற யுத்தத்திற்கு எதிராக இவர்களால் கோஷமெழுப்ப முடியாதா?

அண்மையில், காரைதீவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தானைத் தளபதி அஷ்ரஃப் அவர்கள் "சிங்களப் பேரினவாதக் குரங்கிடம் தராசைக் கொடுத்துவிட்டு, நீதிக்கும், நியாயத்திற்கும் அலைந்து திரிகின்றோம்" எனக் கூறி இருக்கின்றார். உண்மையில் யார்? சிங்களப் பேரினவாதக் குரங்கிடம் கொடுத்தது? வடக்குக் கிழக்கு மாகாண முஸ்லிம்கள், தமது வாக்குகளை மு. காவுக்குத் தாரை வார்த்தார்களே! அந்த வாக்குப் பலத்தைத் தன்மானமற்ற முறையில், பேரினவாதச் சிங்களக் குரங்குப் பிசாசுகளிடம் விற்று, வயிறு வளர்த்து வருகின்ற முஸ்லிம் காங்கிரஸ் தான் "சிங்களப் பேரினவாதக் குரங்கிடம் தராசைக் கொடுத்ததென்றால் அது மிகையல்லவே!

முஸ்லிம் மக்கள் ஏகோபித்து மு. காவுக்கு வாக்களித்தது, பேரினவாதத்திற்குத் துணைபோவதற்கல்ல. மாறாக, வடக்குக் கிழக்கில் ஒரு சுமூகமான, சுபீட்சமான வாழ்நிலைச் சூழலைக் கருத்திற் கொண்டு தான் வாக்களித்தனர். முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கு, மண் போட்டுவிட்டுப் பேரினவாத அரசியலில் பங்காளியாவதற்கு ஒருபோதும் முஸ்லிம் மக்கள் வாக்களிக்கவில்லை! இதனை முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவமும், மற்றவர்களும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்!

நாட்டில் அவசர காலச் சட்டத்திற்குப் பாராளுமன்றத்தில் ஆதரவாகக் கை உயர்த்துவது, வடக்குக் கிழக்கில் யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்குப் பேரினவாத அரசுக்கு உடந்தையாய் இருப்பது, நியாயமற்ற கைதுகளுக்கும், இனப்படுகொலைகளுக்கும் எதிராகக் குரலெழுப்பாது மௌனித்திருப்பது, பாமர மக்களிடையே பசப்பு வார்த்தைகளைப் பரப்பி அவர்களைக் கிளர்ந்தெழச் செய்வது போன்ற முஸ்லிம் காங்கிரசினது தான் தோன்றித்தனமான செயல்களால், வட, கிழக்கில் முஸ்லிம், தமிழ் மக்களிடையே இன விரிசலும், விசனமும் வியாபித்துக் கொண்டு போகின்றதேயொழிய, முஸ்லிம் மக்கள் எதிர்பார்த்தவாறான ஒரு ஆரோக்கியமான வாழ்நிலைச் சூழலை, வடக்குக் கிழக்கில் மட்டுமல்ல நாடளாவிய ரீதியில் முஸ்லிம் காங்கிரசால் உருவாக்குவதென்பது புதிய நூற்றாண்டிலும் முயற்கொம்பாகவே தான் இருக்கப் போகின்றது என்பதில் எதுவித சந்தேகங்களும் இல்லை என்று தான் சொல்லத் தோன்றுகிறது.

***– கருங்கொடிப்பட்டன்***

# குறைத்து மதிப்பிட வேண்டாம்!

பெண்கள் அமைப்புப் பற்றி சூரியகுமாரி, தேவகௌரி, சரவணன் எழுதிய கட்டுரையில் செல்வி திருச்சந்திரன், ரூபவாஹினியில் இருந்தபொழுது செய்த விடயங்களின் தாற்பரியத்தைக் குறைத்து மதித்து விட்டார்கள். எனவே இந்தச் சிறு தகவல் குறிப்பு.

அவர் சாதித்தவற்றை மூன்று வகைப்படுத்தலாம். ஒன்று, முஸ்லிம்களுக்கு எதிரான இனத்துவப் போக்கு அடிக்கடி சிங்கள நாடங்களில் வருவதைக் கண்டித்துப் பணிப்பாளர் சபையில் அதை எடுத்துக் கூறி, அதை அகற்றுவதற்கு வழிகள் அமைத்தார். நுஃமானும், அவரும் பணிப்பாளர் அமைப்பில் பல அரிய மாற்றங்களைக் கொண்டுவர எவ்வளவோ பாடுபட்டுச் சில வெற்றிகளும் ஈட்டியுள்ளனர்.

இரண்டாவது, தமிழ்ச் சேவையில் பணி செய்வோருடன் செல்வி திருச்சந்திரன் ஒரு உரையாடலைத் தோற்றுவித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்து, அதை நிவர்த்தி செய்ய எவ்வளவோ முயன்றார். அவர்களின் நன்மதிப்பையும் பெற்றார். அவரின் வருகை, அவர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. தமிழ் நிகழ்ச்சிகள் முழுவதும் திருத்தியமைக்கப் பல வழிகளைக் கூறிக் கலை, இலக்கியம், பெண்நிலை நோக்கு, சமூக அரசியல், அறிவியல் பற்றிய கலந்துரையாடல், மலையக, மட்டக்களப்பு நாட்டுக் கூத்துப் போன்றவற்றை உள்ளடக்கிப் பல வகைக் கற்கை நெறிப் பாங்குகளைப் புகுத்துவதற்கு ஒரு திட்டக் கோவை, அவராலும், தமிழ்ச் சேவை அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடனும் உருவாக்கப்பட்டது. அது நிறைவேற்றப்படுமுன் அவரது பதவிக் காலம் முடிவடைந்து விட்டது. அந்தத் திட்டக் கோவைக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அவரது முயற்சியாலுமேயே இந்தத் திட்டம், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றது.

மூன்றாவதாக, பெண்நிலை நோக்கில், பெண் சமத்துவம் பேணப்படுவதற்கு அவரது காலத்திலேயே அவரால் மறுபாதி என்றொரு நிகழ்ச்சி முதன்முதலில் ரூபவாஹினியால் தொடக்கப்பட்டது. ஏனைய பல பெண்நிலைவாதிகளையும் ஒன்று சேர்த்துக் கலந்துரையாடல்கள், நாடகம் போன்றவை மாதந்தோறும் நடத்தப்பட்டன. இது தொடரப்பட்டால் நிச்சயமாகச் சமுதாயத்தில் அந்த நிகழ்ச்சிகள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். தற்போது சற்சொரூபவதி போன்றோரால் நடத்தப்படும் பெண்கள் பற்றிய கலந்துரையாடலைப் பார்ப்போர் இந்த அவலத்திற்கும், அந்த மறுபாதி நிகழ்ச்சிக்கும் உள்ள வித்தியாசத்தை அறியாத மூடரா?

இந்த விடயங்களைக் கூறி, மதிப்பு அளிக்கத் தகுந்தோருக்கு மதிப்பு அளிக்க வேண்டும். அவர்களை நாம் குறைத்து மதித்து, அநீதிக்குத் துணைபோகக் கூடாது என்ற நோக்கிலேயே இதை எழுதுகின்றேன். இங்கு கூறப்பட்ட முதல் இரண்டு விடயங்களும் ரூபவாஹினியிலிருப்போரால் எனக்கு, எப்போதோ கூறப்பட்டவை. நான் கூறுவதை அவர்களும் கட்டாயமாக ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகின்றேன்.

***தவராஜா, கொழும்பு–08.***

# நாம் அரசாங்கத்துக்கு...

உறுப்பினர்களில் 6 பேரைத்தவிர 6 பேர் ஒதுங்கிய நிலையில் உள்ளனர். இருவர் இந்தியாவில் உள்ளனர். நிவாஸ் என்கின்ற ஒரு தோழர் மட்டுமே எஞ்சியுள்ளார். அவரும் சுரேஷின் கருத்தினை ஏற்கவில்லை. எனவே பெரும்பான்மையான அரசியல் குழு உறுப்பினர்களும் மத்திய குழு உறுப்பினர்களும் நான் நீக்கப்பட்டதை ஏற்றுள்ளனர் என்பது சுத்த ஏமாற்றுத்தனமாகும்.. மேலும் இம்மத்தியக்குழு, அரசியல்குழு என்பவை கூட காலாவதியானவையே. பிராந்தியக் குழுக்களின் நிலையும் இதுதான். கட்சி விரைவில் தனது காங்கிரசைக் கூட்டும். அதன் பின்னர் தான் கட்சிக்கு சட்டபூர்வமான அதிகாரம் கிடைக்கும். அதுவரை யாருக்கும் சட்டபூர்வமான அதிகாரம் இல்லை. 1997 ஜனவரியின் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் பதவிநிலையில் உள்ளவர் என யாரும் கிடையாது.

**இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள்?**

1999 மார்ச் மாதம் மத்தியகுழு உறுப்பினர்கள் அனைவரும் கடந்தகால நிலைமைகள் பற்றி ஆராய்வதற்கு ஒரு விசாரணைக் கமிட்டியை அமைத்தோம். காங்கிரஸ் கூடுவதற்கு என ஒரு குழுவையும் அமைத்தோம். இவையெல்லாவற்றையும் செயற்படுத்துவது சுரேஷின் கடமை என்றும் முடிவுசெய்தோம். அரசியல் முடிவுகளை அவர் தனித்து எடுக்க முடியாது. அரசியல் குழு தான் எடுக்கும் என்றும் தீர்மானித்தோம். ஒவ்வொரு இருபது நாளுக்கும் ஒருதடவை அரசியல் குழுக்கூட்டம் கூட்டப்பட வேண்டுமெனவும் மூன்று அரசியல் குழுக்கூட்டங்களுக்கு ஒருதடவை மத்தியக்குழுக்கூட்டம் கூட்டப்படுதல் வேண்டும் எனவும் முடிவு செய்தோம்.

ஆனால் அதற்குப்பிறகு அரசியல் குழுகூட கூட்டப்படவில்லை. தீர்மானங்கள் எவையும் அவருக்கு சாதகமாக இல்லாததினாலேயே அரசியல்குழுக்கூட்டம் கூட்டப்படவில்லை. தீர்மானங்களில் முக்கியமானது கட்சியின் நிதி சொத்துக்கள் எல்லாம் கட்சியின் நிதிக்குழுவிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். சொத்துக்கள் வங்கியில் வைப்பிலிடப்படல் வேண்டும். தனிநபரிடம் இருக்கக்கூடாது. இது அவருக்கு ஏற்றதாக இல்லை. தனிநபராக சொத்துக்களை ஆள்வதையே அவர் விரும்புகின்றார். தனக்கு வசதிப்பட்டவர்களுக்கு கொடுத்து வசதிப்படாதவர்களுக்கு கொடுக்காமல் விட்டே கட்சியை அவர் நடாத்த விரும்புகிறார். ஒரு ஒழுங்குமுறைக்குள்ளும் அவர் வரத்தயாராக இல்லை. இதுவரை அவர் நிதி தொடர்பாக மத்தியகுழுவுக்கு கணக்குக் காட்டவுமில்லை. அவற்றை நிதிக்குழுவிடம் ஒப்படைக்கவுமில்லை. அவருக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லை என்பதுதான் இங்கு பிரதான விடயம். காங்கிரசினால் உருவாக்கப்பட்ட அமைப்பு விதிகள் கூட காங்கிரஸ் முடிந்து ஆறு வருடங்களின் பின்னர் நான் வந்துதான் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்தது.

**மாகாணசபை ஆட்சிக்காலத்தில் கட்சிக்குக் கிடைத்த கோடிக்கணக்கான பணம் பற்றி மத்தியகுழுவிடம் கேட்டபோதுகூட நீங்கள் பதிலளிக்—கவில்லையென சுரேஷ் குற்றம் சாட்டுகின்றாரே.**

மாகாணசபைக் காலத்தில் நிதி எங்கிருந்து வந்தது என்பது தெரியக்கூடாது என்பதற்காக ஒரு சில குறிப்பிட்ட ஆட்கள் மட்டுமே நிதியை வைத்திருப்பது வழக்கம். அந்த நிதிக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. மாகாணசபைக்கு கொடுத்த நிதியெல்லாம் கட்சிக்குக் கொடுக்கப்பட்டதல்ல. நான் இலங்கையை விட்டுப் போகும்போது கட்சி உறுப்பினர்களுக்கு முன்னால் தான் ஐந்து உடுப்பு பைகளுடன் சென்றேன். எனக்கு இதுவரை ஒருவங்கிக் கணக்குக்கூட கிடையாது.

**இந்த நிதிபற்றி மத்திய குழுவில் கேட்டபோது நீங்கள் பதில் அளிக்கவில்லை என சுரேஷ் கூறுகின்றாரே.**

இது தவறு. பதில் கொடுக்கப்பட்டது. இந்த விவகாரங்களையெல்லாம் குறிப்பாக கடந்த கால நிதி விவகாரங்களையெல்லாம் ஆய்வு செய்து காங்கிரசிற்கு அறிக்கை கொடுப்பதற்காக ஒரு நிதிக்குழுவே உருவாக்கப்பட்டது. மாகாணசபை காலத்தில் எல்லாம் நிதி வந்தது எனக் கூறப்படுகின்றது. உண்மையில் அந்த நிதியில் தான் இன்றுவரை கட்சி ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த பத்து வருடகாலமாக கட்சிக்கு யாரும் நிதி தரவில்லையா? அவை எதுவும் கட்சியில் ஒப்படைக்கப்படவில்லையே. இந்த விவகாரங்களையெல்லாம் ஒழுங்குபடுத்துவதற்காகவே நிதிக்குழு உருவாக்கப்பட்டன. நிதி நிர்வாக ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டது. கட்சியின் செயலாளர் நாயகமாக இருந்தாலும் வேறுயாராக இருந்தாலும் அவர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்பட வேண்டும் என்பது நிதிக்குழுவினாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும். அது அரசியல் குழுவினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு துறையினரும் தமக்கான வரவு செலவுத்திட்டங்களை முன்கூட்டியே தெரியப்படுத்த வேண்டும் என்றெல்லாம் ஒழுங்குவிதிகளில் கூறப்பட்டிருந்தது. அவை எவற்றையும் இவர் செய்யவில்லை. கட்சியினுடைய எந்த ஸ்தாபன வேலையையும் அவர் செய்யவில்லை. அவரைப் பொறுத்தவரை இரண்டு விடயங்கள் அவருக்கு சாதகமாக உள்ளது. ஒன்று செயலாளர் நாயகத்தை கட்சியை விட்டு நீக்க வேண்டுமாயின் கட்சியின் பெரும்பான்மை அதனை அங்கீகரிக்க வேண்டும். அது தற்போது இல்லை. சாதாரண பொரும்பான்மையாயின் அவர் எப்போபோயிருப்பார். மற்றையது செயலாளர் நாயகத்திற்கு ஒரு மத்திய குழு உறுப்பினரை இடைநிறுத்தி வைக்க அதிகாரம் உண்டு. இவற்றைவிட மற்றைய விடயங்கள் எல்லாம் எங்கே? செயலாளர்நாயகத்திற்கு எவ்வளவு கடமைகள் உள்ளன. மூன்று மாதத்திற்கு ஒரு தடவை மத்தியகுழு கூட்டப்படல் வேண்டும். 20 நாட்களுக்கு ஒரு தடவை அரசியல் குழு கூட்டப்பட வேண்டும். அவை எதுவும் நடைபெறவில்லை. தான் தான் செயலாளர் நாயகம். தான் தான் நிதி. இரண்டு வருடமாக நிதிச் செயலாளராக மட்டக்களப்பைச் சேர்ந்த ரட்ணம் என்பவர் இருந்தார். ஒரு சதமும் அவருடைய நிர்வாகத்தில் ஒப்படைக்கப்படவில்லை. கட்சிக்கென அரசாங்கத்திடமிருந்து சாராயத்தவறணை பெறப்பட்டது. அதிலிருந்து வருமானம் வருகிறது. கட்சியின் நிதிப்பலத்தினைப் பெருக்குவதற்காகவே பெறப்பட்டது. ஆனால் அதிலிருந்து ஒரு சதமும் க்ட்சிக்கு வருவதில்லை. எல்லாவற்றையும் அவரே எடுக்கின்றார். அரசாங்கத்திடம் நிதி பெற்று மட்டக்களப்பு வாவி வீதியில் ஒரு பங்களாவே கட்டி வைத்திருக்கின்றார். போய்ப்பார்த்தால் உங்களுக்குத் தெரியும். மீன்பிடி அமைச்சில் ஆலோசகர் பதவிக்காக பல பத்தாயிரம் ரூபா வாங்கி வருகின்றார். கட்சியின் பெயரால் பல பக்கங்களிலிருந்தும் நிதி வாங்கி தனது பொக்கற்றுக்குள்ளேயே போட்டுக் கொண்டு வருகின்றார்.

உண்மையில் இவையெல்லாம் வெளியில் சொல்லப்படவேண்டிய விடயங்கள் அல்ல. கட்சிக்குள்ளேயே தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள். மக்களுக்கு இவ்விடயங்களினால் எவ்வித பிரயோசனமும் இல்லை. அவர்கள் இது தொடர்பாக அக்கறைப்படவுமில்லை.

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## நாம் செய்ய வேண்டியது என்ன?

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் இரண்டு வாரங்களே இருக்கின்றன.

வழமை போல தேர்தல் வன்முறைகள் நாடுபூராவும் மிகவும் மோசமாக நடந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அரசாங்க தரப்பின் தேர்தல் பிரச்சாரங்களுக்காக அரச வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதிகார துஷ்பிரயோகம் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்றின்படி கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனத்திற்கு சொந்தமான வாகனங்கள் தேர்தல் வேலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதால், ரூபா 30,000 மாத வாடகையில் அது பன்னிரண்டு வாகனங்களை பெற்றுக் கொள்ள வேண்டியேற்பட்டுள்ளதாக தெரியவருககிறது.

இந்தத் தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்பதற்காக அரசாங்கம் படாதபாடு பட்டு வருகிறது. இந்த ஜனாதிபதி தேர்தலில் இன்றைய ஜனாதிபதி வெற்றி பெறுவாரென்றால் அதன் பிறகு பாராளுமன்ற தேர்தல் நடாத்தப்படமாட்டாது என்றும் அரசாங்க வட்டாரங்களில் இருந்து கசிந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக சந்திரிகாவிடம் தீவிரமான இனவாதப் பேச்சுக்கள் வெளிப்படையாக வெளிப்படத் தொடங்கியுள்ளன. நாட்டை பிரபாகரனுக்கு தாரை வார்த்துக் கொடுக்க ரணில் தயாராகிவிட்டார் என்ற சந்திரிகாவின் குற்றச்சாட்டு வீரவிதான பாணியிலான இனவாதக் குற்றச்சாட்டாக வெளிப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மலையக தமிழ் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளோ ஜனாதிபதி தேர்தலில் ஆளுங்கட்சியையும் எதிர்க் கட்சியையும் ஆதரித்து நிற்கின்றன. அல்லது இரண்டு கட்சிகளையும் ஆதரிக்க மறுக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணி நிண்ட விவாதங்கள், கருத்து வேறுபாடுகளின் பின் இரு பிரதான கட்சிகளையும் ஆதரிப்பதில்லை என்று முடிவெடுத்துள்ளது. ஈ.பி.டி.பி சந்திரிகாவையும் ரெலோ ரணிலையும் ஆதரிப்பதாக அறிவித்துள்ளன. மலையகத்தில் இ.தொ.கா சந்திரிகாவையும் சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணி ஐ.தே.கவையும் ஆதரிப்பதாக அறிவித்திருக்கின்றன. முஸ்லிம்களின் வாக்குகளை பெற்றுத்தர சந்திரிகாவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் பொறுப்பெடுத்துள்ளது.

சந்திரிகாவிற்கு முஸ்லிம் வாக்குகளை பெற்றுத்தர அஷ்ரப்பும், தமிழ் வாக்குகளை பெற்றுத்தர ஈ.பி.டி.பி, வரதர் கூட்டும் மலையக வாக்குகளை பெற்றுத்தர இ.தொ.கவும் தரகுப் பொறுப்பெடுத்துள்ளன. ரணிலுக்கும் இவ்வாறு தரகர்கள் அணி சேர்த்துள்ளார்கள்.

இரண்டு தலைவர்களுமே தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குப்பலத்தில் தமது பேரினவாத அதிகாரத்தை நிலை நிறுத்த தீவிரமாக முயன்று வருகின்றனர். ஆனால் இவ்விரு தலைவர்களில் எவருமே அம்மக்களது பிரச்சினைகள் குறித்து உண்மையான அக்கறையை வெளிப்படுத்தியதாக வரலாறு இல்லை.

கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியின் போது ஜனநாயகம், அரசியல் உரிமை, அடிப்படை மனித உரிமைகள் அனைத்தையும் தனது நிறைவேற்று ஜனாதிபதி பதவி அதிகாரத்தைப் பயன்படுத்திப் பறித்தெடுத்த சந்திரிகா இன்னொரு ஐந்தாண்டு காலத்திற்கு அப்பணியை தொடர ஆதரவு தருமாறு கோருகின்றார்.

ஐ.தே.க ஆட்சிக்காலம் முழுவதும் தமிழ், முஸ்லிம் மக்கள் அனுபவித்த துன்பதுயரங்களும் அதன் பேரினவாத நிலைப்பாடும் புதிதாக சொல்ல வேண்டியதில்லை.

ஒருபுறம் இந்தத் தேர்தல் ஒரு மோசடி. தனது அதிகாரத்தை தொடர ஜனாதிபதி நடாத்தும் நாடகம். தனது சட்ட விரோத மோசடியை எப்படியாவது நடைமுறைப்படுத்துவது என்பதற்காக அனைத்து மோசடிக் கும்பல்களையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டுள்ளார் ஜனாதிபதி. கள்ளவோட்டுக்கும் ஆள் மாறாட்டத்திற்கும், சண்டித்தனத்திற்கும் இப்போதே வேண்டியளவு தயார்ப்படுத்தல்கள் தயாராகிவிட்டிருப்பதாக தெரிய வருகிறது.

மறுபுறத்தில் இது ஒடுக்கப்படும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு எந்த விமோசனத்தையும் தராத அவர்களை மேலும் நசுக்க புதிய அங்கீகாரத்தை கோரிநிற்கிற ஒரு தேர்தல்.

இன்னொரு வகையில் இந்தத் தேர்தல் இலங்கையின் முதலாளித்துவ ஜனநாயக வாய்ப்பை குழி தோண்டிப் புதைப்பதற்கான அத்திவாரமாகவும் அமைகிறது.

ஆகவே இத்தகைய சட்டவிரோத, மோசடி ஜனநாயக விரோத தேர்தலில் பங்கேற்று நாமும் நடக்கப் போகும் குற்றங்களுக்கு துணைபோக வேண்டுமா?

எங்கள் வாக்குகளை போடுவதற்குமுன் இக்கேள்வியை எங்களை நோக்கியே நாம் கேட்டுக்கொள்வது நலம்.


அப்போது என்னசெய்ய வேண்டும் என்பது எமக்குப் புரியும்!

## ஜனாதிபதித் தேர்தலும் தமிழ்க்கட்சிகளும்

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு முயன்று, தம்மிடையே ஒருமைப்பாடு காண்பதில் தவறிப் போன தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் கூட ஏகோபித்த நிலைப்பாடொன்றை எடுக்க முடியாமல் தங்கள் "அரசியல் இருப்புப்" பார்வைக் கூடாகப் பலவிதமான முடிவுகளை எடுத்துத் தமிழ் மக்களைக் குழப்பத்தில் தவிக்க வைத்துள்ளன.







"பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது" என்ற எண்ணமே "இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும்" தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றியே வந்திருக்கின்றன. இவர்களுக்கு வாக்களிப்பதால் பயனில்லை. மாறாகத் தமிழ் வாக்குகளை ஒன்று திரட்டி இவர்களுக்கு விழாத வகையில் விடுவிப்பதன் மூலம் தமிழ் மக்களின் எதிர்ப்பை இவற்றுக்கு உணர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் உருவானது தான்.

பொது வேட்பாளர் என்ற எண்ணக் கருவை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளிடமிருந்து தான் போட்டியிடுவதற்கான சமிக்ஞையைப் பெற்றுக் கொள்ளலாம் என எதிர்பார்த்தனர். அரசியல் வார்த்தை ஜாலங்களில் எவ்விதக் கரிசனையுமற்ற விடுதலைப் புலிகள் எந்த அரசியல்வாதியேனும் தங்கள் அன்பைப் பெற்றவர் போல் தோற்றமளிப்பதைக் கூட விரும்பாத நிலையில் சமிக்ஞை கிடைக்காததால் பின்வாங்கினார். இதைத் தொடர்ந்து பொது வேட்பாளர் திட்டம் பிசு பிசுத்துப்போய்விட்டது. தமிழ் ஈழம் பற்றிப் பேசுபவர்கள், தமிழ் ஈழம் என்ற பெயரைத் தத்தமது அமைப்புக்களில் அலங்காரமாக வைத்துக் கொண்டவர்கள் தமிழீழத்தின் பேச்சாளர்கள் போல் தோற்றமளித்து விடுதலைப்புலிகளின் கண்ணசைவுக்காகக் காத்துக்கிடந்தவர்கள் ஸ்ரீ லங்கா-தமிழீழம் என்ற இரண்டு நாடுகள் இணைந்த நிலப்பரப்புக்கு ஜனாதிபதியாக வரத் துடித்ததில் ஏதாவது தார்மீக நியாயம் இருக்கிறதா? என்பது தமிழ் மக்களுக்குப் புதிராகவே இருக்கின்றது.

அந்த முயற்சிதான் தோல்வியில் முடிந்து விட்டது. அடுத்த கட்ட நடவடிக்கையாக ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதில் உடன்பாடு கண்டார்களா? என்றால் அதுவும் இல்லை.

இவர்கள் எடுத்த முடிவுகள் தமிழ் மக்களை நிலைக்களனாக வைத்து எடுக்கப்பட்டதா? என்றால் அதற்கும் "இல்லை" என்ற பதில்தான் கிடைக்கின்றது. ஒவ்வொரு கட்சியும், தனது கடந்தகால நடைமுறைகளையும், எதிர்காலத்தில் தாம் தப்பிப் பிழைப்பதற்கான வழிமுறைகளையும் பிரதான காரணிகளாகக் கொண்டே தமது முடிவுகளை வெளியிட்டு ஏதோ தமிழர்களை வழிநடாத்தும் பாரிய பொறுப்பிலிருந்து தாம் விலகாதவர்கள் போல் காட்டிக்கொள்ள முயல்கின்றன.

ஈ.பீ.டீ.பீ. ஒரு நிலைப்பாடு, ரெலோ ஒரு நிலைப்பாடு, புளொட் இன்னொரு நிலைப்பாடு, ஈ.பீ.ஆர்.எல்.எவ். அமைப்புச் செயலாளர் ஒரு நிலைப்பாடு, முன்னாள் முதல்வர் ஒரு நிலைப்பாடு, கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியான நிலைப்பாடு, பிறகு எல்லோரும் கூடி கட்சி எடுக்கும் புதிய நிலைப்பாடு என்ற வகையில் பலவித குழப்பங்கள். "தமிழ்க் கட்சிகளின் முடிவை அனுசரித்து ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கப் போகின்றேன்" என்று ஒரு தமிழன் தீர்மானம் கொள்வானானால் பாவம் அவன் மனநிலை பிசகித்தான் போகவேண்டியிருக்கும். நல்ல வேளை அநேகமாக எந்தத் தமிழ் மகனும் இவர்கள் முடிவைத் தன் முடிவாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதே உண்மை.

தமிழ்க் கட்சிகள் ஆதரித்தாலென்ன, எதிர்த்தாலென்ன இரண்டு பிரதான கட்சிகளின் வேட்பாளரில் ஒருவரே எதிர்கால ஜனாதிபதி. இரண்டு கட்சிகளும்-இரண்டு கட்சித் தலைவர்களும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை எந்த விதத்திலும் ஏற்றுக் கொண்டவர்களல்லர். மாறாக விடுதலைப்புலிகளுடன் பேசுவோம், இனப் பிரச்சினையைத் தீர்ப்போம் என்று அவர்கள் வைக்கும் தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் நிர்ப்பந்தங்களின் வெளிப்பா டேயன்றி, உள்ளத்தில் இருந்து வருபவையல்ல. எனவே இவர்களில் யார் வந்தாலும், தமிழ் மக்களின் துன்பங்கள் தொடர் கதைதான்.

"இந்த நிலையில் சரியான ஒரு முடிவைத் தமிழ் மக்களுக்கு ஏகோபித்து அறிவிக்க வேண்டிய தமிழ்க் கட்சிகள் அந்தப் பொறுப்பினின்று விலகித் தமக்கியைந்த வேட்பாளரைத் தமிழ் மக்களும் ஆதரிக்க வேண்டுமெனக் கேட்பது வேடிக்கையானது.

தமிழ்க் கட்சிகளின் இந்த முடிவை இரு வகைப்படுத்தலாம். பல கட்சிகள், இரண்டு கொடுங்கோலர்களில் ஒருவரை (தாம் குறிப்பிடுபவரை) ஆதரியுங்கள் என்று கேட்கின்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ.பீ.ஆர்.எல்.எவ். அமைப்பும் நீங்கள் விரும்பும் கொடுங்கோலரை ஆதரியுங்கள். அதற்கு உங்களுக்குச் சுதந்திரம் உண்டு என்கின்றன. எந்த முடிவும் "யார் கையால் தமிழ் மக்கள் அடிபட்டால் பரவாயில்லை" என்ற சமாதான ஆராய்ச்சியைத்தான் அமுல்படுத்துவதாக இருக்கிறது.

பொது வேட்பாளரை நிறுத்தத் துணிந்த கட்சிகளில் ஒன்றேனும் "தமிழ் மக்களே ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரியுங்கள்! அதனால் எங்களுக்கு விமோசனம் இல்லை. அடக்குமுறைக்கெதிரான எங்கள் எதிர்ப்பை உலகுக்கு உணர்த்துவோம்" என்ற அறைகூவல் விடவில்லையே என்பதுதான ஆதங்கம்.

இத்தகைய ஒரு அறைகூவலுக்கு, இந்தநேரம் துணியாதவர்கள் எந்தக் காலத்திலும் துணியப்போவதில்லை. பாவம் தமிழ் மக்கள்.

—திரிபுரன்—

சர்வதேச மனித உரிமைகள்தின விழா

டிசம்பர் 11ம் திகதி

**நுவரெலியாவில்...**

கண்காட்சி மக்கள் நூலகத்தில்...
வீதி நாடகம், பாடல், கலாசார நிகழ்வுகள்
மாலை 2.00 மணிக்கு
பாத யாத்திரை சினிசிட்டா
அரங்கிலிருந்து
மாலை 4.00 மணிக்கு
கூட்டம் மற்றும் பல் கலாசார விழா
தரிப்பிடத்திற்கு அருகில்

*மனித உரிமைகள்மற்றும் தேசிய நல்லிணக்கத்திற்கான குழு -நுவரெலியா*

வெளியிடுபவர்: ச.பாலகிருஷ்ணன், இல.18/02, அலோசாலை, கொழும்பு 03, அச்சுப்பதிவு:பிறின்ற்இன், இல.07,கெகட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 07.12.1999